# ஏதோ... நடக்கிறது!



ராஜேஷ் குமார்

http://www.pustaka.co.in

# ஏதோ... நடக்கிறது!

# Edho... Nadakirathu!

Author:

ராஜேஷ் குமார்

Rajesh Kumar

For more books

http://www.pustaka.co.in/home/author/rajesh-kumar-novels

**Digital/Electronic Copyright © by Pustaka Digital Media Pvt. Ltd.**

**All other copyright © by Author.**

All rights reserved. This book or any portion thereof may not be reproduced or used in any manner whatsoever without the express written permission of the publisher except for the use of brief quotations in a book review.

***

# ஏதோ... நடக்கிறது!

பொருளடக்கம்

அத்தியாயம் 1

அத்தியாயம் 2

அத்தியாயம் 3

அத்தியாயம் 4

அத்தியாயம் 5

அத்தியாயம் 6

அத்தியாயம் 7

அத்தியாயம் 8

அத்தியாயம் 9

அத்தியாயம் 10

அத்தியாயம் 11

அத்தியாயம் 12

அத்தியாயம் 13

அத்தியாயம் 14

அத்தியாயம் 15

அத்தியாயம் 16

அத்தியாயம் 17

***

# 1.

**நோபல் பரிசு 2011-ஆம் ஆண்டு மொத்தம் 13 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது. பௌதிகம், இரசாயனம், மருத்துவம், அமைதி, இலக்கியம், பொருளாதாரம்- இந்தத் துறைகளில் சாதனை புரிந்தவர்கள் பரிசு பெறும் நபர்களாகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்கள். பரிசுத்தொகை ஒவ்வொரு துறைக்கும் இந்திய மதிப்பில் ஏறத்தாழ ரூ. 7.5 கோடி. ஒரு துறையில் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டால் தேர்வுக் குழுவினர் அறிவிக்கும் விகிதத்தில் அது பிரித்து வழங்கப்படும்.**

அமிர்தவர்ஷிணி ‘ஜுபிடர் டி.வி.’ ஸ்டேஷனுக்குள் நுழைந்தபோது காலை பதினோரு மணி. மாம்பழ வண்ணப் பட்டுப்புடவை. நெற்றியில் மின்னும் ஒரு பெரிய குங்குமப் பொட்டோடு காரிலிருந்து இறங்கியவளுக்கு டி.வி. ஸ்டேஷன் எம்.டி. குகன் ஒரு பெரிய பொக்கேயைக் கையில் கொடுத்து சால்வையைப் போர்த்தினார்.

“வெல்கம் மேடம்!"

“ஸாரி மிஸ்டர் குகன்... வீட்ல இருந்து சீக்கிரமாய்த்தான் புறப்பட்டேன். வர்ற வழியில் டிராஃபிக்."

"நோ ப்ராப்ளம் மேடம்! நீங்க எங்க டி.வி. ஸ்டேஷன் வர ஒத்துக்கிட்டதே பெரிய விஷயம். வீ ஹானர்ட் பை யூ...”

“உள்ளே போலாமா?”

"ப்ளீஸ்..."

குகன் அமிர்தவர்ஷிணியை அழைத்துக் கொண்டு உள்ளே போனார்.

ஸ்டேஷனின் வரவேற்பறையே அமிர்தவர்ஷிணிக்குப் பிரம்மாண்டம் காட்டியது. ஒரு சிறிய மைதானம் போன்ற ஹால். எல்லாத் திசைகளிலும் கண்ணாடிச் சுவர்கள். ஏ.ஸி.யின் குளிர். மெலிதான இசை.

அமிர்தவர்ஷிணி நடந்துகொண்டே கேட்டாள். "இந்த ஜுபிடர் டி.வி. ஆரம்பிச்சு எத்தனை வருஷம் இருக்கும் மிஸ்டர் குகன்?"

“மூணு வருஷம் மேடம்...!”

“இந்த மூணு வருஷகாலத்தில் டி.ஆர்.பி. ரேட்டிங்கில் நீங்கதான்

முதலிடம் போலிருக்கு..."

"ஆமாம் மேடம்...!”

“பெரிய சாதனைதான். இந்தச் சாதனையை உங்களால எப்படி அடைய முடிஞ்சுது?”

“ரொம்பவும் சிம்பிள் மேடம்...! பொதுவா டி.வி.யை ‘இடியட் பாக்ஸ்’ன்னு சொல்லுவாங்க. அதை நாங்க விஸ்டம் பாக்ஸாய் மாத்தினோம். மத்த டி.வி. சானல்கள் சினிமாவுக்கும், சீரியல்களுக்கும் எழுபத்தைஞ்சு சதவீதம் முக்கியத்துவம் குடுப்பாங்க. இருபத்தைஞ்சு சதவீதம் பொதுநலன் சார்ந்த விஷயங்களுக்கு முக்கியத்துவம் குடுப்பாங்க. ஆனா நாங்க பொதுநலன் சார்ந்த விஷயங்களுக்கு தொண்ணூறு சதவீதம் ஒதுக்கி, வெறும் பத்து சதவீதம் மட்டுமே சினிமாவுக்கும் சீரியல்களுக்கும் ஒதுக்கியிருக்கோம்.

“இதன் காரணமாய்த்தான் மக்கள் எங்களுடைய ஜூபிடர் டி.வி.யை விரும்பிப் பார்க்கிறாங்க. நாங்க ஒளிபரப்பற எல்லா நிகழ்ச்சிகளும் டி.ஆர்.பி. ரேட்டிங்கில் நம்பர் ஒன்னில் இருக்கு. மக்களுக்கு வேண்டியது சீரியல்கள் இல்லை. அவர்களைப் பாதிக்கிற சீரியஸான விஷயங்கள்தான்!”

“குட்... நல்ல கான்செப்ட்! இதே மாதிரியான எண்ணம் மற்ற டி.வி. சானல்காரர்களுக்கும் வந்தா பரவாயில்லை. நாட்டுக்குச் சுதந்திரம் கிடைச்ச நாளான ஆகஸ்ட் பதினைந்தாம் தேதியும், காந்திஜி பிறந்த நாளான அக்டோபர் இரண்டாம் தேதியும் விடுமுறை நாட்களாய் இருக்கிற காரணத்தினால்தான் அதை மக்கள் மறக்காம இருக்காங்க... இல்லேன்னா என்னிக்கோ அந்தத் தேதிகளை மக்கள் மறந்து போயிருப்பாங்க..."

“யூ ஆர் கரெக்ட் மேடம்! இந்தியா - பாகிஸ்தான் கிரிக்கெட் மேட்ச் நடக்கும்போது மட்டும்தான் இன்றைய இளைஞர்களுக்கு நாட்டுப்பற்று வரும். அதுக்கப்புறம் அது காணாமப் போயிடும். நாடு நல்லா இருந்தாத்தான் ஒவ்வொரு வீடும் நல்லாயிருக்கும் என்கிற உணர்வை இளைய சமுதாயத்துக்கு ஊட்ட வேண்டிய கடமை எங்களைப் போன்ற மீடியா பீப்பிளுக்கு நிறையவே உண்டு.

“சமீபத்தில் கூட புதுசா ஒரு நிகழ்ச்சியை ஸ்டார்ட் பண்ணியிருக்கோம். முழுக்க முழுக்கக் கல்லூரி மாணவர் மாணவியர்க்கான நிகழ்ச்சி. நிகழ்ச்சியோட தலைப்பு: ‘எட்டாத தூரம் என்று எதுவும் இல்லை.’ "

“இஸிட்! தலைப்பு நல்லாயிருக்கு... என்னிக்கு டெலிகாஸ்ட்?”

“ஒவ்வொரு சண்டேயும் காலை பதினோரு மணிக்கு!”

“அவசியம் நான் பார்க்கிறேன்...”

இருவரும் பேசிக்கொண்டே நடந்தார்கள். லிஃப்டில் பயணித்து மூன்றாவது மாடிக்கு வந்து அந்தப் பெரிய அறைக்குள் நுழைந்தார்கள். பெப்பர்மின்ட் வாசனையோடு ஏ.சி. குளிரில் இருந்தது அறை.

“மேடம் இதுதான் என்னோட பர்சனல் ரும். ஒரு டென் மினிட்ஸ் இங்கே உட்கார்ந்து ரெப்ரெஷ் பண்ணிட்டு ஒரு காப்பி சாப்பிட்டுப் போலாமா?”

"வேண்டாம் மிஸ்டர் குகன்! நான் காப்பி, டீ, கூல்டிரிங்க்ஸ் சாப்பிடறதை விட்டு ரொம்ப நாளாச்சு. நேரா சூட்டிங் ஸ்பாட்டுக்குப் போயிடலாம்.”

"மேடம்! நிகழ்ச்சிக்குப் போறதுக்கு முந்தி இந்த 'டாக் ஷோ’வை நடத்தற நீலவண்ணக் கண்ணன் உங்ககிட்ட ஒரு ரெண்டு நிமிஷம் பேசணும்னு சொன்னார்.”

"தாராளமாய்ப் பேசலாம்."

"ப்ளீஸ்... உட்காருங்க மேடம்!"

அமிர்தவர்ஷிணி உட்கார்ந்தாள்.

குகன் மேஜை மீது இருந்த இன்டர்காம் ரிசீவரை எடுத்துப் பேச... அடுத்த சில விநாடிகளில் அந்த இளைஞன் உள்ளே வந்தான். கறுப்பு நிற ஃபுல்கட்டில் சிவப்பு டை அணிந்து ஒரு ஹீரோவுக்குரிய ஹேண்ட்ஸம் காட்டினான்.

“வணக்கம் மேடம்!"

“வணக்கம்.”

அவன் பவ்யமாய் நின்றபடி பேசினான். "மேடம்... இந்தக் ‘குறையொன்றும் இல்லை!’ என்கிற இந்த டாக்-ஷோ நீங்க பார்த்திருக்கீங்களா?”

“ஒரே ஒரு தடவைதான் பார்த்தேன். அதுவும் ஒரு அஞ்சு நிமிஷம்தான். அதுக்கப்புறம் வேற ஒரு வேலை வந்துட்டதால தொடர்ச்சியாய்ப்

பார்க்க முடியலை. ஸாரி டு ஸே திஸ்...!"

"பரவாயில்லை மேடம்...! இன்னிக்கு நீங்க இந்தக் ‘குறையொன்றும் இல்லை' நிகழ்ச்சியின் சீஃப் கெஸ்ட். ஒரு பிரபலமான கல்லூரியில் சைக்காலஜி புரஃபசராய் ஒர்க் பண்ற நீங்க மனிதனின் உளவியல் பற்றி நிறையப் புத்தகங்கள் எழுதியிருக்கீங்க... அதுல எனக்குப் பிடித்த ஒரு புத்தகம் ‘தி டீப் சைலன்ஸ் ப்ளேஸ் இன் திஸ் வேர்ல்ட்.’ அந்தப் புத்தகத்தைப் படிச்ச பின்னாடிதான் எனக்கு இப்படியொரு ‘டாக்-ஷோ’ பண்ணணும்னு தோணிச்சு. உடனே எம்.டி.கிட்ட சொன்னேன். அடுத்த விநாடியே அவர் ஓ.கே. சொல்லிட்டார்.

"கடந்த ஒரு வருஷ காலமாய் இந்த டாக்-ஷோ நடத்தப்பட்டு வருது. இது நூறாவது ஷோ. இந்த நூறாவது ஷோவுக்கு உங்களைச் சிறப்பு விருந்தினராய் அழைக்கணும்னு ஆசைப்பட்டேன். அந்த ஆசை இப்போ நிறைவேறியிருக்கு. மேடம்! இன்னும் கொஞ்ச நேரத்துல நாம் டாக்-ஷோ நடக்கிற அரங்கிற்குப் போகப் போறோம். அந்த அரங்கில் மொத்தம் நூறு பேர் இருக்காங்க. இதில் முப்பது பேர் பெண்கள். அந்த நூறு பேரையும் இரண்டு பிரிவாய் பிரிச்சிருக்கேன்.

"இதில் ஒரு பிரிவு ‘ஒரு மனிதன் மனநோயாளியாய் மாறுவதற்குக் காரணம் அவனுக்குள் ஏற்படும் பாதிப்புகள்தான்’னு வாதாடப் போறாங்க. இன்னொரு பிரிவு ‘ஒரு மனிதன் மனநோயாளியாய் மாறுவதற்குக் காரணம் அவனுக்குள் இருக்கும் மரபணுதான்’னு எதிர்த்து வாதாடப் போறாங்க. இந்த இரண்டு பிரிவோட வாதங்களையும் கேட்டு எது சரின்னு தீர்ப்பு சொல்ல வேண்டியது உங்க பொறுப்பு மேடம்...!”

அமிர்தவர்ஷிணி புன்முறுவலித்தாள்.

"இதைத்தான் நீங்க பத்து நாளைக்கு முன்னாடியே போன்ல பேசும்போது சொல்லிட்டீங்களே?”

"நான் அன்னிக்குச் சொல்லாத ஒரு விஷயமும் இன்னிக்கு இருக்கு மேடம்...”

“என்ன விஷயம்?”

“அரங்கில் இருக்கிற அந்த நூறு பேரில் பதினோரு பேர் போன வருஷம் மனநோயாளிகளாய் இருந்து இந்த வருஷம் குணமான நபர்கள்.”

அமிர்தவர்ஷிணி லேசாய் முகம் மாறினாள். “மனநோயாளிகளாய்

இருந்த நபர்களா?"

"ஆமா மேடம்!"

"எத்தனை பேர்ன்னு சொன்னீங்க?"

"பதினோரு பேர்."

"இதில் பெண்கள்?"

"இருக்காங்க... மூணு பேர்."

"அவங்க கூட யாராவது வந்திருக்காங்களா?"

"இல்லை மேடம்!"

"மனநோயாளிகளாயிருந்த அந்தப் பதினோரு பேரும் முழுமையாய் குணமாயிட்டாங்களா?"

"ஆயிட்டாங்க மேடம்!"

"அதை எப்படி உறுதிப்படுத்திக்கிட்டீங்க?"

"அந்தப் பதினோரு பேரும் டாக்டர்ஸ் சர்டிஃபிகேட்களோடு வந்திருக்காங்க."

"நீங்க மனநோயாளிகள்ன்னு சொன்ன பதினோரு பேரோடும் உதவிக்கு யாராவது வந்திருக்காங்களா?"

"இல்லை மேடம்!"

"இட்ஸ் ஓ.கே. வாங்க... போகலாம்!"

"மேடம்! உங்களுக்கு ஏதாவது இதில் ஆட்சேபணை இருக்கா? உங்களுக்கு விருப்பம் இல்லாத பட்சத்தில் அந்தப் பதினோரு பேரையும் எலிமினேட் பண்ணிடலாம்."

"வேண்டாம்... இருக்கட்டும். விவாதம் நடக்கும்போது மட்டும் அவங்க எமோஷனல் ஆகாதபடிக்குப் பார்த்துக்கிறது நல்லது. ஏன்னா... பொதுவாய் மனநோயாளிகள் நூறு சதவீதம் குணமாகறது இல்லை. ஒரு பத்து சதவீதமாவது அந்தப் பழைய தாக்கம் இருக்கும். அது எந்த நேரத்திலும் வெளிப்படலாம். அப்படி வெளிப்படற நேரத்தில் அவங்களைக் கட்டுப்படுத்தறது ரொம்பவும் கஷ்டம்."

"அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை ஏற்படாமல் நான் பார்த்துக்கிறேன்

மேடம்!"

"தென்... நோ ப்ராப்ளம். வாங்க... போகலாம்.”

குகனுக்கும் நீலவண்ணக் கண்ணனுக்கும் நடுவில் நடந்தாள் அமிர்தவர்ஷிணி. நான்கைந்து அறைகளைக் கடந்ததும் ஒரு விக்கெட் டோர் குறுக்கிட்டது.

நீலவண்ணக் கண்ணன் அதைத் திறந்தான்.

உள்ளே -

கண்ணைப் பறிக்கும் வர்ணஒளிச் சிதறல்களோடு ஒரு பெரிய மெகா அரங்கம் பார்வைக்குக் கிடைத்தது.

அரங்கத்தின் இரண்டு பக்கங்களிலும் காலரிகள் தெரிய, அதில் ஆண்களும் பெண்களும் கலந்து உட்கார்ந்திருந்தார்கள். காற்றில் சளசளவென்ற பேச்சுச் சத்தம். நான்கைந்து கேமிராக்கள் கோணம் பார்த்துக் கொண்டிருந்தன. இரண்டு கண்களும் விரிய, அமிர்தவர்ஷிணி அரங்கைப் பார்த்துப் பிரமித்தாள்.

“ஏதோ ஒரு புதிய உலகத்துக்கு வந்தது போலிருக்கு."

குகன் புன்னகைத்தார். "இதை நிர்மாணிக்க இருபது லட்சம் செலவாச்சு மேடம்! ஒரு நிகழ்ச்சி வெற்றியடைய இது மாதிரியான அரங்குகளும் தேவை. இது ஒரு தவிர்க்கமுடியாத தண்டச் செலவு.”

இன்னமும் அமிர்தவர்ஷிணி வியப்பில் இருக்க... நீலவண்ணக் கண்ணன் சொன்னான். "மேடம்! அதோ அந்த இருட்டில் இருக்கிற நாற்காலியில் போய் நீங்க உட்காரணும். நான் உங்களை டி.வி. நேயர்களுக்கு அறிமுகப்படுத்தியதும் உங்க மேலே ஸ்பாட் லைட் விழும். வெளிச்சம் உங்க மேல விழுந்ததுமே நீங்க ஒரு சிரிப்போடு கையைக் கூப்பிக்கிட்டே மேடைக்கு வந்து அந்தச் சிவப்பு நிற வெல்வெட் நாற்காலியில் உட்காரணும்.”

அமிர்தவர்ஷிணி சிரித்தாள். "நான் என்ன சினிமா நடிகையா? இந்த பந்தா எல்லாம் வேணுமா?”

"இது பந்தா இல்லை மேடம்... ஒரு டாக்-ஷோவுக்குத் தேவையான புரோட்டோ கால்.”

“ஓ.கே. நான் போய் அந்தச் சேர்ல உட்கார்றேன்..."

“நிகழ்ச்சி இப்போ ஆரம்பிக்குது மேடம்...!” - நீலவண்ணக் கண்ணன்

சொல்லிக் கொண்டே கேமிராமேன்களுக்கு கையைக் காட்டிவிட்டுக் கையில் மைக்கோடு அரங்கின் மையத்துக்குப் போய் நின்று கொண்டான். வெளிச்சம் அவனை அலம்ப - குரலை உயர்த்தி மைக்கில் பேச ஆரம்பித்தான்.

“வணக்கம் நேயர்களே! உங்கள் ஜூபிடர் டி.வி.யின் ‘குறையொன்றும் இல்லை’ நிகழ்ச்சியின் நூறாவது எபிசோட் இது. ஒரு படம் நூறு நாள் ஓடினால் அது வெற்றிப்படம் என்று சொல்வார்கள். அந்த அடிப்படையில் பார்த்தால் இதுவும் ஒரு வெற்றிகரமான நிகழ்ச்சி. இந்த நிகழ்ச்சியின் மூலம் இதுவரை தொண்ணூற்றொன்பது பிரச்சனைகளைக் கையில் எடுத்துக் கொண்டு விவாதித்து அந்தப் பிரச்சனைகளுக்குரிய தீர்வுகளைச் சொல்லியிருக்கிறோம்.

"மருத்துவர்கள், பொறியியல் நிபுணர்கள், சட்டவல்லுநர்கள் என்று எத்தனையோ வி.ஐ.பி.க்களை இந்தக் ‘குறையொன்றுமில்லை...’ அரங்கிற்கு வரவழைத்து அவர்கள் சொன்ன அரிய கருத்துக்களையெல்லாம் லட்சக்கணக்கான வீடுகளுக்குக் கொண்டு போய்ச் சேர்த்திருக்கிறோம். இன்றைக்கு நாம் இந்த நூறாவது நிகழ்ச்சியில் மனரீதியான ஒரு பிரச்சனையை விவாதிக்க இருக்கிறோம்.

“அதாவது ‘ஒரு மனிதன் மனநோயாளியாய் மாறுவதற்குக் காரணம் அவனுக்குள் ஏற்படும் பாதிப்புக்களா - இல்லை அவனுக்குள் இருக்கும் மரபணுவா?’ என்ற ஒரு கேள்வியை முன் வைத்துக் கொண்டு இங்கே அரங்கில் அமர்ந்திருக்கும் இரண்டு பிரிவினர் வாதாடப் போகிறார்கள். வாதம் செய்யும்போது ஆணித்தரமான ஆதாரங்கள் இருக்க வேண்டுமே தவிர ஆவேசம் இருக்கக் கூடாது. யாருடைய மனமும் புண்படும்படி பேசக்கூடாது. இது ஒரு அன்பான எச்சரிக்கை. இந்த எச்சரிக்கையை மீறுபவர்கள் அரங்கிலிருந்து வெளியேற்றப்படுவார்கள். ஒருவர் பேசும்போது குறுக்கே பேசக் கூடாது. முக்கியமாக இந்த நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினர் பேசும்போது மௌனமாய் இருக்க வேண்டும். மாற்றுக்கருத்து சொல்ல வேண்டும் என்று நினைப்பவர்கள் மெல்லக் கையை உயர்த்த வேண்டும். சிறப்பு விருந்தினர் யாருக்கு அனுமதி தருகிறார்களோ அவர்கள் பேச எழுந்து நிற்க வேண்டும். எதைப் பேசுவதாக இருந்தாலும் ஒரு நிமிட நேரத்திற்குள் பேசி முடித்துவிட வேண்டும்.

“சிறப்பு விருந்தினர் ஒரு கருத்தை வலியுறுத்திச் சொன்ன பிறகு அதை மறுத்தோ எதிர்த்தோ பேசக் கூடாது. அவருடைய தீர்ப்பே இறுதியானது. இன்றைய நிகழ்ச்சிக்குள் நாம் நுழைவதற்கு முன்னால்

நமது சிறப்பு விருந்தினர் யார் என்பதையும், அவரைப் பற்றிய விபரங்களையும் உங்களோடு பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

"நாற்பத்தொன்று வயது நிரம்பிய திருமதி அமிர்தவர்ஷிணி, ஒரு தனியார் கல்லூரியில் உளவியல் பேராசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார். இவருடைய கணவர் கனடா நாட்டுப் பல்கலைக்கழகம் ஒன்றில் வேளாண்மைத்துறை சம்பந்தப்பட்ட ஒரு ஆராய்ச்சியில் ரிசர்ச் ஸ்காலராக உள்ளார். இந்த அறிவார்ந்த தம்பதிகளுக்கு ஒரே ஒரு மகன். அவர் ஆஸ்திரேலியாவில் தகவல் தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றில் படித்துக் கொண்டிருக்கிறார்.

“திருமதி அமிர்தவர்ஷிணி உளவியல் பேராசிரியராக இருப்பதால் அவர் அந்தத் துறையில் தன்னை மேம்படுத்திக் கொண்டு நிறையப் புத்தகங்கள் எழுதியுள்ளார். மனிதனின் மனநலம் பாதிப்புக்குள்ளாக என்ன காரணங்கள் என்பதையும் எப்படிப் பாதுகாத்துக் கொள்ளலாம் என்பதையும் ஒரு ஆராய்ச்சிக் கட்டுரையாக எழுதி அதை ‘WHO’ எனப்படும் வேர்ல்ட் ஹெல்த் ஆர்கனைசேஷனுக்கு அனுப்பியுள்ளார். அந்த அமைப்பு அதை அங்கீகரித்து உலகத்தில் உள்ள எல்லா மொழிகளிலும் மொழி பெயர்த்து சிறு சிறு புத்தகங்களாக வெளியிட்டுள்ளது.”

அரங்கத்தில் கைத்தட்டல் எழுந்து பத்து விநாடி நேரம் நீடித்துப் பின் அடங்கியது.

நீலவண்ணக் கண்ணன் தொடர்ந்தான்.

“ஒரு நல்ல விரிவுரையாளர்; ஒரு அற்புதமான கட்டுரையாளர்; ஒரு நல்ல பேச்சாளர் - இன்றைக்கு நம்முடைய அரங்கத்திற்கு வந்துள்ளார். அவரை ஜூபிடர் டி.வி. வரவேற்று மகிழ்கிறது. இப்போது அவர் மேடைக்கு வருகிறார்." - பேசி முடித்த அடுத்த விநாடியே அரங்கம் இருளில் மூழ்கியது. ஒரு ஸ்பாட் லைட்டின் வெளிச்ச வட்டம் அரங்கின் ஒரு கார்னரில் இருந்து உற்பத்தியாகி இருட்டில் உட்கார்ந்திருந்த அமிர்தவர்ஷிணியின் மேல் விழுந்தது.

அமிர்தவர்ஷிணி கை கூப்பிக் கொண்டே எழுந்தாள். மேடையை நோக்கி நடந்தாள். அவள் நடக்க நடக்க... கூடவே ஸ்பாட் லைட்டின் வட்ட வெளிச்சமும் அவளைத் தொடர்ந்தது.

ஆரவாரத்தோடு - அரங்கில் கைத்தட்டல் எழுந்தது.

அமிர்தவர்ஷிணி மெல்ல நடந்து நாற்காலியில் போய் உட்காரும்

வரை தொடர்ந்த வெளிச்ச வட்டம் பிறகு மெல்ல நகர்ந்து நீலவண்ணக் கண்ணன் இருந்த இடத்தை நோக்கி நகர்ந்தது.

வெளிச்சம் விழுந்த இடத்தில் –

நீலவண்ணக் கண்ணன் இல்லை. அவன் நின்றிருந்த இடம் வெறுமையாய் இருக்க... ஒட்டுமொத்த அரங்கமும் திகைத்தது.

‘நீலவண்ணக் கண்ணன் எங்கே?’

சேனலின் எம்.டி. குகன் கத்தினார்.

"லைட்ஸ் ஆன்...!"

அடுத்த விநாடியே... அரங்கத்தின் மேற்கூரையிலும், பக்கவாட்டுச் சுவர்களிலும் பொருத்தப்பட்டிருந்த விளக்குகள் கண் திறந்து பார்க்க... இப்போது அரங்கு முழுவதும் வெளிச்சம்.

குகனின் பார்வை அரங்கு முழுவதும் பதட்டமாய் அலைந்தது. இடது பக்கச் சுவரோரமாய் அவரின் பார்வை சென்றபோது விழிகள் திகைத்தன.

நீலவண்ணக் கண்ணன் குப்புற விழுந்திருந்தான். உடம்பில் அசைவில்லை.

முதுகில் கத்தி சொருகியிருக்க -

அணிந்திருந்த கோட்டு முழுவதும் ரத்தம்.

ஒட்டுமொத்த அரங்கமும் உறைந்து போக - குகன், நீலவண்ணக் கண்ணனின் அருகே ஓடிப் போய் மண்டியிட்டு உட்கார்ந்தார். உடம்பைப் புரட்டினார்.

உடல் நிலைத்த விழிகளோடு திரும்பியது.

***

# 2.

**2011-**ஆம் ஆண்டுக்கான மருத்துவப் பிரிவில் மனித உடலின் நோய் எதிர்ப்புச் சக்தி பற்றிய கண்டுபிடிப்புக்காக மூன்று பேருக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது**.** மூன்று பேரில் முதலாவது நபர் ப்ரூஸ் ப்யூட்லர்**.** இவர் கலிபோர்னியா ஆய்வுக்கழகப் பேராசிரியர்**.** வயது **54.** இரண்டாவது நபரின் பெயர் ஜீல்ஸ் ஹாப்மேன்**.** இவர் பிரான்ஸில் உள்ள அறிவியல் அகாடமியின் சேர்மன்**.** ஸ்ட்ராஸ்பார்க் யூனிவர்சிடியில் ஆராய்ச்சிப் பட்டம் பெயற்றவர்**.** பரிசுக்குரிய மூன்றாம் நபரின் பெயர் ரால்ஃப் ஸ்டெய்ன்மன்**.** இவர் மருத்துவத் துறைக்கு **'**டென்ட்ரிக் செல்**'** என்னும் வார்த்தையை அறிமுகப்படுத்தியவர்**.** இந்த மூன்று பேருக்கும் நோபல் பரிசு பிரித்து வழங்கப்பட்டது**.** இதில் ஒரு சோகச் சம்பவமும் உண்டு**.**

பூஜையறையிலிருந்து வெளிப்பட்டார் ஹரிஹரசுதன். ஐம்பது வயது. ஆறடி உயரம். சிவப்பு நிறம். நீள்வட்ட முகத்தில் எடுப்பான நாசி. சீராய் சீவப்பட்ட தலைமுடி. நெற்றியில் சந்தனப் பொட்டு. வெற்று மார்பில் புரளும் துளசி மணிமாலை. கட்டியிருந்த வேஷ்டியிலும், போர்த்தியிருந்த துண்டிலும் 'சுவாமியே சரணம் அய்யப்பா' என்று அச்சிடப்பட்ட வாசகங்கள்.

அவருடைய மனைவி தங்கம் எதிர்ப்பட்டாள்.

"என்னாங்க!"

"சொல்லு..."

"உங்களைப் பார்க்கிறதுக்காக நம்ம கிராமத்திலிருந்து பெரியவங்க ஏழெட்டுப் பேர் வந்திருக்காங்க..."

"அடடே! எப்ப வந்தாங்க?"

"ஒரு அரைமணி நேரம் இருக்கும்."

"நீ உடனே வந்து சொல்ல வேண்டாமா?"

"எப்படிங்க சொல்றது? நீங்க பூஜை ரூம்ல இருந்தீங்க...!"

"சரி... சரி! வந்தவங்களுக்கு ஏதாவது சாப்பிடக்குடுத்தியா?"

"டிபன் சாப்பிடலாம்ன்னு சொன்னேன். வேண்டாம்ன்னு சொல்லிட்டாங்க...!"

“சரி... காப்பியாவது கொண்டா! நான் போய் அவங்களைப் பார்க்கிறேன்.”

ஹரிஹரசுதன் வேக வேகமாய் வரவேற்பறையை நோக்கிப் போனார். வரவேற்பறையில் சோபாவிலும், நாற்காலியிலும் நெருக்கியடித்தபடி உட்கார்ந்திருந்த அந்தக் கிராமத்து நபர்கள் கும்பிட்டுக் கொண்டே எழுந்து நின்றார்கள்.

"அய்யா... வணக்கம்!"

“வணக்கம்... வணக்கம். ரொம்ப நாளைக்கு அப்புறம் எல்லாரும் ஒண்ணாச் சேர்ந்து வந்திருக்கீங்க? ஏதாவது விசேஷமா?”

"ஆமாங்கய்யா...!"

“மொதல்ல எல்லாரும் உட்காருங்க. அப்புறம் யாராவது ஒருத்தர் நிதானமாய் விஷயத்தைச் சொல்லுங்க..."

எல்லோரும் உட்கார்ந்தார்கள். பெரிய நரைமீசை வைத்த ஒருவர் தொண்டையைக் கனைத்துக் கொண்டு மெதுவாய்ப் பேச்சை ஆரம்பித்தார்.

“அய்யா...! போன வாரம் கேரளாவிலிருந்து பிரசன்னம் பார்க்கிற ஒரு நம்பூதரி வந்திருந்தார். அவர் நம்ம ஊர் வடிவாம்பிகை அம்மன் கோயிலைப் பார்த்துட்டு, ‘இந்தக் கோயில்ல இருக்கிற அம்பாளுக்குப் பூரண சக்தியில்லை. அப்படிப் பூரண சக்தி இல்லாமல் போறதுக்குக் காரணம் இந்தக் கோயில் வாஸ்துப்படி கட்டப்படலை’ன்னு சொன்னார். அப்புறம் கோயில் வாசலிலேயே சோழிகளை உருட்டிப் போட்டு பிரசன்னம் பார்த்தார். அப்படிப் பிரசன்னம் பார்த்ததுல ஒரு செய்தி வந்தது அய்யா...!"

“என்ன செய்தி?”

“கோயிலுக்கு ராஜகோபுரம் இல்லை. அதை மொதல்ல கட்டணும். அப்புறம் உள்ளே இருக்கிற சின்னக் கோபுரத்தையும் சீரமைக்கணும். இப்ப இருக்கிற மதில் சுவரை இடிச்சுட்டு நாலடி தள்ளிக் கட்டணும்."

ஹரிஹரசுதன் தன் இடது கையின் ஆட்காட்டி விரலால் நெற்றியைத் தேய்த்துக் கொண்டே கேட்டார்.

“யார் அந்த நம்பூதரி?”

"எர்ணாகுளத்தில் இருக்கார். பேரு நாராயண நம்பூதரி. பிரசன்னம்

பார்க்கிறதுல கெட்டிக்காரர். அவர் பிரசன்னம் பார்த்துச் சொன்னா அது சரியாய் இருக்கும்..."

"சரி...! ஊர்ப் பெரியவங்க எல்லாரும் சேர்ந்து என்ன முடிவு பண்ணியிருக்கீங்க?"

“நம்பூதரி சொன்னபடி பண்ணிடலாம்ன்னு... கிராமத்துல ஒரு கூட்டம் போட்டு முடிவு பண்ணிட்டோம்."

“என்ன செலவாகும்ன்னு கணக்குப் போட்டுப் பார்த்தீங்களா?”

"ம்... பார்த்தோம். ராஜகோபுரம் கட்டறதுல பேர் போன ஸ்தபதி சித்தலிங்கய்யாவை தஞ்சாவூரிலிருந்து வரவழைச்சுப் பேசிப் பார்த்தோம். அவர் ஒரு கணக்குப் போட்டுக் கொடுத்தார். அவர் சொன்ன கணக்கைக் கேட்டு மிரண்டு போயிட்டோம்.”

"ராஜகோபுரம் கட்ட எவ்வளவு செலவாகும்ன்னு சொன்னார்?”

"அது... அது... வந்துங்கய்யா!”

"தைரியமாய்ச் சொல்லுங்க..."

“அறுபது லட்ச ரூபாய் ஆகும்ன்னு சொன்னார். அது தவிர... கோயிலைச் சீரமைக்கிறது, மதில் சுவரை இடிச்சுத் தள்ளிக் கட்டறது மாதிரியான வேலைகளுக்கு மேலும் சில லட்சங்கள் செலவாகும்ன்னு சொன்னார்.”

"நீங்க சொல்ற கணக்கைப் பார்த்தா செலவு ஒரு கோடிக்கும் பக்கத்துல வந்துடும் போலிருக்கே!”

"ஆமாங்கய்யா...”

“என்ன பண்ணலாம்ன்னு இருக்கீங்க?"

“கோயில் சார்பாய் ஒரு அறப்பணிக் குழுவை நியமிச்சு நன்கொடை திரட்டலாம்ன்னு ஒரு எண்ணம்!”

“அவ்வளவு பணத்தை உங்களால திரட்ட முடியுமா?”

“ஒரு நம்பிக்கைதான்! நம்ம கிராமத்தைச் சேர்ந்த நிறையப் பேர் இன்னிக்கு வசதியோடு இருக்காங்கய்யா...”

"வசதியோடு இருக்காங்க சரி... கொடுக்கிற மனசு அவங்ககிட்ட இருக்குமா?”

“அய்யா! நீங்க என்ன சொல்ல வர்றீங்க?"

"நீங்க யார்கிட்டயும் வசூலுக்குப் போக வேண்டாம். ஒரு கோடி ரூபாய் பணத்தை நானே தர்றேன்!”

“அ...அ...அய்யா!” - கிராமத்திலிருந்து வந்திருந்த அந்த ஒட்டுமொத்தக் கும்பலும் திகைத்தது. "உண்மையாவா சொல்றீங்க?”

“எனக்குப் பொய் சொல்லிப் பழக்கமில்லையே...!"

“ரொம்பவும் நன்றிங்கய்யா..."

ஹரிஹரசுதன் சிரித்தார். “அவசரப்பட்டு நன்றி சொல்லிடாதீங்க... நான் உங்களுக்கு ஒரு கோடி ரூபாய் தரணும்ன்னா நான் சொல்ற ஒரு நிபந்தனைக்கு நீங்க கட்டுப்படணும்...”

"நிபந்தனையா?”

"ம்...”

"சொல்லுங்கய்யா! என்ன நிபந்தனை?”

ஒரு சின்னப் புன்னகையோடு சொல்ல ஆரம்பித்தார் ஹரிஹரசுதன்.

***

# 3.

**மருத்துவத்துறையில் பரிசு பெற்ற மூன்று பேரில் ரால்ஃப் ஸ்டெய்ன்மன் எழுபது வயது நிரம்பியவர். ஹார்ட்வார்டில் டாக்டர் பட்டம் பெற்றவர். தன்னுடைய அறுபத்தாறாவது வயதில் இவர் கணையப் புற்றுநோயால் பாதிக்கப்பட்டார். கடந்த நான்குவருட காலமாய் நோயினால் அவதிப்பட்டு வந்தவர்... நோபல் பரிசு அறிவிக்க ஒரு வார காலம் இருக்கும்போது இறந்துவிட்டார். இவரது எந்தக் கண்டுபிடிப்புக்காக நோபல் பரிசு அறிவிக்கப்பட்டதோ... அதே டென்டிரியாடிக் செல்லை அடிப்படையாகக் கொண்ட செல் எதிர்ப்பு சக்தி முறையைப் பயன்படுத்தித்தான் இவருடைய வாழ்நாள் சிலகாலம் நீட்டிக்கப்பட்டது என்பது ஒரு ஹைலைட்டான விஷயம். 'ஒருவருடைய இறப்புக்குப் பின் - அவர் எவ்வளவு பெரிய சாதனையைச் செய்திருந்தாலும் - அவருக்குப் பரிசு வழங்கப்பட மாட்டாது...' என்பது நோபல் பரிசுக் குழுவின் முடிவு. ஆனால் ரால்ஃப் ஸ்டெய்ன்மன் விஷயத்தில் நோபல் பரிசுக் குழு அந்த விதியைப் பின்பற்றவில்லை. பரிசு வழங்க முடிவு செய்தனர். அது மட்டும் இல்லை. பரிசுத் தொகையில் 50 சதவீதம் இவருக்கு. மீதியை இரண்டு பாகமாய்ப் பிரித்து புரூஸ் ப்யூட்லர்க்கு 25 சதவீதமும், ஜீல்ஸ் ஹாஃப்மன்னுக்கு 25 சதவீதமும் பரிசுக் குழுவினர் வழங்கியுள்ளனர்.**

அரங்கம் அதிர்ந்து போயிருந்தது.

நீலவண்ணக் கண்ணனின் உடம்பிலிருந்து ரத்தம் இன்னமும் வழிந்து கொண்டிருக்க... குகன் பதட்டமாய் எழுந்து நின்று கத்தினார். குரல் வெடித்தது.

"செக்யூரிட்டீஸ்!"

திடகாத்திர உடம்புகளோடு க்ரே யூனிஃபார்மில் நான்கைந்து பேர் ஓடி வந்தார்கள். குகனைச் சுற்றி நின்றார்கள்.

"ஸார்!"

குகன் குரலை உயர்த்தினார். "இந்த அரங்கத்தை விட்டு வெளியே யாரும் போகாதபடி பார்த்துக்குங்க. அரங்கம் இருட்டாய் இருந்தபோது இங்கே இருக்கிற யாரோ ஒருத்தர்தான் இருட்டைப் பயன்படுத்திக் கத்தியால குத்திக் கொலை பண்ணியிருக்காங்க. போலீஸ் வர்ற வரைக்கும் யாரையும் வெளியே அனுப்ப வேண்டாம்!

யாராவது வெளியேற முயற்சி பண்ணினா அமுக்குங்க..."

“எஸ்... ஸார்!” - செக்யூரிட்டிகள் பிரிந்து நான்கு பக்கமும் பதட்டமாய் ஓட... மேடையில் உட்கார்ந்திருந்த அமிர்தவர்ஷிணி வியர்த்து வழிந்து கொண்டு வேக வேகமாய் ஓடி வந்தாள்.

"மிஸ்டர் குகன்! உடனடியாய் போலீஸுக்கு இன்ஃபார்ம் பண்ணுங்க. கொலை செய்த நபர் இந்த அரங்கை விட்டு அவ்வளவு சீக்கிரத்துல தப்பிச்சுப் போயிருக்க முடியாது. இந்த அரங்கில் இருக்கிற யாரோ ஒரு நபர்தான் இந்தக் கொடூரத்தைப் பண்ணியிருக்கணும்."

குகனின் உடம்பு மெலிதாய் நடுங்கிக் கொண்டிருந்தது. "மேடம்! ஐ... குட் நாட் கண்ட்ரோல் மை ஃபீலிங்க்ஸ். போலீஸுக்கு நீங்களே இன்ஃபார்ம் பண்ணிடுங்க..." - சொன்னவர் அப்படியே தளர்ந்து போய் அங்கிருந்த நாற்காலியில் சாய்ந்து கொண்டார். முகத்தில் வியர்வை நிற்காமல் வழிந்தது.

அமிர்தவர்ஷிணி தன் செல்போனை எடுத்தாள். “எனக்குப் போலீஸ் கமிஷனர் நல்ல பழக்கம். அவருக்கு நான் தகவல் சொல்லிடறேன்!” - சொல்லிக் கொண்டே எண்களை ஆட்காட்டி விரலால் ஒற்றி எடுத்தாள்.

மறுமுனையில் உடனே கிடைத்த கமிஷனர் பாலகோபாலோடு பேசினாள். முப்பதே விநாடிகளில் விஷயத்தைச் சொல்லிவிட்டு, செல்போனை அணைத்து விட்டு, குகனிடம் திரும்பினாள். பதட்டம் தணியாத குரலில் சொன்னாள்.

"அவரே புறப்பட்டு வந்துட்டிருக்கார் குகன்...”

"இப்படிப்பட்ட ஒரு பயங்கரம் எப்படி நடந்ததுன்னு தெரியலையே! நீலவண்ணக் கண்ணன் மேல யாருக்கு என்ன கோபம்?”

அமிர்தவர்ஷிணி குகனுக்குப் பதில் சொல்ல நினைத்து தலையை உயர்த்திய விநாடி, அவளுடைய பார்வைக்கு ரத்தம் தோய்ந்த நீலவண்ணக் கண்ணன் உடம்பு கிடைத்தது. பார்வை சிறிது சிறிதாய்த் திகைத்தது. ‘என்ன இது... நான் பார்ப்பது நிஜம்தானா?’ - அமிர்தவர்ஷிணி உற்றுப் பார்த்தாள்.

நீலவண்ணக் கண்ணனின் வலது கை விரல்கள் லேசாய் அசைந்து கொண்டிருந்தது.

“குகன்!” - அமிர்தவர்ஷிணி கத்தினாள் படபடப்பாய்.

“என்ன மேடம்?”

"நீலவண்ணக் கண்ணன் உடம்பில் இன்னமும் உயிர் இருக்கு. அவர் சாகலை. அதோ அவரோட கை விரல்கள் லேசாய் அசைஞ்சுட்டு இருக்கு... பாருங்க!”

வியப்பு உறைந்த விழிகளோடு குகன் பார்த்துவிட்டு முகம் மாறினார். மகிழ்ச்சியில் குரல் தெறித்தது. "அ...அ...அட.... ஆமாம்...!" - எழுந்து ஓடி நீலவண்ணக் கண்ணனின் உடம்பு அருகே போய் உட்கார்ந்தார். நாசியருகே கை வைத்துப் பார்த்தார். சுவாசம் மெலிதாய் வந்து கொண்டிருந்தது. தலையை உயர்த்தினார் குகன்.

ஒரு சின்னக் குழந்தையின் சந்தோஷத்தோடு கத்தினார். "தேங்க் காட்!” – அமிர்தவர்ஷிணியிடம் திரும்பினார்.

“மேடம்... டாக்டருக்குப் போன் பண்ணலாமா?”

“வேண்டாம்... உடனடியாய் பக்கத்தில் இருக்கிற ஒரு ஹாஸ்பிடலுக்குக் கொண்டு போயிடலாம். பக்கத்துல எந்த ஹாஸ்பிடல் இருக்கு?”

"சுதர்சனம் நர்ஸிங் ஹோம். ரெண்டாவது க்ராஸ்ல இருக்கு."

"அங்கே... கொண்டு போயிடலாம்! செக்யூரிட்டி யாரையாவது கூப்பிடுங்க..." - பதட்டமாய்ச் சுற்றும் முற்றும் பார்த்த குகன் மறுபடியும் குரல் கொடுத்தார்.

"செக்யூரிட்டி!"

சேனலின் செக்யூரிட்டி ஆட்களில் ஒருவர் எங்கிருந்தோ ஓடி வந்தார். “ஸார்! அரங்கோட எல்லாக் கதவுகளையும் அடைச்சுட்டோம். உள்ளேயிருந்து வெளியே யாரும் போகலை. வெளிப்பக்க கேட்டையும் பூட்டிட்டோம். கேட் செக்யூரிட்டியும் அலர்ட்ல இருக்காங்க...!"

"சரி...! நீயும் செக்யூரிட்டி தனசேகரனும் என்னோட காரை எடுத்துக்குங்க... நீலவண்ணக் கண்ணனை சுதர்சனம் ஹாஸ்பிடலுக்குக் கொண்டு போய் அட்மிட் பண்ணுங்க. போலீஸ் இப்போ இங்கே வந்துட்டு இருக்காங்க. நான் அவங்களைப் பார்த்துப் பேசிட்டுவர்றேன். லேட் பண்ணாதீங்க!”

"எஸ்... ஸார்!”

அடுத்த சில விநாடிகளில் இரண்டு செக்யூரிட்டிகள் நீலவண்ணக் கண்ணனைத் தூக்கிக் கொண்டு ஓடினார்கள்.

குகன் அமிர்தவர்ஷிணியிடம் திரும்பினார். வியர்த்த முகமாய் பெருமூச்சொன்றை வெளியேற்றிவிட்டுப் பேசினார்.

“மேடம்! நீங்க சரியான நேரத்தில் பார்த்தீங்க..."

"பை காட்ஸ் கிரேஸ்! கடவுளுக்கு நன்றி சொல்லணும்.”

“போலீஸ் வந்துட்டாப் பரவாயில்லை...”

"இன்னும் கொஞ்ச நேரத்துல வந்துடுவாங்க. கொலையாளி எப்படியும் தப்பிக்க முடியாது.”

அரங்கில் இப்போது அமைதி. எல்லோரும் நேர்பார்வை பார்த்தபடி உட்கார்ந்திருந்தார்கள். எல்லோருடைய முகங்களிலும் பயம் பரவியிருக்க... யாரும் பேசிக்கொள்ளவில்லை. விநாடிகள் கரைந்து கொண்டிருக்க... அமிர்தவர்ஷிணியின் செல்போன் வாயைத் திறந்தது.

எடுத்து அழைப்பது யார் என்று பார்த்தாள். ‘கமிஷனர் பாலகோபால்.’

“ஸார்! வந்துட்டு இருக்கீங்களா?”

“வந்துட்டு இருக்கேன்... நான் அங்கே வர்றதுக்கு முந்தி ஏரியா இன்ஸ்பெக்டர் எழில் வரதன் கான்ஸ்டபிள்களோடு வந்து சேர்ந்துடுவார். அரங்கில் இருக்கிற நபர்கள் யாரும் வெளியே போகலையே?”

“யாரையும் போக அனுமதிக்கலை ஸார்!"

"மொத்தம் எத்தனை பேர்?"

“நூறு பேர் ஸார். இதில் முப்பது பேர் பெண்கள்!”

"அந்த நூறு பேரும் இப்போ இருக்காங்களான்னு எண்ணிப் பார்த்துடுங்க."

“யாரும் தப்பிச்சுப் போக வாய்ப்பில்லை ஸார். சம்பவம் நடந்ததுமே செக்யூரிட்டிகள் எல்லாக் கதவுகளையும் அடைச்சுட்டாங்க..."

"குட் ஜாப்!”

"இன்னொரு விஷயம் ஸார்!”

"என்ன?"

"கத்தியால் குத்தப்பட்ட நீலவண்ணக் கண்ணன் உடம்பில் உயிர் இருந்தது ஸார்! செக்யூரிட்டிகள் அவரைப் பக்கத்தில் இருக்கிற சுதர்சனம் ஹாஸ்பிடலுக்குக் கொண்டு போயிருக்காங்க..."

"உயிர் பிழைக்க வாய்ப்பு இருக்கா?"

"விரல்களில் அசைவு இருந்தது ஸார்! டாக்டர்கள் எப்படியும் காப்பாத்திடுவாங்க என்கிற நம்பிக்கை எனக்கு இருக்கு. நீங்க இங்கே வந்த பிறகுதான் ஹாஸ்பிடலுக்குப் போகணும்..."

"ஓ.கே.! இன்ஸ்பெக்டர் எழில்வரதன் இன்னும் ஐந்து நிமிஷத்துக்குள்ளே அங்கே இருப்பார். கொலையாளியை எப்படியும் மடக்கிடலாம். டோண்ட் வொர்ரி!" - மறுமுனையில் பேசிய கமிஷனர் பாலகோபால் செல்போனை அணைத்து விட... அமிர்தவர்ஷிணி குகனிடம் திரும்பினாள்.

"கமிஷனர் பேசினார் குகன்...! டி.வி. நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வந்த அந்த பார்ட்டிசிபண்ட்ஸ் நூறு பேரும் இருக்காங்களான்னு எண்ணிப் பார்க்கச் சொல்றார்!"

"இஸிட்! அவர் சொல்றதும் சரிதான். எண்ணிப் பார்த்துடுவோம்..." என்று சொன்னவர் சற்றுத் தள்ளிக் கலவர முகத்தோடு நின்றிருந்த தன்னுடைய உதவியாளரைக் கூப்பிட்டார்.

"அஜய்!"

டை கட்டி உயரமாய் இருந்த அந்த இளைஞன் ஓடி வந்தான்.

"ஸார்!"

"பார்ட்டிசிபேண்ட்ஸ் நூறு பேரும் கேலரியில் இருக்காங்களான்னு எண்ணிப் பார்த்துடுங்க..."

"எஸ்... ஸார்!" - அஜய் தலையசைத்துவிட்டு கேலரியை நோக்கிப் போனான். இரண்டே நிமிஷத்தில் எண்ணி முடித்து விட்டு அவசர நடையில் குகனை நெருங்கினான்.

"ஸ்... ஸார்!" - குரலில் பதட்டம்.

"என்ன?"

"கேலரியில் 99 பேர்தான் இருக்காங்க ஸார். ஒரு ஆள் இல்லை..."

குகன், அமிர்தவர்ஷிணி - இரண்டு பேருமே திகைத்தார்கள். குகனின் விழிகள் பயத்தில் விரிந்தன.

“என்ன சொல்றே அஜய்? 99 பேர்தான் இருக்காங்களா?”

"ஆமா ஸார். பெண்கள் முப்பது பேர் இருக்காங்க. ஆண்கள்ல ஒருத்தர் இல்லை!"

“சரியாய் எண்ணிப் பார்த்தியா?”

“பார்த்தேன் ஸார்... வேணும்ன்னா மறுபடியும் ஒரு தடவை எண்ணிப் பார்த்துடறேன்..." - அஜய் நகர முயல... குகன் கையமர்த்தினான்.

“ஒரு வேலை செய்..."

"ப்ளீஸ் ஸார்!"

"அந்த நூறு பேரோட பெயர்ப் பட்டியல் உன்கிட்ட தானே இருக்கு?”

“ஆமா ஸார்!”

"அதைக் கையில் வெச்சுகிட்டு செக் பண்ணிடு... மிஸ்ஸானது யார்ன்னு தெரிஞ்சுடும்.”

"எஸ் ஸார்!"

அவசர நடையில் அஜய் நகர்ந்தான்.

***

# 4.

**2011**-ஆம் ஆண்டின் இயற்பியலுக்கான நோபல் பரிசு பெற்றவர்களும் மூன்று பேர்தான்**.** இந்தப் பிரபஞ்சம் **14** மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு எப்படி இருந்தது**?** இப்போது எப்படி இருக்கிறது**?** இனி எதிர்வரும் காலங்களில் எப்படி இருக்கும்**? -** போன்ற கேள்விகளுக்கு இந்த மூன்று பேரும் சரியான பதில்களைக் கண்டுபிடித்துள்ளார்கள்**.** இந்த மூன்று பேருமே அமெரிக்க விஞ்ஞானிகள்**.** முதலாவது நபரின் வபயர் சால் பேர்ல்மட்டர்**.** இவர் சூப்பர் நோவா புவி விஞ்ஞானத்தின் திட்டத் தலைவர்**.** இரண்டாவது நபர் ப்ரைன் வி**.**சுமித்**.** இவர் ஆஸ்திரேலியா பல்கலைக்கழகம் ஒன்றில் ஹை-இசட் ஆராய்ச்சி மையத்தின் தலைவர்**.** மூன்றாவது நபரின் பெயர் ஆதம் பால்டிமோர்**.** இவர் ஜான்ஸ் ஹாப்கின்ஸ் பல்கலைக்கழக வானியல் பேராசிரியர்**.**

ஹரிஹரசுதன் தனக்கு முன்னால் உட்கார்ந்திருந்த அந்த கிராமத்துப் பெரியவர்களைப் புன்சிரிப்போடு பார்த்துக் கொண்டே சொன்னார்.

"நிபந்தனைன்னு சொன்னதுமே என்னமோ ஏதோன்னு பயந்துடாதீங்க. நீங்க எல்லாரும் சந்தோஷப்படற மாதிரியான நிபந்தனைதான். சொல்லட்டுமா?”

"சொல்லுங்கய்யா...”

"நான் ஒரு கோடி ரூபாய் தர்றதா சொன்னேன். அந்தப் பணத்தை வெச்சுக் கோயில் கட்டக்கூடாது...”

“பின்னே?”

“ஒரு இன்ஜீனியரிங் காலேஜ் கட்டணும்..."

"அய்யா!”

“என்ன எல்லாரும் திகைச்சுப் போயிட்டீங்க...? நம்ம கிராமத்துல ஏற்கெனவே கோவில் இருக்கு. அதை இடிச்சுக் கட்ட வேண்டிய அவசியம் இல்லை. அதுக்குச் செலவு பண்ற பணத்தை வேற ஒரு நல்ல காரியத்துக்குப் பயன்படுத்தலாமே... நான் சொல்றது சரிதானே!"

கிராமத்துப் பெரியவர்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். சிறிது நேர மௌனத்துக்குப் பிறகு ஒருவர் மெல்ல வாயைத் திறந்தார்.

"அய்யா! நாங்க வந்தது தெய்வ காரியம். ஆனா நீங்க பேசிட்டு இருக்கிறது காலேஜ் கட்டறதைப் பத்தி...! கோவில் கட்டறதைப் பத்திப் பேசினா நல்லாயிருக்கும்.”

ஹரிஹரசுதன் கைகளைக் குவித்தார். “மன்னிக்கணும். நான் இப்ப சொல்லப் போறதை நீங்க தற்பெருமையாய் எடுத்துக்கிட்டாலும் பரவாயில்லை. உங்க எல்லாரையும் காட்டிலும் எனக்குக் கடவுள் மேல பக்தி அதிகம். வீட்டுக்குள்ளேயே ஒரு சின்னக் கோவில் மாதிரி ஒரு பூஜை ரூம் கட்டியிருக்கேன். இந்தப் பங்களாவுக்கு முன்னாடி இருக்கிற காலி இடத்துல அரச மரமும் வேப்ப மரமும் ஒண்ணாய் இருந்தது என்கிற காரணத்துக்காக அங்கே சின்னதா ஒரு ஆஸ்பெஸ்டாஸ் கொட்டகை போட்டுப் பிள்ளையாரைப் பிரதிஷ்டை பண்ணியிருக்கேன்.

"நான் தெய்வகாரியத்துக்கு எதிரானவன் அல்ல. நம்ம கிராமத்துல ஏற்கெனவே கோவில் இருக்கு. அது பழமையான கோவில். யாரோ ஒரு நம்பூதரி பிரசன்னம் பார்த்து வாஸ்து சரியில்லைன்னு சொன்னதுக்காக அதை இடிச்சுக் கட்டறது சரியில்லை. அந்தக் கோவில் அப்படியே இருந்துட்டுப் போகட்டும். அதுக்குப் பதிலாய் ஒரு இன்ஜீனியரிங் கல்லூரியைக் கட்டலாமே?”

வந்தவர்களில் சற்று இளமையாய் இருந்த ஒருத்தர் மெல்லக் குரல் கொடுத்தார். "அய்யா...! நீங்க சொல்றது ஒரு விதத்துல சரிதான்...! இருந்தாலும் இன்ஜீனியரிங் கல்லூரி கட்டறதுக்கு மொதல்ல நிலம் வேணும். அது இல்லையே?

ஹரிஹரசுதன் சிரித்தார். "என்னது! நிலம் இல்லையா? கையில் வெண்ணெய்யை வெச்சுக்கிட்டு நெய் இல்லைன்னு ஏன் சொல்லணும்? நம்ம கோவிலுக்குச் சொந்தமான பத்து ஏக்கர் நிலம் இருக்கும்போது என்ன கவலை? நீங்க எல்லோரும் கோவில் கமிட்டி மெம்பர்ஸ். நீங்க பார்த்து சரின்னு சொன்னா... காலேஜ் கட்டறதுக்கான பூமி பூஜையை போட்டு வேலையை ஆரம்பிக்க வேண்டியதுதான்...!"

“அய்யா...! நாங்க நிலத்தைத் தந்தாலும் ஒரு இஞ்ஜீனியரிங் காலேஜைக் கட்டறதுக்குக் கோடிக்கணக்கில் பணம் செலவாகும்."

"பணத்தைப் பத்தி நீங்க ஏன் கவலைப்படறீங்க? எவ்வளவு பணம் செலவானாலும் பரவாயில்லை. நான் பார்த்துக்கிறேன். நம்ம கிராமத்தைச் சுற்றி பத்து கிலோமீட்டர் சுற்றளவுக்கு எந்த இஞ்ஜீனியரிங் காலேஜும் இல்லை. அதனால அரசாங்கம் காலேஜ் கட்டறதுக்கான அனுமதியையும் சுலபமாய்க் கொடுத்துடும்.”

"இருந்தாலும்…"

"இதோ பாருங்க! ஒண்ணும் அவசரமில்லை. நிதானமாய் யோசனை பண்ணிச் சொல்லுங்க. அடுத்த வாரத்துல ஒரு நாள் வந்து உங்க முடிவைச் சொல்லுங்க. மேற்கொண்டு பேசுவோம்!" - சொல்லிவிட்டு ஹரிஹரசுதன் கைகளைக் கூப்பினார்.

***

# 5.

இயற்பியல் துறையில் நோபல் பரிசு பெற்ற மூன்று விஞ்ஞானிகளும் இந்தப் பிரபஞ்சத்தை ஆராய்ந்து கண்டுபிடித்த விஷயம் இதுதான்: "இந்தப் பிரபஞ்சம் புதிரானது. இதனுடைய 75% பரப்பு ப்ளாக் எனர்ஜி எனப்படும் கறுப்பு சக்தியாகவும், 20% பரப்பு புரிந்து கொள்ள முடியாத சக்தியாகவும் உள்ளது. மீதி உள்ள 5% பரப்பில்தான் 'மில்க்கி வே' எனப்படும் பால்வீதி மண்டலம் நட்சத்திரங்கள், அதைச் சுற்றியுள்ள கிரகங்கள், மனிதர்கள் போன்றவை அடங்கியுள்ளன."

இந்தப் பிரபஞ்சத்தில் இருந்து எத்தனையோ மில்லியன் ஒளியாண்டுகளுக்கு அப்பால் 50க்கும் மேற்பட்ட சூப்பர் நோவாக்கள் இருப்பதாகவும், அவை பலவீனமான வெளிச்சத்தை வெளிப்படுத்திக் கொண்டிருப்பதாகவும் இவர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

அஜய், கையில் பெயர்ப்பட்டியலை வைத்துக் கொண்டு, கேலரியில் உட்கார்ந்து கொண்டிருப்பவர்களை செக் செய்து கொண்டிருக்க... குகனும் அமிர்தவர்ஷிணியும் தவிப்போடு காத்திருந்தார்கள். இதயங்கள் உச்சகட்ட துடிப்பில் இருந்தன.

திடீரென்று குகனின் செல்போன் அழைத்தது.

குகன் எடுத்துக் காதில் பொருத்த - மறுமுனையில் செக்யூரிட்டி தனசேகரனின் குரல் கேட்டது.

"ஸார்... நான் தனசேகரன்!"

"ஹாஸ்பிடல் போய் சேர்ந்தாச்சா?"

"நீலவண்ணக் கண்ணனை அட்மிட் பண்ணிட்டோம் ஸார். அவரை ஐ.ஸி.யூக்குக் கொண்டு போயிட்டாங்க."

"டாக்டர் என்ன சொன்னார்?"

"ஒண்ணும் சொல்லலை ஸார்! ஐ.ஸி.யூ.விலிருந்து வந்த பின்னாடிதான் தெரியும்."

"சரி... ரெண்டு பேரும் அங்கேயே இருங்க. டாக்டர் ஏதாவது சொன்னா உடனடியா எனக்குப் போன் பண்ணுங்க. டாக்டர் வந்ததும் அவர்கிட்ட போனைக் குடுங்க. நான் பேசணும்..."

“எஸ் ஸார்!”

குகன் செல்போனை அணைத்து பாக்கெட்டுக்குள் போட்டுக் கொண்ட விநாடி... பின்னால் காலடிச் சத்தம கேட்டது.

திரும்பிப் பார்த்தான்.

ஒரு இன்ஸ்பெக்டரும் நான்கைந்து கான்ஸ்டபிள்களும் பார்வைக்குத் தட்டுப்பட்டார்கள்.

குகன் இன்ஸ்பெக்டரை நெருங்கினான்.

"அயாம் குகன். சேனல் எம்.டி!” கையை நீட்ட... இன்ஸ்பெக்டரும் கையை நீட்டினார்.

"அயாம் எழில் வரதன். இன்ஸ்பெக்டர். பி-12 ஸ்டேஷன். கமிஷனர் எனக்குத் தகவல் சொன்னார். உடனே புறப்பட்டு வர்றேன். இங்கே என்ன பிரச்சனை? என்ன நடந்தது?”

குகன் எல்லாவற்றையும் சொல்லி முடிக்க...

இன்ஸ்பெக்டர் எழில் வரதனின் உடம்பிலும் ஒருவிதப் பதட்டம் ஒட்டிக் கொண்டது.

“பார்ட்டிசிபண்ட்ஸ் நூறு பேர்ல ஒருத்தர் இல்லையா?”

"ஆமா... ஸார்!”

"ஆணா... பெண்ணா?”

"ஆண்! ஆள் யாருன்னு தெரிஞ்சுக்க நேம் லிஸ்ட்டை வெச்சுக்கிட்டு என்னோட உதவியாளர் சரி பார்த்துட்டிருக்கார். ஆள் யார்ன்னு இப்ப கொஞ்ச நேரத்துல தெரிஞ்சுடும்...”

“நீலவண்ணக் கண்ணனோட நிலைமை இப்போ எப்படியிருக்கு?"

“இப்போதைக்கு டாக்டர் எதுவும் சொல்லலை... ஐ.ஸி. யூனிட்டில் ட்ரீட்மெண்ட் போயிட்டிருக்கு..."

பேசிக் கொண்டிருக்கும்போதே அஜய் வந்தான். நடையில் வேகம். குரலில் அதிகபட்ச பதட்டம். “ஸார்!”

“என்ன அஜய்?”

“ராகுலன் என்கிற ஒரு ஆள் இல்லை ஸார். அவன் மனநோயாளியாய்

இருந்து குணமானவன்...!”

“மை குட்னஸ்! அந்த ராகுலனுக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்த நபர்கிட்ட விசாரிச்சியா?”

"விசாரிச்சேன் ஸார். நிகழ்ச்சி ஆரம்பிக்கிறதுக்குப் பத்து நிமிஷம் முன்னாடியே டாய்லட் போகணும்ன்னு சொல்லி அரங்கத்துக்குப் பின்பக்கம் போயிருக்கான். போனவன் வரவே இல்லையாம்..."

இன்ஸ்பெக்டர் எழில் வரதன் கான்ஸ்டபிள்களிடம் திரும்பினார்.

“போய் எல்லா இடத்தையும் சர்ச் பண்ணுங்க. அவன் இந்த டி.வி. ஸ்டேஷனின் எல்லையை விட்டு வெளியே போயிருக்க வாய்ப்பில்லை. ஏதாவது ஒரு இருட்டான இடத்துல ஒளிஞ்சுட்டு இருக்கலாம்...!”

கான்ஸ்டபிள்கள் பூட்ஸ் சத்தங்களோடு ஓடினார்கள். எழில் வரதன் குகனை ஏறிட்டார். “மனநோயாளியாய் இருந்த நபர்களையெல்லாம் ஏன் ஸார் கூப்பிட்டு இந்த நிகழ்ச்சியில் பங்கு எடுத்துக்கச் சொல்றீங்க?"

“அவன் குணமாயிட்டதாய் டாக்டர் சர்டிஃபிகேட் கொடுத்திருந்தார். அந்த அடிப்படையில்தான் அவனை அனுமதித்தோம். ராகுலன் மாதிரியே இன்னும் பத்து பேர் மனநோயாளிகளாய் இருந்து குணமாகினவங்க இந்த நிகழ்ச்சிக்கு வந்திருக்காங்க... ஸார்!"

அமிர்தவர்ஷிணி குறுக்கிட்டாள். “ஒரு நிமிஷம் மிஸ்டர் குகன்!”

“என்ன... சொல்லுங்க மேடம்!"

“ராகுலன் இங்கே இல்லை என்கிற ஒரே ஒரு காரணத்துக்காக அவன்தான் நீலவண்ணக் கண்ணனைக் கத்தியால குத்தியிருக்கணும்னு எப்படிச் சொல்றீங்க?"

“ஒரு அனுமானம்தான்!”

அமிர்தவர்ஷிணி லேசாய் குரலை உயர்த்தினாள். “ஸாரி... மிஸ்டர் குகன்! என்னோட அனுமானத்தை நான் சொல்லட்டுமா?”

"சொல்லுங்க... மேடம்!”

“உங்க டி.வி. சேனலைச் சேர்ந்த ஆட்கள்ல யாரோ ஒருத்தர் ஏன் இந்தக் கொலை முயற்சியில் ஈடுபட்டிருக்கக்கூடாது?”

"அதுக்கு எந்த மோட்டிவேஷனும் இல்லையே?”

"அப்படின்னா... ராகுலனுக்கு மட்டும் என்ன மோட்டிவேஷன் இருக்க முடியும்?”

“அவன் ஒரு மனநோயாளியாய் இருந்தவன் மேடம்!"

“மனநோயாளியாய் இருந்தவன்தானே...! இப்போ இல்லையே?”

“மேடம்! இப்ப நீங்க என்ன சொல்ல வர்றீங்க?"

"நீலவண்ணக் கண்ணன் கத்தியால் குத்தப்பட்ட சம்பவத்தை ஒரே கண்ணோட்டத்தோடு பார்க்க வேண்டாம்னு சொல்றேன். அவர் மேல வேற யாருக்காவது பகை இருக்கலாம்.”

"அப்படின்னா ராகுலன் எங்கே?”

"நிகழ்ச்சி ஆரம்பிக்கிறதுக்கு முன்னாடியே அவன் டாய்லட் போகணும்னு சொல்லிப் போயிருக்கான். ஏதாவது உடல்நலக் குறைவு ஏற்பட்டு நிகழ்ச்சியில் கலந்து கொள்ளப் பிரியப்படாம அப்படியே வெளியேறிப் போயிருக்கலாமே!”

"மேடம்! இப்போ ராகுலன் மேல ஏற்பட்டிருக்கிறது ஒரு சந்தேகம்தான். அவன் எங்கேயும் தப்பி ஓடி விட முடியாது. ஏன்னா அவனோட வீட்டு அட்ரஸ் பார்ட்டிசிபண்ட்ஸ் லிஸ்ட்ல இருக்கு... அவனை எப்படியும் மடக்கிடலாம்!”

"தென்... நோ ப்ராப்ளம்!” - அமிர்தவர்ஷிணி சொல்லிக் கொண்டு இருக்கும்போதே கான்ஸ்டபிள்கள் வந்தார்கள். கூடவே சேனல் சம்பந்தப்பட்ட ஆட்கள்.

“ஸார்! எல்லாப் பக்கமும் பார்த்துட்டோம். ஆள் இல்லை...”

***

# 6.

**2011-**ஆம் ஆண்டுக்கான இரசாயனத் துறை பிரிவில் நோபல் பரிசு வயற்றவர் ஒரு பேராசிரியர். பெயர் டேனியல் ஷெட்மன். இவர் இஸ்ரேல் விஞ்ஞானி. படிம அணுக்களை ஆராய்ச்சி செய்து கட்டுரைகளை எழுதியவர். படிம அணுக்கள் ஒரு சீராய் இருக்கும் என்று மற்ற படிம விஞ்ஞானிகள் சொல்லி வந்த காலத்தில் இவர் மட்டும் சீரற்ற அணுக்களைக் கொண்டு ஒரு படிகத்தை உருவாக்க முடியும் என்று ஆணித்தரமாய் சொல்லி வந்தார். இவர் கண்டுபிடித்த அந்த ரசாயனக் கட்டமைப்புக்குப் பெயர் க்வாரி க்ரிஸ்டல். ஆனால் இதை எந்த விஞ்ஞானியும் ஏற்றுக் கொள்ளவில்லை. அவர் எழுதிய கட்டுரைகளைப் படிக்காமல் நிராகரித்தனர். கடைசியில் வெற்றி பெற்றதென்னவோ இவர்தான். எப்படி என்று கேட்கிறீர்களா..?

இரவு நேரம். ராத்திரி ஒன்பது மணி. மொட்டை மாடியின் சிட் அவுட்.

மனைவி தங்கம் மடித்துக் கொடுத்த வெற்றிலையை வாயில் போட்டுக் கொண்ட ஹரிஹரசுதன் கேட்டார்.

“என்ன தங்கம்... காலையில் இருந்து ஏதோ ஒரு மாதிரி இருந்து இருக்கே? உடம்புக்கு ஏதாவது முடியலையா...?”

“அதெல்லாம் ஒண்ணும் இல்லிங்க... நான் எப்பவும் போல்தான் இருக்கேன்..."

"இந்தப் பொய்தானே வேண்டாங்கிறது... உன்னைப் பத்தி எனக்குத் தெரியாதா என்ன? சொல்லு... என்ன விஷயம்?”

தங்கம் நிமிர்ந்தாள். "நான் உங்களுக்கு யோசனை சொல்றதாய் நினைக்கக் கூடாது. என் மனசுல படற ஒரு விஷயத்தைச் சொல்லட்டுமா?"

"சொல்லு...”

சில விநாடிகள் மௌனித்த தங்கம் தயங்கிவிட்டு தொடர்ந்தாள். "காலையில உங்க கிராமத்தைச் சேர்ந்த பெரியவங்க எல்லாரும் வந்து கோவில் கட்டற விஷயமாய் பேசினாங்க. ஆனா நீங்க கோவில் கட்டப் பணம் தரமாட்டேன்னு சொல்லிட்டீங்க... அதுக்குப் பதிலாய் இஞ்ஜீனியரிங் காலேஜ் கட்டித் தர்றேன்னு சொன்னீங்க...!"

"ஆமா...”

“அது என்னமோ எனக்குச் சரியாப் படலைங்க..."

"ஏன்?”

“அவங்க எவ்வளவு ஆசையாய் வந்து இருப்பாங்க? அதையெல்லாம் இஞ்ஜீனியரிங் காலேஜ் கட்டறதாய்ச் சொல்லிச் சிதைச்சுட்டீங்களே! பாவம்... அவங்க கிளம்பிப் போகும்போது யார் முகத்திலேயும் சுரத்தே இல்லை..."

ஹரிஹரசுதன் தாம்பூலம் தரித்த வாயோடு சிரித்தார். "இதோ பார் தங்கம்...! நான் எது செஞ்சாலும் அது சரியாய்த்தான் இருக்கும். இப்போ அந்த ஊருக்குத் தேவையானது கோவில் இல்லை. ஒரு இஞ்ஜீனியரிங் காலேஜ், தெய்வத்துக்கு நம்ம மனசுல இடம் கொடுத்தா போதும். நம்ம கிராமத்துல இருக்கிற வடிவாம்பிகை அம்மன் கோயில் பல நூறு ஆண்டுகளுக்கு முன்னாடி கட்டப்பட்ட ஒரு பழமையான கோயில். வாஸ்து பார்க்காம யாரும் கோவிலைக் கட்டமாட்டாங்க.

“இன்னிக்கு யாரோ ஒரு நம்பூதரி வந்து வாஸ்து சரியில்லைன்னு சொன்னா... அதை நம்பிக் கோவிலை இடிக்கிறது எவ்வளவு முட்டாள்தனம்? எனக்கு அந்தக் கோவிலை இடிக்கிறதுல விருப்பம் இல்லை. அதுவும் இல்லாம அந்தக் கோவிலுக்குச் சொந்தமான பத்து ஏக்கர் நிலம் கேட்பார் இல்லாமக் கிடக்குது. அதுல விவசாயமும் பண்ண முடியாது. அதுல ஒரு இஞ்ஜீனியரிங் கல்லூரி கட்டினா அது எல்லார்க்கும் உபயோகமாய் இருக்கும்னு நினைச்சேன். இதுல என்ன தப்பு இருக்கு?”

“கோவிலைக் கட்டமாட்டேன்னு சொல்றது தெய்வக் குத்தம் இல்லையா?”

“ஒரு குத்தமும் கிடையாது. தங்கம்...! நீ மொதல்ல ஒரு உண்மையைப் புரிஞ்சுக்கணும். மனுஷங்க மாதிரி தெய்வத்துக்கெல்லாம் கோபம் வராது. அப்படிக் கோபம் வந்தா அது தெய்வம் இல்லை. கோவில் கட்டி கடவுளைக் கும்பிட்டா... அந்தத் தெய்வம் சந்தோஷப்படும்ன்னு எல்லாரும் நினைக்கிறாங்க. அது தப்பு...! நாம யாருக்கும் எந்தத் துரோகமும் பண்ணாம மத்தவங்களுக்கு உதவி பண்ணி மனசாட்சிக்கு விரோதம் இல்லாம நடந்தாத்தான் அந்தத் தெய்வம் சந்தோஷப்படும்.”

“என்னவோ... என்னோட மனசுக்குத் தோணினதைச் சொன்னேன். மத்தபடி உங்க விருப்பம்..." - எழுந்தாள் தங்கம்.

“எங்கே கிளம்பிட்டே?”

'டி.வி.யில் ஒரு புது சீரியல் ஆரம்பமாகுது. நான் பார்த்துட்டு இருக்கேன். நீங்க வாங்க!"

தங்கம் எழுந்து போய்விட... ஹரிஹரசுதன் சிறிது நேரத்திற்குப் பிறகு தன் இடுப்பு வேஷ்டியில் ஒளிந்திருந்த செல்ஃபோனை எடுத்துச் சில எண்களைத் தட்டி விட்டுப் பேசினார்.

"குமரேசன்!"

"அய்யா..."

"இப்போ கிராமத்துலதானே இருக்கே?"

"ஆமாங்கய்யா..."

"பக்கத்துல யாரும் இல்லையே?"

"இல்லீங்கய்யா..."

"சரி... கிராமத்துல இப்ப என்ன நிலவரம்?"

"அய்யா...! கோவில் கமிட்டியைச் சேர்ந்த பாதிபேர் இஞ்ஜீனியரிங் காலேஜ் கட்ட ஆதரவாய் இருக்காங்க. மீதிப் பேர் எதிர்க்கிறாங்க..."

"எதிர்க்கிறவங்க சொல்ற காரணம் என்ன?"

"காலப்போக்கில் நிலம் உங்க சொத்து ஆயிடுமாம். அதுக்குத்தான் நீங்க முயற்சி பண்றீங்களாம்..."

"சரியா ஜட்ஜ் பண்ணியிருக்காங்க..."

"அய்யா!"

"சொல்லு..."

"கிராமம் இப்ப முன்னே மாதிரியில்லை. படிச்ச பசங்க நிறையப் பேர் இருக்காங்க. 'கனவு மெய்ப்பட' என்கிற பேரில் ஒரு மன்றமும் செயல்பட்டுக்கிட்டு இருக்கு. அப்புறம்... சின்னதாய் ஒரு லைப்ரரி ஓப்பன் பண்ணியிருக்காங்க."

"பரவாயில்லையே!"

"கோவிலுக்குச் சொந்தமான பத்து ஏக்கர் நிலத்தை நாம வளைச்சுப் போடறது அவ்வளவு சுலபத்துல நடக்காது போலிருக்கய்யா...!"

“கண்டிப்பாய் நடக்கும். நீ மட்டும் அங்கே நடக்கிற விஷயங்களை எனக்கு உடனுக்குடன் தெரியப்படுத்திட்டே இரு. மத்ததையெல்லாம் நான் பார்த்துக்கிறேன்..."

“சரிங்கய்யா...!"

“நாளைக்குக் காலையில் கிராமத்தில் என்ன நிலவரம்ன்னு பார்த்துட்டு எனக்குப் போன் பண்ணு!" - ஹரிஹரசுதன் பேசிவிட்டு செல்போனை அணைத்தார்.

***

# 7.

**2011-**க்கான இரசாயனத் துறையில் நோபல் பரிசு பெற்ற டேனியல் ஷெட்மன், தான் கண்டுபிடித்த க்வாரி க்ரிஸ்டல் வேதியியல் கட்டமைப்பை உண்மை என்று நிரூபிக்கக் கடுமையாய் முயற்சி செய்தார். ஆனால் வேதியியல் துறை விஞ்ஞானிகள் அவரைக் கேலி செய்ததோடு இல்லாமல் அவரை ஆராய்ச்சிக் குழுவில் இருந்து விரட்டி விட்டனர். ஆனாலும் டேனியல் ஷெட்மன் வெளியிலிருந்து தனது கண்டுபிடிப்பை நிரூபிக்கப் போராடினார். அவருக்கு உதவ பிசிகல் ரெவ்யூ லெட்டர்ஸ் என்ற பத்திரிகை உதவ முன் வந்தது. ஷெட்மனின் க்வாரி க்ரிஸ்டல் கட்டுரையை அது பிரசுரித்தது. கட்டுரையைப் படித்த மற்ற நாட்டு ஆராய்ச்சியாளர்கள் அவருடைய கருத்தை ஒப்புக்கொண்டனர். க்வாரி க்ரிஸ்டல் முறைப்படி சோதனைக் கூடத்திலேயே படிகத்தைத் தயாரிக்க முடியும் என்பதை செய்முறை மூலம் கண்டு உணர்ந்தனர். நோபல் பரிசும் ஷெட்மனுக்குக் கிடைத்தது.

இன்ஸ்பெக்டர் எழில் வரதன் கான்ஸ்டபிள்களை ஏறிட்டார்.

“நல்லாத் தேடிப் பார்த்தீங்களா?”

“எல்லாப் பக்கமும் பார்த்துட்டோம் ஸார்!”

“பின்பக்கமாய்த் தப்பிக்க வாய்ப்பு இருக்கா?”

"இருக்கு ஸார்! பின்பக்க காம்பௌண்ட் சுவர் அவ்வளவு உயரம் இல்லை. போதாக் குறைக்கு மரங்கள் வேற காம்பௌண்ட் சுவரை ஒட்டி வளர்ந்திருக்கு."

எழில் வரதன் குழப்பமாய்த் தன் நெற்றியைத் தேய்த்துக் கொண்டார். “ஒரு கத்திக் குத்து சம்பவத்தை நடத்திட்டு மின்னல் வேகத்தில் தப்பிச்சுட்டுப் போயிருக்கான். அவன் வீட்டு அட்ரஸ் என்ன?”

அஜய் கையில் வைத்திருந்த பேப்பர் லிஸ்ட்டோடு முன்னால் வந்தான். அட்ரஸைச் சொல்ல ஆரம்பித்தான்.

"ராகுலன், நெம்பர் 9, வாட்டர் டேங்க் ரோடு, வேளச்சேரி.”

எழில் வரதன் ஒரு கான்ஸ்டபிளிடம் திரும்பினார்.

“கனகராஜ்!”

“ஸார்...!”

"இந்த அட்ரஸை நோட் பண்ணிகிட்டு உடனே போய்ப் பாருங்க... ஆள் வீட்டுல இருந்தா அரஸ்ட் பண்ணி ஸ்டேஷனுக்குக் கொண்டு வந்துடுங்க..."

“எஸ் ஸார்..." - கான்ஸ்டபிள்கள் திரும்பிப் போக...

குகன் பக்கத்தில் வந்தார். “இன்ஸ்பெக்டர்! ஹாஸ்பிடலில் இருந்து போன் வந்தது. டாக்டர் பேசினார். நீலவண்ணக் கண்ணனுக்குச் சுயஉணர்வு திரும்ப வாய்ப்பு இருக்கிறதாய்ச் சொன்னார். நாம உடனடியாய் ஹாஸ்பிடலுக்குக் கிளம்பிப் போனால் நீலவண்ணக் கண்ணனோட வாக்குமூலத்தை வாங்கிடலாம். தன்னைக் கத்தியால் குத்தினது யார் என்கிற உண்மையையும் அவர் சொல்லலாம்...”

“கமிஷனர் இங்கே வர்றதாய் சொல்லியிருக்காரே?”

“அவரையும் அங்கேயே வரச் சொல்லி போன்ல தகவல் கொடுத்துடுங்களேன்!”

“சரி...! நீங்களும் மேடம் அமிர்தவர்ஷிணியும் புறப்படுங்க. நாங்களும் பின்னாடியே ஜீப்பில் வந்துடறோம்.”

குகனும் அமிர்தவர்ஷிணியும் செட்டை விட்டு வெளியே வந்தார்கள். வேகமாய் நடந்தார்கள்.

“ஸாரி மேடம்!"

“எதுக்கு ஸாரி?”

"நீங்க இந்த நிகழ்ச்சிக்கு வர ஒத்துக்கிட்டதே பெரிய விஷயம். இந்த நேரத்துல இப்படியொரு துரதிர்ஷ்டமான சம்பவம் நடந்தது என்னுடைய மனசுக்கு ரொம்பவும் கஷ்டமாய் இருக்கு.”

“இப்போதைக்கு என்னுடைய கவலையெல்லாம் நீலவண்ணக் கண்ணனோட உயிர்க்கு எந்த ஆபத்தும் ஏற்பட்டுடக் கூடாதேங்கிறதுதான்."

“டாக்டர் பேசின பேச்சிலிருந்து எனக்கு ஒரு நம்பிக்கை வந்திருக்கு மேடம்! நீலவண்ணக் கண்ணனின் உடம்பில் விழுந்த கத்திக்குத்து விலா எலும்புகளைத் தாண்டி இதயம் வரைக்கும் போகலை. அதனால் உயிருக்கு ஆபத்து ஏற்படக்கூடிய சூழ்நிலை இல்லைன்னு சொன்னார்."

"நீலவண்ணக் கண்ணனுக்கு கல்யாணமாயிடுச்சா?"

“இல்லை... வீட்டுல மும்முரமாய் பெண் பார்த்துட்டு இருக்கிறதாய் போன வாரம்தான் சொன்னார்.”

கார் பார்க்கிங்கை நெருங்கினார்கள். அமிர்தவர்ஷிணி தன்னுடைய காரை நோக்கிப் போக... குகன் குரல் கொடுத்தார்.

“மேடம்... வாங்க! என்னோட கார்லயே போயிடலாம்."

“வேண்டாம் குகன்...! நான் ஹாஸ்பிடலில் இருந்து வீட்டுக்கு அப்படியே போயிடறேன். இப்ப நான் உங்க கார்ல வந்தா மறுபடியும் காரை எடுக்க நான் இங்கே வரவேண்டியிருக்கும். நீங்க உங்க காரை எடுங்க... நான் பின்னாடியே வர்றேன்...”

"இட்ஸ் ஓ.கே.!" என்று சொன்ன குகன் தன் காரை நோக்கிப் போக... அமிர்தவர்ஷிணி தன்னுடைய காரை நெருங்கி லாக்கரை விடுவித்து உள்ளே போனாள். காரின் இக்னீஷியனை கனைக்க வைத்துக் காரை நகர்த்தினாள். ஜூபிடர் டி.வி. ஸ்டேஷனை விட்டு வெளியே வந்து போக்குவரத்தில் கலந்தாள்.

மிதமான வேகத்தில் இரண்டு நிமிஷப் பயணம்.

காரின் பின்சீட்டில் ஏதோ சத்தம் கேட்ட உணர்வு.

அமிர்தவர்ஷிணி திடுக்கிட்டுப் போய் காரின் வேகத்தைக் குறைத்துக் கொண்டே திரும்பிப் பார்த்தாள்.

அந்த இளைஞன் காரின் பின்சீட்டுக்கு அடியில் இருந்து மெதுவாய் எழுந்து கொண்டிருந்தான்.

ரத்தம் உறைந்துபோன சட்டையோடு - வலது கையில் உயர்த்திப் பிடித்த கத்தி. கண்களில் கோபச் சிவப்பு. முகத்தில் அரும்பிய வியர்வை.

அமிர்தவர்ஷிணி பிரேக்கை அழுத்திக் காரை நிறுத்த முயன்றாள். அவன் பின்னங்கழுத்தில் கத்தியை வைத்தான். ஒரு மிருகத்தின் தொண்டை போல் குரல் கரகரத்தது. “காரை நிறுத்தாதே...! போய்கிட்டே இரு...!"

சர்வாங்கமும் ஒடுங்கியவளாய் அமிர்தவர்ஷிணியின் கால் ஆக்ஸிலேட்டரை மிதிக்க... கார் மறுபடியும் வேகம் பிடித்தது.

“கார் போய்க்கிட்டே இருக்கணும். எங்கேயும் நிறுத்தக்கூடாது. என்னைக் காட்டிக் கொடுக்கிற மாதிரி சத்தமும் போடக்கூடாது.”

அமிர்தவர்ஷிணி பயத்தில் உலர்ந்து போன உதடுகளை ஈரப்படுத்திக் கொண்டு சற்றே துணிச்சலை வரவழைத்துக் கொண்டு கேட்டாள்.

“நீ... யாரு? உனக்கு என்ன வேணும்?"

அவன் பின்சீட்டுக்கு நன்றாய் சாய்ந்து உட்கார்ந்து கொண்டு கால் மேல் கால் போட்டபடி சொன்னான்.

“என்னோட பேர் ராஜமார்த்தாண்ட குலசேகரன். ஆனால் மத்தவங்க என்னைக் கூப்பிடறது ராகுலன்!”

ஸ்டீயரிங்கைப் பிடித்திருந்த அமிர்தவர்ஷிணியின் குரல் நடுங்கியது. "நீலவண்ணக் கண்ணனைக் கத்தியால் குத்தியது...?”

"நான்தான்...!"

"எ...எ...எதுக்காகக் குத்தினே...?”

"அவனை எனக்குப் பிடிக்கலை.”

"ஏன்?”

"பிடிக்கலைன்னா பிடிக்கலைதான். பேசாம காரை ஓட்டு! காரை எங்கேயும் நிறுத்தாம உன் வீட்டுக்கு ஓட்டு!"

"எ...எ...என் வீட்டுக்கா?”

"ஆமா! உன்கூட நான் பேசணும். நிறையப் பேசணும்.”

அமிர்தவர்ஷிணி நிதானித்தாள். “இவனிடம் ஏதோ பிரச்சனை இருக்கிறது. இவனுடைய பேச்சுக்குக் கட்டுப்பட்ட மாதிரி நடித்து போலீஸுக்குத் தகவல் கொடுத்துவிட வேண்டியதுதான்!”

அவன் கேட்டான். "என்ன யோசிக்கிறே?”

“சரி. என் வீட்டுக்குப் போகலாம்.”

"இதோ பார்! வீட்டுக்குப் போகலாம்ன்னு சொல்லிட்டு என்னைப் போலீஸில் பிடிச்சுக் கொடுக்க நினைச்சே... இந்தக் கத்தி உன் நடு மார்புல பாய்ஞ்சிடும். அப்புறம் நீயும் அந்த நீலவண்ணக் கண்ணன் மாதிரி போய் சேர்ந்துட வேண்டியதுதான்!”

"உன்னை யாருக்கும் காட்டிக் கொடுக்க மாட்டேன்!”

“இது புத்திசாலித்தனம். ஒழுங்கா காரை ஓட்டு!"

‘இந்த ராகுலன் என்னிடம் என்ன பேசப் போகிறான்?’ - யோசித்துக் கொண்டே காரை மிதமான வேகத்தில் விரட்டிக் கொண்டிருந்தாள் அமிர்தவர்ஷிணி.

திடும்மென்று கைப்பையில் இருந்த அவளுடைய செல்போன் மெலிதாய் ரிங் டோனை வெளியிட்டது.

ராகுலன் பின்னாலிருந்து குரல் கொடுத்தான். “போன்ல யாரு?”

“எடுத்துப் பார்த்தாத்தான் தெரியும்.”

"பாரு..."

அமிர்தவர்ஷிணி வலது கையால் ஸ்டீயரிங்கைக் கையாண்டு கொண்டே... இடது கையால் பையில் இருந்த செல்போனை எடுத்து அழைப்பது யார் என்று பார்த்தாள்.

'குகன் காலிங்...’ என்று டிஸ்ப்ளே சொன்னது.

“பேசறது... ஜூபிடர் டி.வி.யின் எம்.டி. குகன்...!”

"பேசு...! என்ன பேசணுமோ அதை மட்டும்தான் பேசணும். என்கிட்ட நீ மாட்டியிருக்கிற விஷயம் வெளியே வரக்கூடாது."

“வராது...”

"அப்ப பேசு!"

“கார்ல போகும்போது - அதாவது டிரைவ் பண்ணும் போது - செல்போன் பேசக்கூடாது. காரை ஓரமா அந்த மரத்துக்குக் கீழே நிறுத்திக்கலாமா?”

“சரி...!”

அமிர்தவர்ஷிணி காரில் இருந்த இண்டிகேட்டரைப் போட்டுக் கொண்டு சாலையின் ஓரம் ஒதுக்கி... மரத்துக்குக் கீழே நிறுத்தினாள். செல்போனை எடுத்துக் காதுக்கு ஒற்றினாள்.

“ஹலோ..."

"மேடம்! நான் குகன்... உங்க கார் என்னோட காருக்குப் பின்னாடி வந்துட்டு இருந்தது. இப்ப காணோம்?”

“ஸாரி... மிஸ்டர் குகன்! நான் இப்போதைக்கு ஹாஸ்பிடலுக்கு வர

முடியாத நிலைமை...!"

"ஏன்... என்னாச்சு?"

"ஒரு அவசர வேலையாய் நான் வீட்டுக்குப் போக வேண்டியிருக்கு."

“எனி ப்ராப்ளம்?"

“ஒரு ப்ராப்ளமும் இல்லை. ஆஸ்திரேலியாவில் படிச்சிட்டிருக்கிற என்னோட மகன் கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி என்கிட்ட பேசினான். அவனுக்கு அங்க ஏதோ ப்ளேஸ்மெண்ட் த்ரூ ஆயிருக்கு. அதுக்கு ஒரு டாக்குமெண்ட்டை சப்மிட் பண்ணணுமாம். உடனடியாய் ஃபேக்ஸ் பண்ணச் சொன்னான். அதனால நான் இப்போ வீட்டுக்குப் போயிட்டு இருக்கேன். ஃபேக்ஸ் அனுப்ப எப்படியும் ஒரு மணி நேரமாயிடும். அந்த வேலையை முடிச்சுட்டு நான் அதுக்கப்புறமாய் ஹாஸ்பிடலுக்கு வர்றேன் குகன்...!"

“ஓ.கே. மேடம்! நோ ப்ராப்ளம்... நான் போய் ஹாஸ்பிடல்ல இருக்கேன். நீங்க உங்க சன்னுக்கு ஃபேக்ஸ் பண்ணிட்டு வாங்க... நான் வெயிட் பண்றேன்."

இரண்டு பக்கமும் செல்போன்கள் அணைக்கப்பட்டதும்... பின் சீட்டில் இருந்த ராகுலன் கேட்டான். குரலில் கோபம்; ஆத்திரம்.

“என்ன! என்கிட்ட கத்திக் குத்து வாங்கின அந்த நீலவண்ணக் கண்ணன் இன்னும் உயிரோடு இருக்கானா?"

“தெ... தெரியலை. ஹாஸ்பிடலுக்குப் போனாத்தான் தெரியும்."

“அவன் உயிரோடு இருக்க மாட்டான். இருக்கவும் கூடாது."

"அவர் மேல உனக்கு என்ன வெறுப்பு? அவர் உனக்கு எதிரியா?"

“அவன் எனக்கு எதிரியும் கிடையாது. நண்பனும் கிடையாது. இன்னிக்குத்தான் அவனை முதல் தடவையாய்ப் பார்த்தேன். பார்த்ததுமே எனக்குப் பிடிக்கலை. அவனைக் கொல்லணும் போல தோணிச்சு. அதான் கண்ணிமைக்கிற நேரத்துக்குள்ளே கத்தியால் சொருகிட்டேன்."

“இது தப்பில்லையா?"

“எது?"

"இப்படி எந்த ஒரு காரணமும் இல்லாமல் ஒருத்தரைக் கொல்ல

நினைக்கிறது?”

“எனக்கு அது தப்பாய் தோணலை. இந்த நீலவண்ணக் கண்ணனை மட்டுமல்ல... எனக்கு இந்த உலகத்துல யார் யாரைப் பிடிக்கலையோ அவங்களை யெல்லாம் பார்த்த நிமிஷத்திலேயே கொலை பண்ணுவேன். நீ மொதல்ல காரை எடு. உன் வீட்டுக்குப் போலாம் "

அமிர்தவர்ஷிணி அப்படியே உட்கார்ந்திருந்தாள்.

“என்ன...! நான் சொன்னது காதுல விழலையா? உன்னோட கழுத்துல ஒரு ரத்தக்கீறல் போடட்டுமா?”

கார் வேகமாய் நகர்ந்தது.

***

# 8.

**2011-**ஆம் வருடத்துக்கான இலக்கியத்துறைக்கான நோபல் பரிசு ஸ்வீடன் நாட்டுக் கவிஞர் ஒருவருக்கு வழங்கப்பட்டது**.** இவருடைய பெயர் தோமாஸ் ட்ரான்ஸ்ட்ரோமர்**. 80** வயது நிரம்பிய இவர் ஸ்டாக்ஹோம் பல்கலைக்கழகத்தில் சைக்காலஜி பட்டம் பெற்றவர்**.** இவர் ஒரு உளவியல் பட்டதாரியாய் இருந்தாலும் கூட இலக்கியத்தின்பால் பற்றுக் கொண்டவர்**.** இவர் எடுத்துக் கொண்ட ஆராய்ச்சி மனித உள்ளம் பற்றியது**.** மனித உள்ளம் எப்படிப்பட்டது என்பதைக் குறித்து நிறையக் கட்டுரைகள் எழுதினார்**.** உளவியல் துறையில் பட்டம் பெற்ற இவருக்கு இலக்கியத் துறைக்கான நோபல் பரிசு எப்படிக் கிடைத்தது என்று கேட்கிறீர்களா**?**

“அய்யா!”

வீட்டைச் சுற்றிலும் போடப்பட்டிருந்த புல்வெளியோடு கூடிய நடைபாதையில் வாக்கிங் போய்க் கொண்டிருந்த ஹரிஹரசுதன் தனக்குப் பின்னால் எழுந்த குரல் கேட்டு நின்றார். திரும்பிப் பார்த்தார்.

வேலையாள் ராஜப்பன் நின்றிருந்தான்.

"என்ன?”

"வாஸ்து ஜோசியர் நரசிங்கம் உங்களைப் பார்க்க வந்திருக்கார்ய்யா. நீங்க வரச் சொன்னீங்களாம்...!”

ஹரிஹரசுதன் வாக்கிங்கை பாதியிலேயே முடித்துக் கொண்டு வீட்டின் வரவேற்பறையை நெருங்க... வரவேற்பறையின் சோபாவில் நரசிங்கம் தன் வெண்ணிற தாடியை இடது கை விரல்களால் கோதியபடி சாய்ந்து உட்கார்ந்திருந்தார்.

எழுபது வயது நிரம்பிய நரசிங்கம் கடந்த பத்தாண்டுகளாக ஹரிஹரசுதனுக்கு ஆஸ்தான ஜோதிடர். அவர் சொன்னபடியெல்லாம் நடந்து கொண்ட காரணத்தால்தான் ஹரிஹரசுதனின் வாழ்க்கையில் செல்வம் கொழித்துச் சந்தோஷம் பெருகியது. எதிரிகள் காணாமல் போனார்கள்.

ஹரிஹரசுதன் வேகவேகமாய்ப் போய் நரசிங்கத்தின் பாதங்களைத் தொட்டு வணங்கிவிட்டுப் பவ்யமாய் சொன்னார். "அய்யா! வீட்டுக்கு வந்தது எனக்கு ரொம்பவும் சந்தோஷம். நியாயப்படி பார்த்தா நான் உங்க இருப்பிடத்துக்கு வந்து பார்க்கணும். அதுதான் முறையும்

மரியாதையும்கூட. இருந்தாலும், உங்க காலடிகள் இந்த வீட்டில் படணும்ங்கிற ஒரே காரணத்துக்காகத்தான் அய்யாவை வரச் சொன்னேன்.”

நரசிங்கம் தாடி மீசைக்குள் வெள்ளையாய் சிரித்தார்.

“ஹரி! நீ என்னைப் பார்க்க வந்தா என்ன... நான் உன்னைப் பார்க்க வந்தா என்ன...? ரெண்டும் ஒண்ணுதான். இப்படி உட்கார். போன்ல பேசும்போது ஏதோ முக்கியமான விஷயம்னு சொன்னே... என்ன விஷயம்னு சொல்லு...”

“அய்யா! அது வந்து...” என்று ஹரிஹரசுதன் பேச்சை ஆரம்பித்த விநாடி... தங்கம் பால் நிரம்பிய வெள்ளி டம்ளரோடு உள்ளேயிருந்து வேக வேகமாய் வெளிப்பட்டாள்.

“அய்யா! மொதல்ல பால் சாப்பிடுங்க. அப்புறம் பேசலாம்."

தங்கம் பால் நிரம்பிய டம்ளரை நீட்ட... நரசிங்கம் வாங்கி இரண்டு வாய் பருகிவிட்டு ஹரிஹரசுதனை ஏறிட்டார்.

“சொல்லு ஹரி...! என்ன விஷயம்?”

ஹரிஹரசுதன் பேச்சை ஆரம்பித்தார். "அய்யா! எனக்கு ரொம்ப நாளாவே பெரிய அளவில் ஒரு இன்ஜீனியரிங் காலேஜ் கட்டணும்னு ஆசை. அந்த ஆசை நிறைவேறுகிற பக்குவத்துக்கு ஒரு வாய்ப்பு வந்திருக்கு."

“ரொம்பவும் நல்ல காரியமாச்சே! எந்த இடத்துல காலேஜைக் கட்டப் போறே?"

ஹரிஹரசுதன் ஒரு இரண்டு நிமிஷ நேரம் செலவழித்து... தன் சொந்தக் கிராமத்தைச் சேர்ந்த பெரியவர்கள் வந்து சென்ற விபரத்தைச் சொல்லி முடிக்க... நரசிங்கத்தின் நெற்றியில் நான்கைந்து வியப்பு வரிகள் உற்பத்தியாயிற்று.

“கோவிலுக்குச் சொந்தமான நிலத்தில் பொறியியல் கல்லூரி கட்டப் போறியா?”

"ஆமாங்கய்யா!”

“அது அம்பாள் கோவில்தானே?"

"ஆமாங்கய்யா!”

"அந்தக் கோவில்ல சிவனுக்கும் சன்னதி இருக்கா?”

"இருக்கய்யா!”

நரசிங்கம் கையில் பால் டம்ளரை வைத்துக் கொண்டு ஒரு பதினைந்து விநாடிகள் தீவிரமான யோசிப்பில் இருந்தார்.

ஹரிஹரசுதன் தயக்கமாய் குரலை வெளியிட்டார். “அய்யாவுக்கு என்ன யோசனை? நான் ஏதாவது தப்பாய் சொல்லிட்டேனா?"

“சாதாரண தப்பில்லை... மகா தப்பு!”

“அய்யா... என்ன சொல்றீங்க?"

“அந்தக் கோவில் நிலம் சிவனோட சொத்து. அந்தச் சொத்தை யாரும் உபயோகப்படுத்தக் கூடாது...”

“அய்யா! நான் அங்கே என்னோட சொந்த உபயோகத்துக்காக வீடு கட்டலை. அந்தப் பகுதியில் உள்ள மாணவர்கள் பொறியியல் படிப்பு படிக்கணும்ன்னா ஐம்பது, அறுபது கிலோ மீட்டர் தள்ளியிருக்கிற பக்கத்து நகரங்களுக்குப் போறாங்க. அந்த அவலத்தைப் போக்கத்தான் காலேஜ் கட்டறேன். இது நல்ல காரியம் இல்லையா?"

“நல்ல காரியம்தான்... அதை நான் ஒத்துக்கிறேன். ஆனா காலேஜ் கட்ட தேர்ந்தெடுத்த இடம்தான் மனசுக்குக் கொஞ்சம் நெருடலாயிருக்கு."

“இதில் என்ன நெருடல்?”

“ஹரி! உனக்குத் தெரியாதது ஒண்ணுமில்லை 'சிவன் சொத்து குலநாசம்’ன்னு பெரியவங்க சொல்லிட்டுப் போயிருக்காங்க. அது உனக்குத் தெரியுமா தெரியாதா?”

“தெரியும்.”

“தெரிஞ்சும் எப்படி...?”

“அய்யா! அந்தக் கோவில் நிலம் சிவனோட சொத்துதான். அந்தச் சொத்தை நானொண்ணும் அபகரிக்கலையே... அந்த இடத்துல காலேஜ் கட்டுறேன் அவ்வளவுதான்!”

"அப்படின்னா... நீ ஒரு நிபந்தனைக்குக் கட்டுப்படணும்...”

"நிபந்தனையா? என்ன நிபந்தனை?”

“கோவில் நிலத்துல காலேஜ் கட்டிட்டா... அது சிவனோட சொத்தாயிடும். அதுக்கப்புறம் அந்தக் காலேஜ் மூலமாய் கிடைக்கிற எல்லா வருமானமும் கோவிலுக்குத்தான் போகணும். நீ அந்த வருமானத்திலிருந்து உன்னோட சொந்தச் செலவுகளுக்காக ஒரு ரூபாய் கூட எடுத்துக்கக் கூடாது.”

ஹரிஹரசுதன் உள்ளுக்குள் உடைந்து சிதறினாலும்... அதை வெளியே கொஞ்சமும் காட்டிக் கொள்ளாமல் ஒரு புன்முறுவலோடு கேட்டார்.

“அய்யா! அது எப்படிச் சாத்தியம்? ஒரு இஞ்ஜீனியரிங் காலேஜ் கட்டணும்ன்னா கோடிக்கணக்காய் பணத்தைக் கொட்டணும். அதுக்கப்புறம் வருமானம் பார்க்கணும். இது ஒரு ஹானரரி பிசினஸ்...”

"நீயே பிசினஸ்ன்னு சொல்லிட்டே! அந்த பிசினஸ்ல லாபம் வந்தா அந்தச் சிவனுக்குப் போய் சேர்றதுதானே முறை?”

"அய்யா! நானொண்ணும் சிவன் சொத்தைத் திருடலையே... திருடினாத்தானே பாவம்; குலநாசம்...!"

"இதோ பார் ஹரி! சிவன் சொத்தைத் திருட வேண்டியதில்லை. அது நமக்குக் கிடைக்கணும்ன்னு நினைச்சாலே பாவம்தான். சிவன் கோவில்ல விளக்கை ஏத்திட்டு வரும்போது விரல்ல எண்ணெய் பட்டுட்டா... அந்த விரலைச் சிவன் சன்னதி வாசற்படியிலேயே தேய்ச்சுட்டு வந்துடணும். அந்த எண்ணெய் பட்ட விரலோடு வீட்டுக்கு வந்தால்கூட அது பாவம். இது கோவிலோட ஆகம விதிகளில் ஒண்ணு.”

ஹரிஹரசுதனின் மனசுக்குள் எரிச்சல் பீறிட்டது. இருந்தாலும் அதை அடக்கிக் கொண்டு கேட்டார்.

"அப்போ... அந்தக் கோவில் நிலத்துல காலேஜைக் கட்ட வேண்டாம்னு சொல்றீங்களா?”

"கட்டலாம்! ஆனா அதுல வர்ற எல்லா வருமானமும் கோவிலுக்கே போகணும். அதிலிருந்து ஒரு ரூபாயை எடுத்து உன்னோட சொந்த நலனுக்கு உபயோகப்படுத்திட்டாக்கூட தீராத பாவம் வந்து சேரும். உன்னோட பரம்பரையையும் பாதிக்கும்.”

ஹரிஹரசுதன் பதில் பேச முடியாதவராய் மௌனித்து உட்கார்ந்திருக்க... நரசிங்கம் தொடர்ந்தார்.

"ஹரி! இந்த விஷயத்துல நான் உனக்கு என்னோட கருத்தைச் சொல்லலாமா?"

"சொல்லுங்கய்யா!"

“கோவில் சம்பந்தப்பட்ட அந்த நிலத்தில் காலேஜ் கட்டுற எண்ணத்தை விட்டுடு... அது உனக்கு வேண்டாம். வேற ஏதாவது ஒரு இடத்துல நிலம் பாரு..."

“அய்யா..! வேற ஊர்ல நிலம் வாங்கறதாய் இருந்தா... கோடிக்கணக்கான ரூபாயை அதுக்கே செலவு பண்ண வேண்டியிருக்கும். இன்னிக்கு ஒரு கிரவுண்ட் நிலம் லட்சங்களில் இல்லை. கோடிகளில் இருக்கு. சரி... நம்ம கிராமத்துலதான் கோவில் நிலம் இருக்கேன்னுதான் காலேஜ் கட்ட நினைச்சேன்."

நரசிங்கம் சிரித்தார். "உன்னோட எண்ணம் உயர்ந்ததுதான். இருந்தாலும் கோவில் நியம விதிகள் உனக்குப் பாதகமாய் இருக்கும்போது அது உனக்கு வேண்டாமே...!"

“அய்யா! நீங்க சொன்ன நிபந்தனைப்படி கல்லூரியிலிருந்து வர்ற வருமானம் எல்லாத்தையும் கோவிலுக்கே கொடுத்துடறேன். எனக்கு அதிலிருந்து ஒரு ரூபாய் கூட வேண்டாம்."

நரசிங்கம் சிரித்தார். "இப்படிச் சொல்றது சுலபம். ஆனா நடைமுறையில இது சாத்தியம் கிடையாது. உனக்கே தெரியாம... உன்னையும் அறியாம தப்பு நடந்தால்கூட உனக்குப் பாதிப்புதான்...!"

"அப்படின்னா... இதை விட்டுட வேண்டியதுதானா?"

“விட்டுடு!"

தீர்மானமான குரலில் சொல்லியபடியே நரசிங்கம் எழுந்து கொண்டார். ஹரிஹரசுதனின் தோள் மீது கையை வைத்தார். “ஹரி! உன் ஜாதகப்படி இன்னும் ஒரு ஆறுமாத காலத்துக்குக் கிரகங்களோட நிலைமை சரியில்லை. சனியும் குருவும் சாதகமான இடங்களில் இல்லை. ‘விநாச காலே விபரீத புத்தி’ன்னு சொல்லுவாங்க. இப்போதைக்கு நீ செய்ய வேண்டிய ஒரே வேலை... உன்னோட மத்த பிசினஸ்களைப் பொறுப்பாய் பார்த்துக்கிறதுதான்.

நரசிங்கம் புறப்பட்டுப் போய்விட... ஹரிஹரசுதன், தன் நெற்றியை இடது கையின் ஆட்காட்டி விரலால் பிடித்தபடி அப்படியே தளர்ந்து போய் உட்கார்ந்திருந்தார். மனைவி தங்கம் பக்கத்தில் வந்தாள்.

"என்னங்க!”

"ம்..."

“என்னோட மனசுக்குள்ளே என்ன நினைச்சுட்டு இருந்தேனோ... அதைத்தான் அய்யாவும் சொல்லிட்டுப் போறார். நமக்கு அந்தக் கோவில் நிலம் வேண்டாங்க...! அய்யா சொன்னா அது சரியாய் இருக்கும்.”

ஹரிஹரசுதன் நிமிர்ந்தார். "இந்தத் தடவை அய்யா சொன்னது சரியில்லை."

“எ...எ...என்ன சொல்றீங்க?"

"நான் அந்தக் கோவில் நிலத்துலதான் இன்ஜீனியரிங் காலேஜைக் கட்டப் போறேன். ‘சிவன் சொத்து குல நாசம்’ன்னு ஒரு பழமொழியைச் சொல்லிச் சும்மா பயமுறுத்தறார். இன்னிக்கும் எத்தனையோ சிவன் கோவில்களில் கடவுள் நம்பிக்கை இல்லாதவர்கள் எக்ஸிக்யூட்டிவ் அதிகாரிகளாய் வேலை பார்த்துக்கிட்டே பணத்தைக் கொள்ளையடிக்கிறாங்க.

“எனக்குத் தெரிஞ்ச ஈ.ஓ. ஒருத்தர் கோவில் பணத்தைக் கோடிக்கணக்கில் சுருட்டி அதில் அபார்ட்மெண்ட்டுகளாய்க் கட்டி வாடகைக்கு விட்டிருக்கார். வாடகை மட்டும் லட்சக்கணக்குல வருது. அவருக்கு ரெண்டு பொண்ணு. ரெண்டு பேரையும் நல்ல வசதியான இடங்கள்ல கட்டிக் கொடுத்திருக்கார். மாப்பிள்ளைகள் ஃபாரின்ல ஐ.டி. கம்பெனிகளில் பெரிய பதவிகளில் இருக்காங்க. பேரன், பேத்தின்னு அமோகமா... சந்தோஷமாய் இருக்காங்க..."

தங்கம் கோபமாய்க் குறுக்கிட்டாள்.

"யாரோ... எப்படியோ இருந்துட்டுப் போறாங்க. நமக்கு அந்தத் தப்பான வழி வேண்டாங்க. நம்மகிட்ட இருக்கிற பணமே நாலு தலைமுறைக்கு வரும். அதே கிராமத்துல வேற இடத்துல நிலம் பாருங்க. காலேஜ் கட்டுங்க. கோவில் நிலம் வேண்டாம்...”

"இதோ பார் தங்கம்...! கிராமத்துல இருக்கிற பெரியவங்க எனக்குக் கோவில் நிலத்தைத் தர்றதுக்கு ஒத்துக்கிட்டாங்களாம். அங்கே தங்கியிருக்கிற நம்ம குமரேசன் எனக்குப் போன் பண்ணிச் சொன்னான். அவங்களே தரும்போது அப்புறம் என்ன?”

"அந்த நிலத்தை அவங்க இஷ்டப்பட்டுத் தந்த மாதிரி எனக்குத் தெரியலைங்க. உங்களுக்குப் பயந்து போய் தர்றாங்க..."

“எப்படியோ... தர்றாங்களா இல்லையா?”

“வேண்டாங்க..!"

"நான் முடிவு பண்ணிட்டேன். அந்தக் கோயில் நிலத்துல காலேஜ் கட்டத்தான் போறேன்!”

ஹரிஹரசுதன் எழுந்து நின்று இரண்டு கைகளையும் உயர்த்தி... வயிறு எக்கி கத்தினார்.

காற்று அதிர்ந்தது.

***

# 9.

உளவியல் துறையில் டாக்டர் பட்டம் பெற்ற தோமாஸ் ட்ரான்ஸ்ரோமர்க்கு இலக்கியத் துறைக்கான நோபல் பரிசு கிடைத்தது. ஒரு வியப்புக்குரிய விஷயம்: தோமஸ் ட்ரான்ஸ்ரோமர் திடீரென்று நோய்வாய்ப்பட்டார். அவரைப் பக்கவாதமும் தாக்கவே உடம்பு செயல் இழந்தது. உடம்பின் இடது பாகம் முற்றிலும் செயலிழந்து... பேச்சும் போன நிலையில் உறுதியோடு இருந்து தன் வலது கையால் மெல்ல மெல்ல எழுதி ஒரு கவிதைத் தொகுப்பை உருவாக்கி வெளியிட்டார். 1966-ல் வெளிவந்த கவிதைத் தொகுப்பு பெரும்பாலான உலக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டது. இவரது பெயர் 18 தடவை நோபல் பரிசுக்குப் பரிந்துரைக்கப்பட்டு 2011-ஆம் ஆண்டு பரிசு கிடைத்துள்ளது.

அமிர்தவர்ஷிணியின் கார் அவளுடைய பங்களாவுக்கு முன்பாய் நின்று ஹார்ன் சத்தத்தை எழுப்பியது.

ராகுலன் கேட்டான். “வீட்ல யாருமே இல்லையே?”

“இல்லை...”

“வீட்ல யாரும் இல்லாதபோது எதுக்காக ஹார்ன் அடிச்சே?”

"கேட்டைத் திறக்க வேண்டாமா?”

“வீட்ல யாரும் இல்லைன்னு சொன்னே?”

"ரோஜர் இருக்கான்.”

"ரோஜரா... யாரது?” - ராகுலன் கேட்டுக் கொண்டிருக்கும்போதே காம்பௌண்ட் கேட் மெல்ல உள்வாங்கியது. இடுப்பளவு உயரத்திற்கு வளர்ந்திருந்த நாய் ஒன்று இரண்டு பக்க கேட்டுகளையும் வாயால் கவ்வித் திறந்து கொண்டிருந்தது.

ராகுலன் மிரண்டு போய் கையில் இருந்த கத்தியை மறுபடியும் அமிர்தவர்ஷிணியின் கழுத்தில் வைத்தான். "அந்த நாய் என்னை ஒண்ணும் பண்ணிடாதே!"

"நீ மொதல்ல கத்தியை எடு...! என் கூட யார் வந்தாலும் ரோஜர் குரைக்க மாட்டான். ஏன்னா... எனக்கு வேண்டியவங்களைத்தான் நான் இந்த வீட்டுக்குக் கூட்டிட்டு வருவேன்னு அவனுக்குத் தெரியும். நீ என்கிட்ட பேசணும்னு சொல்லித்தானே காருக்குள் ஏறி

உட்கார்ந்தே! வா... வீட்டுக்குள்ளே உட்கார்ந்து ஒரு காப்பி சாப்பிட்டுக்கிட்டே பேசுவோம்..." - அமிர்தவர்ஷிணி நைச்சியமாகப் பேசிக் கொண்டே ஆக்ஸிலேட்டரை அழுத்தினாள்.

கார் உள்ளே போயிற்று.

"நீ என்னைப் போலீஸ்ல பிடிச்சுக் குடுத்துடமாட்டியே?"

"சேச்சே! மாட்டேன்."

"நம்பலாமா?"

"தாராளமாய் நம்பலாம். உன்கிட்ட ஏதோ ஒரு பிரச்சனை இருக்கு. அது என்னன்னு எனக்குத் தெரியணும். நான் உளவியல் துறையில் டாக்டரேட் பட்டம் வாங்கினவள். உன்னோட பிரச்சனை என்னன்னு எனக்குத் தெரிஞ்சா ஒருவேளை என்னால உனக்கு உதவ முடியும்."

மென்மையான குரலில் பேசியபடி... அமிர்தவர்ஷிணி காரை போர்டிகோவில் நிறுத்திக் கீழே இறங்குவதற்குள்... ரோஜர் கேட்டைச் சாத்திவிட்டு ஓடி வந்தது. ராகுலனை 'நீ யார்ரா?' என்கிற மாதிரியான ஒரு பார்வை பார்த்துவிட்டு அமிர்தவர்ஷிணியைச் சுற்றி வந்தது. அவள் நாயின் காதைப் பற்றினாள். சகஜமாய்ப் பேசினாள்.

"என்னடா! தட்டுல சாப்பாடு அப்படியே இருக்கு. நீ சாப்பிடலையா?"

அது முனகிக் கொண்டே வாலை வேகமாய்ச் சுழற்றியது.

"உன்னை டாக்டர்கிட்ட கூட்டிட்டுப் போக வேண்டியதுதான்!" - அவளை விட்டு விலகி வந்த ரோஜர் ராகுலனை முகர்ந்துவிட்டு 'ர்ர்ர்...' என்றது.

அமிர்தவர்ஷிணி குரல் கொடுத்தாள். "நோ... ரோஜர்! அவர் நம்ம கெஸ்ட், நீ உன்னோட இடத்துக்குப் போ... கெட் லாஸ்ட் ஃப்ரம் ஹியர்!"

பார்வையில் இன்னமும் சந்தேகம் இருக்க... ரோஜர் மனமின்றி பின்வாங்கி நகர்ந்து போர்டிகோவின் பின்புறத்தில் இருந்த இரும்புக் கூண்டை நோக்கிப் போயிற்று. ராகுலன் நாயையே பார்த்தான். இப்போது அவனிடம் பயம் இல்லை.

"சொன்ன பேச்சைக் கேட்குதே!"

"கேட்காட்டி அடி விழும்னு அதுக்குத் தெரியும்." – அமிர்தவர்ஷிணி சொல்லிக் கொண்டே வாசற்படியேறி கதவில் தொங்கிக்

கொண்டிருந்த பூட்டுக்குச் சாவியைக் கொடுத்தாள். அந்த அகலமான ரோஸ் வுட் கதவு உள் நோக்கிப் போக... இருவரும் நுழைந்தார்கள். பெரிய ஹால் பார்வையில் விரிந்தது.

அமிர்தவர்ஷிணி யோசித்துக் கொண்டே நடந்தாள். 'இவனுக்குச் சந்தேகம் வராதபடி நடந்து கொண்டே போலீஸுக்குத் தகவல் கொடுக்க வேண்டும்!'

'எப்படி?'

ராகுலன் ஹாலில் இருந்த சோபாவில் போய் சாய்ந்து கொண்டான். பார்வை சுற்றும் முற்றும் அலைந்தது.

"இவ்வளவு பெரிய வீட்டுல நீ எப்படித் தனியா இருக்கே?"

"எனக்குப் பழகிப் போச்சு... உனக்குக் காப்பி கொண்டு வரட்டுமா?"

"வேண்டாம்! அந்தக் காப்பியில் நீ எதையாவது ஒண்ணைப் போட்டுக் குடுத்துடுவே...!"

"அப்படியெல்லாம் செய்ய மாட்டேன். என்னை நீ நம்பலாம். உனக்குள்ளே ஏதோ ஒரு பிரச்சினை இருக்கு. அதை என்கிட்ட சொல்லு. என்னால உனக்கு உதவி பண்ண முடியுதான்னு பார்க்கிறேன். உனக்கு காப்பி வேணுமா வேண்டாமா?"

"வேண்டாம்."

"சரி...! உன்னோட பிரச்சனையைச் சொல்லு..." - அவனுக்கு எதிரில் இருந்த சோபாவில் போய் உட்கார்ந்து கொண்டாள் அமிர்தவர்ஷிணி.

ராகுலன் சில விநாடிகள் மௌனமாய் இருந்து விட்டுப் பேச்சை ஆரம்பித்தான்.

"நான் எம்.ஏ. எகனாமிக்ஸ். கோல்ட் மெடலிஸ்ட். என்னோட ஃபேமிலி ஏதோ ஒரு மன்னர் பரம்பரைன்னு அப்பா உயிரோடு இருந்த வரை சொல்லிட்டு இருந்தார். அப்பா இருந்த வரைக்கும் நான் ஒரு சுதந்திரப் பறவையாய் இருந்தேன். நினைச்ச நேரம் வீட்டுக்கு வருவேன். போவேன். நல்லா சாப்பிடுவேன். தூங்குவேன்...

"அப்பா இறந்த பிறகுதான் எனக்கே தெரியாம குடும்பச் சுமை என் தோள் மேல ஏறி உட்கார்ந்துகிச்சு. வேலைக்காக மும்முரமாய் முயற்சி பண்ணினேன். இன்டர்வியூக்களை நல்லமுறையில் அட்டெண்ட் பண்ணினாலும் அப்பாயின்ட்மெண்ட் ஆர்டர் மட்டும் என்னைத்

தேடிவரலை. இப்படியிருக்கும்போதுதான் ஒரு நாள் டி.வி.யில் அந்த ப்ரோக்ராமைப் பார்த்தேன்..." - சொல்லிவிட்டு மௌனமானான் ராகுலன்.

அமிர்தவர்ஷிணி கேட்டாள். "என்ன ப்ரோக்ராம்?"

'நீங்களும் பில்கேட்ஸ் ஆகலாம்...!' படித்துவிட்டு வேலை கிடைக்காமல் விரக்தியில் இருக்கும் இளைஞர்களுக்கு அது ஒரு தன்னம்பிக்கை ஊட்டுகிற நிகழ்ச்சி. அந்த நிகழ்ச்சியைப் பார்த்ததில் இருந்து என் மனசுக்குள்ளே ஒரு புதிய உத்வேகம். நானும் ஒரு பில்கேட்ஸாய் மாறி இந்தியாவிலேயே பெரிய பணக்காரன் என்கிற பெயரை வாங்கச் சபதம் எடுத்துக்கிட்டேன்.

"இன்ட்டர்நெட்ல புதுப்புது பிசினஸ் எது? எது லாபமானது?ன்னு எல்லா வெப்சைட்களுக்கும் போய் சர்வே எடுத்தேன். கடைசியில் ஒரு பிசினஸை செலக்ட் பண்ணினேன். பிசினஸை ஸ்டார்ட் பண்ண பணம் வேணுமே! ஒரு பேங்க் மேனேஜரைப் போய்ப் பார்த்தேன். அவர் என்னோட ப்ராஜக்ட்டைப் பார்த்துட்டு ரொம்பவும் இம்ப்ரஸ் ஆனார். ஒரு பெரிய தொகையை எனக்கு லோனா கொடுத்தார். ஓல்ட் மகாபலிபுரம் ரோட்ல 'ராகுல்ஸ்' என்கிற பேர்ல ஒரு கம்பெனியை ஓப்பன் பண்ணினேன். கம்பெனி முதல் ஆறு மாதம் சுமாராய் இருந்தாலும்... அதுக்கப்புறம் வந்த மூணு வருஷமும் சக்கைப்போடு போட்டது. 200 சதவீதம் லாபம். கம்பெனிக்குச் சொந்தமாய் கட்டடம் வாங்கினேன்!"

"வெரி குட்! அப்புறம்?"

"சென்ட்ரலைஸ்ட் ஏஸி, ரெண்டு பென்ஸ் கார், பெப்பர்மிண்ட் வாசனையோடு ஒரு அழகான பெண் காரியதரிசி, ஒரு ஆங்கிலோ இண்டியன் ஸ்டெனோ. நாலைந்து பேங்க்குகளில் வழிய வழிய கரண்ட் அக்கௌண்ட் பேலன்ஸ், ஃபைவ் ஸ்டார் ஹோட்டல்களில் வாரத்துக்கு ரெண்டு தடவை காக்டெய்ல் பார்ட்டி வித் டின்னர்...

"இப்படிச் சந்தோஷம் தடவிய நிகழ்ச்சிகள் என்னோட வாழ்க்கையில் இடம் பிடிச்சிருந்த காலகட்டத்தில் என்னைவிடப் பத்து மடங்கு சொத்துக்கு அதிபதியான ஒரு ரியல் எஸ்டேட் ஓனர் தன்னோட பொண்ணை எனக்குக் கல்யாணம் பண்ணிக் கொடுக்க முன் வந்தார். அம்மாவுக்கும் இதுல சந்தோஷம். கல்யாணத்துக்கான ஏற்பாடுகள் நடந்துட்டு இருக்கும்போதுதான் ஒரு இடி ஸ்லோமோஷன்ல என்னோட தலையில் இறங்கியது."

அமிர்தவர்ஷிணி நிமிர்ந்து உட்கார்ந்தாள்.

"இடியா...?"

"ம்... இடியேதான்! மத்திய அரசு கொண்டு வந்த ஒரு புதிய பொருளாதாரக் கொள்கை விதியால என் பிசினஸோட ஏற்றுமதித் துறை ஒரு மூணு மாசத்துக்குள்ளே அப்படியே முடங்கிப் போச்சு. அதைத் தொடர்ந்து என் வாழ்க்கையோட ஒவ்வொரு சந்தோஷமும் மெல்ல மெல்லக் காணாமல் போக ஆரம்பிச்சுது.

"ஃபைவ் ஸ்டார் ஹோட்டல்களுக்குப் போனா கட்டுப்படியாகாதுன்னு நினைச்சு மைலாப்பூர் பிராமணாள் அம்பாள் கஃபே-யில் டிபன் சாப்பிட்டேன். காரில் எல்லா இடங்களுக்கும் போகாமல் தேவையான இடங்களுக்கு மட்டும் போய் பெட்ரோலைச் சேமிச்சேன். சம்பளம் கொடுக்க முடியாமப் போனதால ஸ்டாஃப் ஒவ்வொருத்தரும் ராஜினாமா பண்ணிட்டுப் போக... ஆறே மாசத்துல நான் தெருவுக்கு வந்துட்டேன். எனக்குப் பெண் தர்றதாய் சொன்ன ரியல் எஸ்டேட் ஓனர் அவசர அவசரமாய் ஒரே மாசத்துல வேற ஒரு மாப்பிள்ளையைப் பார்த்து ராகவேந்திரா கல்யாண மண்டபத்துல கல்யாணத்தையும் பண்ணி வெச்சுட்டார். அந்தப் பெண்ணுக்குக் கல்யாணம் நடந்த மறுநாள் என்னைக் கீழ்ப்பாக்கம் மென்ட்டல் ஹாஸ்பிடலில் அம்மா அழுதுகிட்டே அட்மிட் பண்ணியிருக்காங்க!"

அமிர்தவர்ஷிணி ராகுலனையே பார்த்துக் கொண்டிருந்தாள். "உன்னோட மனச்சிதைவுக்குப் பின்னாடி இத்தனை விஷயங்கள் இருக்கா?"

“என்ன! அப்படிப் பார்க்கிறே? நான் பில்கேட்ஸ் ஆக ஆசைப்பட்டேன். அது முடியலை. அதான் கோபம். யாரைப் பார்த்தாலும் கோபம் வருது. சிலரை அடிக்கணும் போல் தோணுது. சிலரைப் பார்த்த உடனேயே குத்திக் கொல்லணும் போல் தோணுது... டாக்டர்கள்கிட்ட என்னோட பிரச்சனையைச் சொன்னேன்.

“அவங்க கலர் கலராய் மாத்திரைகளைக் கொடுத்து விழுங்கச் சொன்னாங்க. வாரத்துக்கு ரெண்டு தடவை கவுன்ஸிலிங் கொடுத்தாங்க. யோகா பண்ணச் சொன்னாங்க. எல்லாம் பண்ணினேன். ஒரு பர்சண்ட் கூட என்னோட மனம் அமைதி அடையலை. ஆனாலும் ஹாஸ்பிடல்ல டாக்டர்ஸ் கொடுத்த டார்ச்சரைத் தாங்கிக்க முடியாம குணமாயிட்ட மாதிரி நடிச்சேன். சாந்த சொரூபியாய் மாறிட்ட மாதிரி பாவ்லா பண்ணினேன். டாக்டர்ஸ் நம்பிட்டாங்க. என்னை டிஸ்சார்ஜ் பண்ணி வீட்டுக்கு அனுப்பிட்டாங்க. அம்மாவுக்கு ரொம்பவும் சந்தோஷம். கோவில்களுக்கெல்லாம் போய் பொங்கல் வெச்சுச் சாமி

கும்பிட்டாங்க."

அமிர்தவர்ஷிணி மௌனமாய் அவனையே பார்த்தாள். ராகுலன் சிரித்தான்.

“என்ன... அப்படிப் பார்க்கிறே?"

“ஒண்ணுமில்லை...!"

“இல்லை... நீ என்னமோ சொல்ல வர்றே?”

"நான் சொல்ல நினைச்சதைச் சொன்னா... நீ கோபப்பட மாட்டியே?”

"மாட்டேன்... சொல்லு!”

"நீ பில்கேட்ஸ் மாதிரி பணக்காரன் ஆகணும்ன்னு ஆசைப்பட்டது தப்பில்லை. ஆனா அவருக்கு இருந்த மனஉறுதி இல்லாமல் போனதும்... தோல்விகளை வெற்றிகளாய் மாற்றத் தெரிந்த வழிமுறைகள் உனக்குத் தெரியாமல் போனதும்தான் தப்பு. ஒரு வெற்றியை மகத்தான வெற்றியாய் மாத்தணும்ன்னா சின்னச் சின்னதாய் வரும் நிறையத் தோல்விகளை ஃபேஸ் பண்ணனும். தோல்வியைப் பார்த்து மருண்டு போகாம இருந்திருக்கணும்..."

"இதெல்லாம் எனக்குத் தோணலை. பிசினஸ் நொடிந்து போனதும்... ஏதோ மலையிலிருந்து கீழே உருண்ட மாதிரியான ஃபீலிங். அதுக்கப்புறம் யாரைப் பார்த்தாலும் கோபம் வந்தது."

ராகுலன் பேசிக் கொண்டிருக்கும்போதே அமிர்தவர்ஷிணியின் செல்போன் மறுபடியும் வாயைத் திறந்தது.

“யாரு?”

"டி.வி. சேனலின் டைரக்டர் குகன்."

"பேசு...! ஆனா என்னைக் காட்டிக் குடுக்கிற மாதிரி ஒரு வார்த்தைகூட உன் வாயிலிருந்து வெளிப்படக் கூடாது. வெளிப்பட்டா... அடுத்த நிமிஷம் நீ உயிரோடு இருக்கமாட்டே!”

“அது எனக்குத் தெரியாதா என்ன?” - சொல்லிக் கொண்டே செல்போனை எடுத்துக் காதுக்குக் கொடுத்தாள். மறுமுனையில் குகன் பேசினார்.

“என்ன மேடம்! வீட்டுக்குப் போய் சேர்ந்துட்டீங்களா?”

"ம்... வந்து பத்து நிமிஷமாச்சு...”

"ஃபேக்ஸ் அனுப்பிட்டீங்களா?”

"இல்லை இனிமேத்தான். பை த பை நீலவண்ணக் கண்ணன் எப்படியிருக்கார்?"

"இன்னும் கான்ஷியஸ் திரும்பலை. கமிஷனர் பாலகோபாலும் ஹாஸ்பிடலுக்கு வந்துட்டார். உங்களைக் கேட்டார்.”

"நான் ஹாஸ்பிடலுக்கு வர எப்படியும் ரெண்டு மணி நேரத்துக்கு மேலே ஆயிடும் மிஸ்டர் குகன்...”

"நோ ப்ராப்ளம் மேடம்... டேக் யுவர் ஓன் டைம். நீலவண்ணக் கண்ணனுக்கு கான்ஷியஸ் வந்ததும் நானே உங்களுக்குப் போன் பண்றேன்."

"ப்ளீஸ்..." - செல்போனை அணைத்தாள் அமிர்தவர்ஷிணி.

அவளையே பார்த்துக் கொண்டிருந்த ராகுலன் ஒரு கோணல் சிரிப்போடு கேட்டான்.

“என்ன...! ஆள் இருக்கானா... போயிட்டானா?”

“உயிர் பிழைக்க வாய்ப்பில்லைன்னு டாக்டர்ஸ் சொல்லிட்டாங்களாம். இருந்தாலும் குகன் ட்ரீட்மெண்ட்டை கண்டினியூ பண்ணச் சொல்லியிருக்கார்."

ராகுலன் சிரித்தான்.

"அவனை அமெரிக்காவுக்கே கொண்டு போய் ட்ரீட்மெண்ட் குடுத்தாலும் சரி... அவனைக் காப்பாத்த முடியாது.”

"உன்னோட மனசுக்குள்ளே இருக்கிற கொலைவெறி தேவையில்லாதது. அந்த வெறியை உன்னோட மனசிலிருந்து துடைச்சு எடுக்க என்னால முடியும். நீ என்கிட்ட ட்ரீட்மெண்ட் எடுத்துக்கத் தயாரா? தயார்ன்னா சொல்லு...! இன்னிக்கே நான் ட்ரீட்மெண்ட்டை ஆரம்பிக்கிறேன்.

“ஒரே ஒரு வாரம் இங்கே தங்கு. போலீஸ் பத்தின பயம் உனக்கு வேண்டாம். எந்தக் காரணத்துக்காகவும் நான் உன்னைக் காட்டிக் கொடுக்க மாட்டேன்!”

“அந்த நம்பிக்கை எனக்கு இருந்ததாலத்தான உன்னோட

காருக்குள்ளே நான் ஒளிஞ்சுகிட்டேன். பூட்டியிருந்த காரை நான் எப்படித் திறந்திருப்பேன்னு யோசனை பண்றியா?

“எந்த ஒரு காரையும் பத்தே விநாடியில் திறக்கக்கூடிய சாவி என்கிட்ட இருக்கு. பார்க்கிறியா...?” என்று கேட்டவன்... தன் மார்புப் பகுதியிலிருந்து ஒரு சாவியை எடுத்துக் காட்டினான்.

ஆறு அங்குல நீளத்தில் ஒரு ஊசியைப் போல் கூர்மையாய் இருந்தது - அந்தச் சாவி,

பயத்தோடு அதைப் பார்த்தாள்.

‘இவன் சாதாரண நபர் இல்லை. இவனை எச்சரிக்கையோடு கையாள வேண்டும்...! புத்திசாலித்தனம் நிறையவே இருக்கிறது!’ - அமிர்தவர்ஷிணி யோசித்துக் கொண்டிருக்கும்போதே... எல்லாப் பற்களும் தெரிய அவன் சிரித்தான்.

“இப்ப உன்னோட பார்வையில் பயம் தெரியுது. பயப்படாதே! நான் உன்னை ஒண்ணும் பண்ணமாட்டேன். எனக்கு இந்த உலகத்துல ஒரு சிலரை மட்டும்தான் பிடிக்கலை. அவங்களைத்தான் கொலை பண்ணணும்ன்னு எனக்குத் தோணுது. யார் யார் உயிரோடு இருக்கக்கூடாதுன்னு நான் நினைக்கிறேனோ அவங்களை யெல்லாம் இந்த செல்போன்ல போட்டோ எடுத்து வெச்சிருக்கேன். எனக்குச் சரியான சமயம் வாய்க்கும்போது... அவங்களோட கதையை முடிச்சுடுவேன். அதுக்கு முன்னாடி நான் குணமாகணும். நீதான் என்னைக் குணப்படுத்தணும்.”

“அந்தச் செல்போனை நான் பார்க்கலாமா?”

ராகுலன் தயங்கினான்.

“என்ன தயக்கம்?”

"உன்னை நம்பறதா வேண்டாமான்னு மனசுக்குள்ளே ஒரு சின்னக் குழப்பம்."

“என்னை நம்பி வந்தவங்களுக்கு நான் என்னிக்குமே துரோகம் பண்ணமாட்டேன். உனக்குள்ளே இருக்கிற அந்தக் கொலை வெறியைக் காணாமல் போகும்படி செய்ய என்னால முடியும். இந்த வீட்டுல நீ ரெண்டு நாள் இருந்தாப் போதும்.

"நான் தர்ற கவுன்சிலிங்கும் சொல்லித் தர்ற பிசியோதெரபி எக்ஸர்சைஸும் உன்னை ஒரு சராசரி மனிதனாய் மாற்றும்.

ட்ரீட்மெண்ட் முடிஞ்சதும் நீ எனக்கு ஒரு நன்றியைச் சொல்லிட்டுப் போயிட்டே இருக்கலாம்.

“போலீஸ்ல உன்னைக் காட்டிக் கொடுக்க மாட்டேன்! என் மேல் உனக்கு நம்பிக்கையில்லைன்னா இப்பவே புறப்பட்டுப் போயிடலாம்!”

"உன்னை நம்பறேன்!”

"அப்படின்னா... உன்னோட செல்போனை என்கிட்ட குடு!"

"பார்த்துட்டுக் குடுத்துடணும்.”

"சரி!”

ராகுலன் தன் பாக்கெட்டில் பத்திரப்படுத்தி வைத்திருந்த செல்போனை எடுத்து அமிர்தவர்ஷிணியிடம் கொடுத்தான்.

***

# 10.

**2011-**ஆம் ஆண்டுக்கான ‘அமைதி’ பிரிவில் பெண்களின் உரிமைக்காகக் குரல் கொடுத்து அவர்களின் முன்னேற்றத்துக்காக அயராது உழைத்து வரும் மூன்று பேர்களுக்கு நோபல் பரிசு கொடுக்கப்பட்டுள்ளது. இதில் உள்ள ஹைலைட்டான விஷயம் என்னவென்றால் அந்த மூன்று பேரும் பெண்கள் என்பதுதான். முதல் பெண்மணி மேற்கு ஆப்பிரிக்காவின் லைபீரிய நாட்டின் பிரதமர் எல்லன் ஜான்சன் சர்லீஃப். ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில் படித்துப் பட்டம் பெற்ற இவர், ஐக்கிய நாடுகள் உதவியோடு, உள்நாட்டுப் போரால் பெரிதும் பாதிக்கப்பட்டு இருந்த தன் நாட்டையும், பெண்களின் வாழ்வாதாரத்தையும் உயர்த்தக் கடுமையாய் உழைத்தார். இரண்டாவது பெண்மணியின் பெயர் லேமா போவீ. இவரும் அதே லைபீரிய நாட்டைச் சேர்ந்தவர். இஸ்லாமியப் பெண்களும், கிறிஸ்துவப் பெண்களும் ஒற்றுமையுடன் இணைந்து அநீதிகளுக்கு எதிராகப் போராட வேண்டும் என்று வலியுறுத்தினார். நோபல் பரிசு பெற்ற மூன்றாவது பெண் ஒரு பத்திரிகையின் ஆசிரியர். ஏமன் நாட்டைச் சேர்ந்த இவரின் பெயர் டவாகூல் கார்மன். ஏமன் நாட்டில் உள்ள பிரதான கட்சியான ‘இஸ்லா’வில் ஒரு முக்கியப் பதவியும் வகித்து வந்தார். ஏமன் நாட்டின் அதிபர் சாலே மக்களுக்கு விரோதமாக ஆட்சி செய்வதைக் கண்டித்து டவாகூல் கார்மன் போராட்டம் நடத்திப் பெரும் வெற்றி பெற்றார்.

"அம்மா! வணக்கம்."

அந்தச் சாயந்தர வேளையில் ரோஜா செடிகளுக்கு உரம் வைத்துக் கொண்டிருந்த தங்கம் தன் முதுகுக்குப் பின்னால் எழுந்த குரல் கேட்டுத் திரும்பினாள்.

ஒரு பெரியவர் நின்றிருந்தார். எழுபது வயது இருக்கலாம். நரைத்த தலையைப் படிய வாரி... நெற்றிக்கு ஸ்ரீ சூர்ணம் இட்டிருந்தார். கண்களில் பழங்கால பிரேமுடன் கூடிய மூக்குக் கண்ணாடி. கையில் ஒரு மஞ்சள் பை. அணிந்திருந்த சட்டையும் வேஷ்டியும் அவ்வளவு வெள்ளையாய் இல்லை. பஸ் பயணமோ ரயில் பயணமோ அவரைக் களைப்பாகக் காட்டியது.

தங்கம் எழுந்தாள். "உங்களுக்கு யார் வேணும்?"

"அம்மா! நான் கிராமத்திலிருந்து வர்றேன். எம்பேரு தவசியப்பன். ஆரம்பகால பஞ்சாயத்து யூனியனில் சர்வேயராய் இருந்தேன். நம்ம

அய்யா கோவில் நிலத்துல என்ஜீனியரிங் காலேஜ் கட்டறதைப் பத்திக் கிராமத்துல பேசிக்கிட்டாங்க. அது சம்பந்தமாய் அய்யாகிட்ட எனக்குத் தெரிஞ்ச ஒரு உண்மையைச் சொல்லிட்டுப் போகலாம்ன்னு வந்தேன்."

"உண்மையா...! என்ன உண்மை?"

"அம்மா! நான் பல வருஷகாலம் நில சர்வேயராய் இருந்த காரணத்தால எனக்கு அந்தக் கிராமத்தில் இருக்கிற நிலங்களைப் பற்றிய எல்லாத் தகவல்களும் தெரியும். ரெண்டு நாளைக்கு முன்னாடி நூறு வருஷத்துக்கு முந்தின சில பேரண்ட் டாக்குமெண்ட்ஸைப் படிச்சுப் பார்த்துட்டு இருக்கும்போதுதான் அந்த உண்மை எனக்குத் தெரிஞ்சுது. அய்யா இப்போ காலேஜ் கட்டப்போற அந்த நிலம் உண்மையிலேயே கோவிலுக்குச் சொந்தமானது இல்லை..."

“பின்னே?”

"அய்யாவோட பரம்பரைக்குச் சொந்தமானது.”

தங்கத்தின் விழிகள் விரிந்தன. “உண்மையாகவா?"

“ஆமாங்கம்மா! அய்யாவோட தாத்தா பெருமாள்சாமி எழுதிக் கொடுத்த ஒரு உயில் சாசனத்தில் அந்த நிலம் குறித்து ஒரு தகவல் இருக்கு. அய்யாகிட்ட விபரத்தைச் சொல்லி அந்த உயில் சாசனத்தோட பிரதியைக் கொடுத்துட்டுப் போலாம்ன்னு வந்தேன்."

பெரியவர் பேசிக் கொண்டிருக்கும்போதே மாடி சிட்-அவுட்டிலிருந்து குரல் கேட்டது.

“தங்கம்! அங்கே யாரோடு பேசிட்டு இருக்கே?”

தங்கம் தலையை உயர்த்தினாள். சிட் அவுட் ஜன்னலில் ஹரிஹரசுதனின் முகம் தெரிந்தது.

“உங்களைப் பார்த்து அந்தக் கோவில் நிலம் விஷயமாய்ப் பேச கிராமத்திலிருந்து வந்திருக்காங்க. ஏதோ உயில் சாசனம் இருக்காம். உங்ககிட்ட கொடுக்கணுமாம்."

“மேலே வரச் சொல்லு! அப்படியே ரெண்டு காபியும் கொண்டா...!”

“சரிங்க..."

பெரியவர் பழைய பாத்திரங்கள் அடங்கிய மஞ்சள் பையை ஒரு பொக்கிஷம் போல் வைத்துக் கொண்டு உள்ளே போனார்.

தங்கம் ரோஜா செடிகளுக்கு உரம் வைக்கும் வேலையை நாளைக்குப் பார்த்துக் கொள்ளலாம் என்று தள்ளி வைத்துவிட்டு எழுந்தாள்.

வேக நடையில் சமையலறைக்குப் போய் பாலைக் காய்ச்சிக் காப்பியைக் கலந்து இரண்டு டம்ளர்களில் ஊற்றிக் கொண்டு மாடியறைக்குப் போனாள்.

கதவு சாத்தியிருந்தது.

இடது கையால் தள்ளித் திறந்தாள். உள்ளே பார்வை போக... தலைக்குள் மின்சாரம் பாய்ந்த உணர்வு.

சோபா அருகே ஹரிஹரசுதன் குப்புற விழுந்து இருந்தார்.

இரண்டு கைகளும் மடங்கியிருக்க... முதுகில் கத்தி பாய்ந்திருந்தது. அணிந்திருந்த முழுக்கை பனியன் முழுவதும் கம்யூனிஸ்ட் கொடியின் நிறம்.

***

# 11.

பொருளாதாரத் துறையில் நோபல் பரிசு பெற்றவர்கள் இரண்டு பேர். இருவரும் அமெரிக்கர்கள். ஹார்வர்ட் யூனிவர்சிட்டியில் பிஎச்.டி. பட்டம் பெற்ற இவர்கள் பொருளாதாரப் பேராசிரியர்களாகப் பணியாற்றி வருகிறார்கள். ஒருவரின் பெயர் தாமஸ் சார்ஜண்ட்; இன்னொருவரின் பெயர் கிறிஸ்டோபர் ஸ்மித். பொருளாதாரத் துறை சிக்கலானது. உலக நாடுகளுக்கிடையில் இருக்கும் பொருளாதாரப் பிரச்சனைகளுக்கு தீர்வு என்ன என்பதை இவர்கள் விளக்கமாக தங்கள் ஆய்வுக்கட்டுரையில் தெரியப்படுத்தியுள்ளார்கள். ஒரு நாட்டின் உள்நாட்டு உற்பத்தி, பணவீக்கம், வேலை வாய்ப்பு, முதலீடுகள், ஃபண்டுகள், மியூச்சுவல் ஃபண்டுகள் ஆகியவைக்கு இடையே உள்ள தொடர்பு குறித்து ஆய்வு செய்து அதைத் தீர்வுக்கு உட்படுத்தி ஒரு புதிய பொருளாதாரக் கொள்கையை உருவாக்கினார் சார்ஜண்ட். அந்தப் புதிய முறைக்குப் பெயர் மைக்ரோ எகனாமிக்ஸ். ஆனால் ஸ்மித்தின் முறை இதிலிருந்து மாறுபட்டது. வட்டி விகிதம் உயரும் போதும், குறையும் போதும் ஒரு நாட்டின் பொருளாதாரம் எந்த வகையான மாற்றங்களுக்கு உட்படுகிறது என்பதை இவரது ஆய்வு முறை விளக்குகின்றது.

அமிர்தவர்ஷிணி, ராகுலன் கொடுத்த செல்போனைப் பார்த்தாள்.

அது விலை உயர்ந்த ஸ்மார்ட் செல்போன். பளபளப்பான ஃபைபர் உடம்போடு கண்ணைப் பறித்தது.

“செல்போன் நல்லாயிருக்கு!"

“இந்தச் செல்போனை எதுக்காக நான் வாங்கினேன்னு தெரியுமா?"

“எதுக்கு?”

“அதான் சொன்னேனே...! எனக்கு வேண்டாதவங்களையும் என்னோட மனசுக்குப் பிடிக்காதவங்களையும் போட்டோ எடுக்கத்தான்...!"

“போட்டோ எடுத்து...?”

“ஒவ்வொருத்தரையும் தீர்த்துக் கட்டத்தான்! நான் ஏற்கெனவே சொன்ன மாதிரி சிலரைப் போட்டோ எடுத்து வெச்சிருக்கேன். போட்டோ ஆப்ஷன்ல போய்ப் பாரு!”

அமிர்தவர்ஷிணி செல்போனை உயிர்ப்புக்குக் கொண்டு வந்து போட்டோ ஆப்ஷனைத் தேடிக் கண்டுபிடித்து ‘வியூ’ க்ளிக் செய்தாள். செல்போனில் டிஸ்ப்ளே திரையில் குட்டி குட்டியாய் போட்டோக்கள் தெரிந்தன.

எல்லாமே ஆண்கள்.

மொத்தம் பதினோரு போட்டோக்கள்.

ஒவ்வொரு போட்டோவையும் ஜூம் செய்து பார்த்தாள். பார்த்துக் கொண்டிருக்கும்போதே ராகுலன் சொன்னான்.

“இந்தப் பதினோரு பேரையும் முதல் தடவையாய் பார்க்கும்போதே எனக்குப் பிடிக்கவில்லை. அந்த நிமிஷமே அவங்களுக்குத் தெரியாம போட்டோ எடுத்துட்டேன். அவங்க பின்னாடியே போய் வீட்டு அட்ரஸையும் கண்டு பிடிச்சுட்டேன்!”

அமிர்தவர்ஷிணி வியர்த்த முகமாய் ராகுலனை ஏறிட்டாள்.

"இந்தப் பதினோரு பேரில் இப்ப எத்தனை பேர் உயிரோடு இருக்காங்க?"

“ஒருத்தனோட கதையைத்தான் முடிச்சிருக்கேன். மீதியுள்ள பத்துப் பேரையும் போட்டுத் தள்ள கை பரபரங்குது. ஆனா மனசு தப்புன்னு சொல்லுது. இந்த அவஸ்தையிலிருந்து தப்பிக்கத்தான் உன்னோட உதவியைத் தேடி வந்திருக்கேன்."

“இந்தப் பதினோரு பேரில் இப்ப யார் உயிரோடு இல்லை?”

"ஹரிஹரசுதன்...”

அமிர்தவர்ஷிணி செல்போனின் டிஸ்ப்ளேயைக் காட்டினாள். “இதுல யார் ஹரிஹரசுதன்?”

"இதோ இவன்தான்.”

"நெற்றியில் சந்தனப் பொட்டும் குங்குமமுமாய் இருக்காரே?”

"ம்... போன மாசம் ஒரு நாள் இவனைக் காலையில் வாக்கிங் போகும்போதுதான் பார்த்தேன். பார்த்த முதல் பார்வையிலேயே எனக்குப் பிடிக்கலை. அப்படியே பாய்ஞ்சு கழுத்தைப் பிடிச்சு நெரிச்சுக் கொல்லணும் போல் இருந்தது. என்னைக் கட்டுப்படுத்திக்கிட்டேன். வீடு எங்கே இருக்குன்னு தெரிஞ்சுக்கிறதுக்காக இவனை ஃபாலோ பண்ணினேன்.

அதுக்கப்புறம் ஒரு வாரம் இந்த ஹரிஹரசுதனைப் பற்றிய தகவல்களைச் சேகரிச்சேன். நான் கேள்விப்பட்ட தகவல்கள் இவன் அவ்வளவு நல்லவன் இல்லைன்னு சொல்லவே... ஒரு கிராமத்துப் பெரியவர் மாதிரி போய் ஒரு நிமிஷ நேரத்துல மயக்க மருந்தை ஸ்ப்ரே பண்ணி... கத்தியால குத்தி இவனைத் தீர்த்தேன்.

“அதுக்கப்புறம்தான் என்னோட மனசுக்கு ஒரு சந்தோஷம் கிடைச்சது. அந்தச் சந்தோஷம் ரெண்டு நாளைக்குத்தான். அதுக்கப்புறம் இந்தச் செல்போன்ல இருக்கிற மற்ற பத்து பேரையும் தீர்த்துக் கட்டணும்போல் ஒரு வெறி. இந்த வெறியின் காரணமாய் ராத்திரி நேரங்களில என்னால தூங்க முடியறது இல்லை...!”

அமிர்தவர்ஷிணி ஒரு சின்னப் புன்னகையோடு கையமர்த்தினாள். "இனிமேல் அந்தக் கவலை வேண்டாம். இது ஒருவகையான டிப்ரஷன்தான். நான் ட்ரீட்மெண்ட் தர்றேன். ஒரே வாரத்துல உன்னோட மனசுக்குள்ளே இருக்கிற அந்தக் கொலை வெறி காணாமப் போயிடும்.”

"நீ தர்ற ட்ரீட்மெண்ட் என்னைக் குணப்படுத்துமா?”

"நிச்சயமாய்...”

“என்னைப் போலீஸ்ல காட்டிக் கொடுத்துடமாட்டியே?”

“என்னைப் பொறுத்தவரை நீ கொலைகாரன் இல்லை. மனஅளவில் பாதிக்கப்பட்ட ஒரு நோயாளி. உன்னைக் குணப்படுத்தி அனுப்பறதுதான் என்னோட நோக்கம். உன்னால இனிமே யாரும் உயிரிழக்கக் கூடாது. இந்த நிமிஷத்திலிருந்தே நான் ட்ரீட்மெண்ட்டை ஆரம்பிச்சுடறேன். வா! உள்ளே இருக்கிற என்னோட பர்சனல் அறைக்குப் போயிடலாம்..." - சொல்லிக் கொண்டே அமிர்தவர்ஷிணி நடக்க ஆரம்பித்துவிட... ராகுலன் பின்தொடர்ந்தான்.

வீட்டின் உள்ளே இருந்த ஒரு அறைக்குள் நுழைந்தார்கள். "இது என்னோட ரீடிங் ரூம். இந்த அலமாரியில் இருக்கிற புக்ஸ் எல்லாமே சைக்காலஜி சம்பந்தப்பட்டவை."

ராகுலன் அந்த அறையை மிரள மிரளப் பார்த்துக் கொண்டிருக்கும்போதே... அமிர்தவர்ஷிணி அங்கிருந்த ஃபிரிட்ஜைத் திறந்து ஒரு பாட்டிலை எடுத்து அதில் இருந்த இளஞ்சிவப்பு நிற திரவத்தை ஒரு டம்ளரில் ஊற்றி ராகுலனிடம் கொடுத்தாள்.

"இதை மொதல்ல குடி...!"

"என்ன இது?"

"ந்யூரோ மீல்."

"ந்யூரோ மீல்! அப்படின்னா?"

"ஒரு டின்னரோ லஞ்ச்சோ சாப்பிடறதுக்கு முன்னாடி சூப் சாப்பிடறோம். அது எதுக்கு?"

"பசி எடுக்கத்தான்."

"அதே மாதிரிதான் இதுவும்...! ந்யூரோ மீல்-ங்கிறது நரம்புகளுக்கான ஒரு திரவ உணவு. இது ரத்தத்துக்குள்ளே கலந்து நரம்புகளுக்குள்ளே பாயும்போது உனக்கு ஒரு புத்துணர்ச்சி கிடைக்கும். ம்... சாப்பிடு!"

அவன் தயங்கினான்.

"நான் இதுல ஏதாவது கலந்து இருப்பேன்னு பயப்படறியா? அப்படி ஒரு பயம் உனக்கு இருந்தா சொல்லு... மொதல்ல நான் சாப்பிடறேன். அதுக்கப்புறமாய் நீ சாப்பிடு."

"இல்ல...! அதைக் குடு. நானே சாப்பிடறேன்."

ராகுலன் டம்ளரை வாங்கினான். ஒரே மூச்சில் குடித்து விட்டுக் காலி டம்ளரை நீட்டினான்.

"ஏதோ சர்பத் மாதிரி இருக்கு!"

"அப்படிச் சோபாவில் உட்கார்..."

உட்கார்ந்தான்.

அமிர்தவர்ஷிணியும் எதிரில் இருந்த சோபாவுக்குச் சாய்ந்தாள்.

"ராகுலன்!"

"ம்..."

"நான் இப்போ உன்கிட்ட சில கேள்விகள் கேட்கப் போறேன். நீ அதுக்கு உண்மையான பதில்களைச் சொல்லணும்."

"சரி!" என்றவன் சட்டென்று தலையைப் பிடித்துக் கொண்டான்.

“என்ன... ராகுலன்?”

"தலை சுத்தற மாதிரி இருக்கு."

அமிர்தவர்ஷிணி சிரித்தாள்.

"மயக்கம் வர்ற மாதிரியும் இருக்குமே?”

ராகுலன் திடுக்கிட்டான்.

“ஏ...ஏ...ஏய்... நீ என்னை ஏமாத்திட்டே...!"

கோபமாய்க் கத்திக் கொண்டு எழ முயன்றவன் அப்படியே தட்டுத்தடுமாறி சோபாவுக்குள் விழுந்தான்.

மறுபடியும் எழ முயன்றான்.

முடியவில்லை. அப்படியே கண்கள் சோர்ந்து துவண்டு சரிந்தான்.

அமிர்தவர்ஷிணி புன்னகைத்த முகமாய் எழுந்தாள்.

அறைக்கு வெளியே வந்து கதவைச் சாத்தினாள். தாழிட்டு ஒரு பூட்டைப் போட்டுப் பூட்டினாள்.

பிறகு தன்னுடைய செல்போனை எடுத்துக் கொண்டு போலீஸ் கமிஷனர் பாலகோபாலின் எண்களைத் தட்டினாள்.

***

# 12.

**நோபல் பரிசு கிடைக்காவிட்டாலும் சில அறிஞர்கள் கண்டறிந்த உண்மைகள்: 1936-ல் டாக்டர் ஹான்ஸ் சென் என்பவர் மனஅழுத்தம் ஒருவருக்கு ஏற்படும்போது அந்த மனிதனின் ரத்த ஓட்டத்தில் விஷத்தன்மை பரவுகிறது என்கிற உண்மையைக் கண்டறிந்தார்.**

**டாக்டர் ஹான்ஸ் சென் ஒரு சிறந்த உளவியல் நிபுணர். இந்த உண்மையை நிரூபிக்க அவர் எலிகளை வைத்துச் சோதனை செய்தார். உதாரணத்திற்கு எலிகளைக் குளிர் அதிகமான இடத்தில் விடுதல், மோட்டார் ஓடுகிற பெட்டிக்குள் விடுதல், அதைக் கொல்லப் போவது போல் மிரட்டுவது போன்ற பல வகையான பரிசோதனைகளை நடத்திச் சோதனைகளின் முடிவில் அவை இறந்ததும் அந்த எலிகளைப் பிரேத பரிசோதனை செய்தார்.**

**மன அழுத்தம் கொடுக்கப்பட்ட அனைத்து எலிகளிலும் பிட்யூட்ரி சுரப்பியில் மாற்றங்கள், அட்ரினல் சுரப்பி வீக்கம், வயிற்றுப் புண் மாற்றங்களைக் கண்டறிந்தார். அதே போன்ற மாற்றங்களை ஃபார்மால்டீஹைட் என்ற விஷத்தன்மை வாய்ந்த ரசாயனப் பொருளை உடலில் செலுத்தியதால் இறந்துவிட்ட எலிகளிலும் கண்டார். பரிசோதனையின் முடிவில் அவர் தெரிவித்த கருத்து இதுதான்: ஒரு மனித உடலில் விஷப்பொருளான 'ஃபார்மால்டீஹைட்'டை செலுத்தினால் ஏற்படுகிற மாற்றங்களை, மன அழுத்தம் உண்டாக்குகிறது.**

போலீஸ் கமிஷனர் பாலகோபால் தன் செல்போன் ரிங்டோனை வெளியிட்டதும், அதை எடுத்துக் காதில் பொருத்திக் கொண்டே ஹாஸ்பிடலின் ஜன்னல் பக்கமாய் வந்து நின்று கொண்டு பேச ஆரம்பித்தார்.

“ஹலோ!”

“ஸார்... நான் அமிர்தவர்ஷிணி!"

"சொல்லுங்க மேடம்... நான் இப்போ ஹாஸ்பிடல்ல இருக்கேன். நீங்க ஏதோ உங்க சன்னுக்கு ஃபேக்ஸ் அனுப்ப வேண்டிய வேலை இருக்குன்னு சொல்லி வீட்டுக்குப் போயிட்டதாய் குகன் சொன்னார். உங்களுக்காகத்தான் நான் இங்கே வெயிட் பண்ணிட்டிருக்கேன். நீங்க புறப்பட்டு வர்றீங்களா?”

"இல்ல ஸார்! நீங்கதான் இப்ப என்னோட வீட்டுக்கு வரணும்."

“உங்க வீட்டுக்கா...! எதுக்கு?”

“அந்த ராகுலன் என்கிட்ட மாட்டிகிட்டான். ஒரு ரூமுக்குள்ளே போட்டு பூட்டி வச்சிருக்கேன்."

மறுமுனையில் கமிஷனர் வியப்பின் உச்சிக்குப் போனார்.

"ரியலி! அவன் எப்படி... உங்ககிட்ட? நீங்க சொல்றது உண்மையா?”

"உண்மையோ உண்மை...! நீங்க நேர்ல புறப்பட்டு வாங்க ஸார்! நடந்தது என்னாங்கிறதை விபரமாய் சொல்றேன்.”

"நான் ஒரு போலீஸ் படையோடு புறப்பட்டு வர்றேன். அவனால உங்களுக்கு எந்த ஆபத்தும் வராதபடி பார்த்துக்குங்க..."

“அவனால எனக்கு எந்த ஆபத்தும் வர வாய்ப்பில்லை ஸார்! ஏன்னா... அவன் இப்போ இருக்கிற மயக்க நிலையில்... மறுபடியும் அவனுக்குச் சுயஉணர்வு வர எப்படியும் ஆறு மணி நேரமாயிடும்.”

"இதோ! உடனே புறப்பட்டு வர்றோம்!” - சொன்ன கமிஷனர் சற்றுத் தூரத்தில் ஐ.ஸி. யூனிட்டுக்கு எதிரே நின்றிருந்த குகனையும் இன்ஸ்பெக்டர் எழில் வரதனையும் நோக்கிப் போனார். அவர்களிடம் விஷயத்தைச் சொல்ல... இரண்டு பேருமே நம்பமுடியாத பார்வையோடு அதிர்ந்து போனவர்களாய்க் கேட்டார்கள்.

“எப்படி ஸார்?"

"நேர்ல போனாத்தான் விபரம் தெரியும். வாங்க புறப்படலாம்."

எழில் வரதன் குறுக்கிட்டார்.

“ஸார்! இங்கே நீலவண்ணக் கண்ணனுக்கு எந்த நிமிஷத்திலும் சுயஉணர்வு வர்றதுக்கு வாய்ப்பு இருக்குன்னு டாக்டர் சொல்லியிருக்கார். வாக்குமூலம் வாங்க வேண்டாமா?”

"அந்த ட்யூட்டிக்கு ஒரு கான்ஸ்டபிளைப் போட்டுட்டு நீங்க என்கூடப் புறப்படுங்க! மிஸ்டர் குகன்... நீங்களும் வாங்க...”

எல்லோரும் அடுத்த சில நிமிஷங்களில் புறப்பட்டார்கள்.

சாலையில் வேகமான பயணம்.

காரில் போய்க் கொண்டிருக்கும்போதே கண்ட்ரோல் ரூமுக்குத் தகவல் கொடுத்து அமிர்தவர்ஷிணியின் வீட்டுக்கு ஒரு போலீஸ் படையை அனுப்பும்படி கட்டளை பிறப்பித்தார்.

சிக்னல்களோடு கூடிய சிரமமான போக்குவரத்தில் இருபது நிமிஷப் பயணம்.

ஜீப்பும் காரும் அமிர்தவர்ஷிணியின் வீட்டுக் காம்பவுண்டுக்குள் நுழைந்தபோது அவள் பதட்டத்தோடு போர்டிகோவுக்குப் பக்கத்தில் நின்றிருந்தாள். இரண்டு வாகனங்களையும் பார்த்ததும் ஓடி வந்தாள்.

"வாங்க ஸார்!"

கமிஷனர் பாலகோபாலும், இன்ஸ்பெக்டர் எழில் வரதனும் அவளை நெருங்க... குகன் பின்னாலேயே வந்தார்.

"மேடம் அவன் எப்படி உங்ககிட்ட?"

அமிர்தவர்ஷிணி நடந்து கொண்டே... நடந்த சம்பவங்களைச் சொல்லி முடித்தாள்.

கமிஷனர், இன்ஸ்பெக்டர், குகன் - மூன்று பேர்களின் முகங்களும் வெளிச்சத்துக்குப் போயிற்று.

"யூ ஹேவ் டன் ஏ குட் ஜாப் மேடம்! சமயோசிதமாய் செயல்பட்டு ஒரு ஆபத்தான நபரை மடக்கியிருக்கீங்க..."

எல்லோரும் பூட்டப்பட்ட அந்த அறைக்கு முன்பாய் வந்து நின்றார்கள். கமிஷனர் இன்ஸ்பெக்டரிடம் திரும்பினார்.

"எழில் வரதன்!"

"ஸார்!"

"ரிவால்வரை அலர்ட்ல வையுங்க..."

அமிர்தவர்ஷிணி புன்னகைத்தாள். "அதுக்கு அவசியமே இல்லை ஸார்! அவன் இப்போ ஆழ்ந்த மயக்கத்தில் இருப்பான். அவனுக்கு மறுபடியும் சுயஉணர்வு வர எப்படியும் ஆறு மணி நேரமாயிடும் ஸார்!" - சொல்லிக் கொண்டே தன் கையில் வைத்திருந்த சாவியால் பூட்டுக்கு விடுதலை கொடுத்து கதவு இரண்டையும் விரியத் திறந்தாள்.

முதலில் இன்ஸ்பெக்டர் எழில் வரதன் கையில் ரிவால்வரோடும் ஒரு

எச்சரிக்கை உணர்வோடும் அறைக்குள் நுழைய... மற்றவர்கள் பின்தொடர்ந்து உள்ளே போனார்கள்.

சோபாவைப் பார்த்த அமிர்தவர்ஷிணி அதிர்ந்தாள்.

சோபாவில் ராகுலன் மயக்கமாய்க் கிடந்த இடம் வெறுமையாய் இருந்தது. சுற்றும் முற்றும் தன் பார்வையைத் துரத்தி அலங்க மலங்கப் பார்த்தாள்.

எங்கேயும் இல்லை.

கமிஷனர் கேட்டார். "என்ன மேடம்! ஆள் எங்கே?"

"இந்தச் சோபாவில்தான் மயக்கமாய் கிடந்தான் ஸார்...”

"காணோமே?"

எழில் வரதன் குரல் கொடுத்தார்.

“ஸார்! அங்கே பாருங்க..." - அவர் கைகாட்டிய பக்கம் எல்லோருடைய பார்வையும் போயிற்று.

வெண்டிலேட்டரில் பதிக்கப்பட்டிருந்த கண்ணாடிச் செவ்வகங்கள் காணாமல் போயிருக்க... ஒரு ஆள் நுழையக்கூடிய அளவுக்குச் சதுரம் தெரிந்தது.

"அந்த வெண்டிலேட்டர் வழியாய் தப்பிச்சுட்டுப் போயிருக்கான் ஸார்!” - இன்ஸ்பெக்டர் சொல்ல... அமிர்தவர்ஷிணி நெற்றியைப் பிடித்துக் கொண்டாள்.

“ஸார்... ஐ குட் நாட் பிலீவ்... நான் கொடுத்த ந்யூரோ மீல் அவனை ஆறு மணிநேரத்துக்கு எழ விடாது. அப்படியே அவனுக்குச் சுய உணர்வு வந்தாலும் உடம்பை அசைக்க முடியாது."

“தப்பிச்சுட்டுப் போயிருக்கானே!"

"எழில் வரதன்! நீங்க இந்த வீட்டுக்குப் பின்பக்கம் போய்ப் பாருங்க..."

எழில் வரதன் கையில் ரிவால்வரோடு இரண்டு கான்ஸ்டபிள்களை அழைத்துக் கொண்டு ஓடினார். அமிர்தவர்ஷிணி இடிந்து போய் உட்கார்ந்தாள்.

கமிஷனர் அவளிடம் திரும்பினார். "மேடம்! நீங்க கவலைப்படாதீங்க.

அவனை எப்படியும் பிடிச்சுடலாம்."

"நான் கவலைப்படலை ஸார்... பயப்படறேன்!"

"பயமா... எதுக்குப் பயம்?”

“ஸார்...! நான் கொடுத்த ந்யூரோ மீல் ரொம்பவ பவர்ஃபுல். ஒரு மனுசன் எவ்வளவு பலசாலியாய் இருந்தாலும் அதைக் குடிச்சுட்டா ஆறு மணி நேரத்துக்கு அவனால அசையக்கூட முடியாது.

“ஆனா... இந்த ராகுலன் தப்பிச்சுட்டுப் போயிருக்கான். அதுவும் மேஜை மேல ஏறி வெண்டிலேஷன் கண்ணாடிகளை எடுத்துட்டு அந்தச் சதுரத்துக்குள்ளே உடம்பை நுழைச்சு மறுபக்கம் குதிச்சிருக்கான்.

“அவன் நிச்சயமாய் மனுஷனாய் இருக்க முடியாது ஸார்! அவன்கிட்ட ஏதோ ஒரு அதீதமான சக்தி இருக்கு.

“அவனுக்கு ஒரு ஆளைப் பிடிக்கலைன்னா நிச்சயமாய் ஏதோ ஒரு வகையில் கொலை பண்ணிடுவான். இது அவனோட செல்போன். இந்தச் செல்போன்ல அவன் தனக்குப் பிடிக்காத நபர்களையெல்லாம் போட்டோ எடுத்து வைச்சிருக்கான். மொத்தம் பதினோரு பேர்.

“அதுல ஒருத்தரைக் கொலை பண்ணிட்டான். கொலை செய்யப்பட்ட நபரோட பேர் ஹரிஹரசுதன்னு அவனே சொன்னான்.

“மீதிப் பத்து பேர் யார் யாருன்னு கண்டுபிடிச்சு அவங்களைக் காப்பாத்தியாகணும் ஸார்!"

அமிர்தவர்ஷிணியின் குரலில் தெறித்த பயம்...

கமிஷனர் பாலகோபாலின் இதயத் துடிப்பை அதிகரிக்க வைத்தது.

***

# 13.

ரஷ்யாவில் உள்ள புகழ்பெற்ற மருத்துவமனைகளில் ஒன்று விளாடிமிர் மருத்துவமனை. இந்த மருத்துவமனையில் ‘ஸ்டீரியோ லித்தோகிராபி' என்ற ஒரு ஆராய்ச்சிப் பிரிவு உள்ளது. இந்த ஆராய்ச்சியின் முக்கிய நோக்கம் அழகற்ற குழந்தைகளின் முகங்களை அழகாக மாற்றியமைப்பது. இதற்கு முன்பும் முகத்தை மாற்றி அமைக்கக்கூடிய மருத்துவம் நடைமுறையில் இருந்தது. அந்த நடைமுறையில் கால்களில் இருக்கும் எலும்புகள் அல்லது மார்பில் இருக்கும் விலா எலும்புகளை எடுத்து முகத்தில் பொருத்தி அறுவைச் சிகிச்சை செய்து முகத்தை மாற்றுவார்கள். இந்த முறையில் உள்ள ஒரு முக்கியமான குறைபாடு என்னவென்றால் குழந்தைகளின் கால் அல்லது விலா எலும்புகளை எடுத்தால் அவர்களுடைய வளர்ச்சி பாதிக்கப்படுவதோடு ஆரோக்கியமும் சீர்குலைந்து போய்விடுகிறது. இதன் காரணமாய் இப்போது டாக்டர்கள் ஹைட்ராக்ஸி அபைடட் எனப்படும் ரசாயனப் பொருளை உபயோகப்படுத்தி செயற்கை எலும்புகளைத் தயாரிக்கிறார்கள். அந்த செயற்கை எலும்புகளைப் பயன்படுத்தி கோரமான சிறுவர் சிறுமியர் முகங்களை அழகிய முகங்களாக மாற்றுகிறார்கள். இது மருத்துவத் துறையில் ஒரு புரட்சிகரமான கண்டுபிடிப்பு என்பதை ஆராய்ச்சியாளர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர். ஆனால் இந்தக் கண்டுபிடிப்புக்கு நோபல் பரிசு வழங்கப்படவில்லை.

“இந்த வீடுதான் ஸார்!"

ஜீப்பை நிறுத்தினார் டிரைவர்.

நேரம் இரவு ஒன்பது மணி.

இன்ஸ்பெக்டர் எழில் வரதன் ஜீப்பில் உட்கார்ந்தபடியே பார்த்தார். சிறிய வீடு என்றாலும் நேர்த்தியாய் இருந்தது. காம்பௌண்ட் கேட் சமீபத்திய பெயிண்ட் பூச்சில் இருந்தது. வீட்டின் உள்ளே டியூப்லைட் வெளிச்சம் தெரிந்தது.

“சரியான அட்ரஸ்தானா?”

"ஆமா ஸார்... அந்த ராகுலன் ஜூபிடர் டி.வி. நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வந்தபோது அவன் கொடுத்த அட்ரஸ் இதுதான். நம்பர் ஒன்பது, வாட்டர் டேங்க் ரோடு, வேளச்சேரி."

எழில் வரதன் இறங்கினார். தெரு, ஆள் நடமாட்டம் இல்லாமல் அமைதியாய் இருந்தது. கேட்டைத் திறந்து கொண்டு உள்ளே போய் கதவின் இடது பக்கம் ஒளிந்திருந்த காலிங் பெல்லுக்குரிய பட்டனைத் தட்டினார்.

கதவு சில வினாடிகளிலேயே திறந்தது. ஒரு வயதான பெண் பார்வைக்குக் கிடைத்தாள். போலீஸ் யூனிஃபார்மைப் பார்த்ததும் மிரண்டாள். “யா… யார் வேணும்?”

“ராகுலன் வீட்டுல இல்லையா?”

“அ…அ…அவன் வெளியே போயிருக்கான்ய்யா!”

“வெளியேன்னா… எங்கே?”

"ஏ…ஏ…ஏதோ டி.வி. ஸ்டேஷனுக்குப் போகணும்ன்னு சொன்னான். அய்யா! எதுக்காக அவனைக் கேட்கறீங்க?"

"அவனோட அம்மாவா நீங்க?”

"ஆமாங்கய்யா…”

“உங்க மகனுக்கு மனநலம் பாதிக்கப்பட்டு இருந்ததா?”

“அது கொஞ்ச காலத்துக்கு முன்னாடி! இப்ப அவன் மத்தவங்களைப் போலத்தான் இருக்கான். அய்யா! அவனைத் தேடிட்டு எதுக்காக வந்திருக்கீங்க?"

“உங்க பையன் டி.வி. ஸ்டேஷன்ல நிகழ்ச்சி நடந்துட்டு இருக்கும்போது ஒருத்தரைக் கத்தியால குத்திட்டுத் தப்பிச்சுட்டான்!”

அந்த அம்மாள் தன் இரண்டு கைகளாலும் இதயப்பகுதியைப் பிடித்துக் கொண்டாள். உடல் நடுங்கியது. குரல் குழறியது.

"அ…அ…அய்யா… என்ன சொல்றீங்க…? என் மகன் ஒருத்தரைக் குத்திட்டானா?”

"ஆமா…" என்று சொல்லிக் கொண்டே வீட்டுக்குள் அடியெடுத்து வைத்தார் எழில் வரதன்.

“அய்யா! ராகுலன் அப்படியெல்லாம் பண்ணக் கூடியவன் இல்லை. கொஞ்ச நாளா அவனோட மனநிலை பாதிக்கப்பட்டிருந்தது உண்மை. அதுக்கப்புறம் அவனுக்கு ட்ரீட்மெண்ட் குடுத்து சரி பண்ணிட்டேன்…"

எழில் வரதன் வீட்டை நோட்டமிட்டுக் கொண்டே பேசினார். “உங்க பையனோட நடவடிக்கைகளைப் பார்க்கும்போது அவன் குணமானவன் மாதிரி தெரியலையே! கண்ணை மூடிக் கண் திறக்கிறதுக்குள்ள ஒருத்தரைக் கத்தியால் குத்திட்டு மாயமாய் மறைஞ்சுட்டான். டி.வி. ஸ்டேஷனுக்குள்ளே இருந்த காரோட கதவைத் திறந்து உள்ளே போய் ஒளிஞ்சிருக்கான்.

“காரை ஓட்டின அமிர்தவர்ஷிணி என்கிற உளவியல் பேராசிரியரைக் கத்தி முனையில் மிரட்டியிருக்கான். அந்த அம்மாள் நைச்சியமாய் பேசி ஒரு ரூமுக்குள்ளே அடைச்சு வெச்சுப் பூட்டியும் வெண்டிலேட்டர் வழியே தப்பிச்சுப் போயிருக்கான். ஒரு சாதாரண நபர் இது மாதிரியான வேலைகளையெல்லாம் பண்ண முடியாது.”

அந்த அம்மாவின் கண்களில் இப்போது நீர். "அய்யா! நீங்க சொல்றதைக் கேட்கும்போது எனக்கே பயமாயிருக்கு. அவன் அப்படியெல்லாம் பண்ணக் கூடியவன் இல்லை."

"சரி! இப்ப ராகுலன் எங்கே?"

“எனக்குத் தெரியாதுங்கய்யா. ஆனா எப்படியும் ராத்திரி பத்து மணிக்குள்ளே வந்துடுவான்.”

"இன்னிக்கு வரமாட்டான்!” - எழில் வரதன் சொல்லிக் கொண்டே பக்கத்து அறைக்குள் நுழைந்தார்.

அறையின் வலது பக்கச் சுவரில் நான்கு போட்டோக்கள் ஆயில் பெயிண்ட்டோடு தெரிந்தன. ஏதோ மன்னர்களைப் போன்ற உடையலங்காரம். முறுக்கிய மீசைகளோடு தலையில் டர்பன் அணிந்து நேர்பார்வை பார்க்கும் ஆண்களின் முகங்கள்.

"இந்தப் போட்டோவில் இருக்கிறவங்க யாரு?"

"அய்யா! ராகுலனோட அப்பா மன்னர் பரம்பரையைச் சேர்ந்தவர். இது எல்லாமே அவங்க மூதாதையர்களோட போட்டோக்கள். ராஜமார்த்தாண்ட பரம்பரை. எல்லோரும் பேருக்கு முன்னாடி ராஜமார்த்தாண்டன்னு போட்டுக்குவாங்க. ராகுலனோட பேர் கூட ராஜமார்த்தாண்ட குலசேகரன்.”

“மன்னர் பரம்பரைன்னு சொல்றீங்க... ஆனா அதுக்கான அறிகுறிகளோ அம்சங்களோ இந்த வீட்டுல இருக்கிற மாதிரி தெரியலையே..."

அந்த அம்பாள் பேசாமல் இருக்க... எழில் வரதன் கேட்டார். “இந்த

வீட்ல வேற யாரெல்லாம் இருக்கீங்க?"

“யாரும் இல்லீங்கய்யா! நானும் ராகுலனும் மட்டும்தான்.”

"ராகுலனோட ரூம் எது?”

“இதுதான்...!” - வீட்டின் பின்புறம் இருந்த ஒரு அறையைக் காட்டினாள்.

எழில் வரதன் அந்த அறைக்குள் நுழைந்தார்.

சுவர் ஆணிகளில் இரண்டு போட்டோக்கள் தொங்கின.

ஒன்றில் பில்கேட்ஸ். இன்னொன்றில் ராகுலன்.

பில்கேட்ஸ் போட்டோவுக்குக் கீழே...

‘இன்று நீ!’ என்ற வாசகமும் ராகுலனின் போட்டோவுக்குக் கீழே ‘நாளை நான்!’ என்ற வாசகமும் தெரிந்தது.

மேஜையின் இழுப்பறையைத் திறந்தார்.

ஒரு தடிமனான ஆங்கிலப் புத்தகம் தங்க நிற எழுத்துக்களில் தன்னுடைய தலைப்பைச் சொன்னது.

‘யூ கேன் டிட்டர்மைன் த பீப்பிள்!’

எழில் வரதன் அந்தப் புத்தகத்தை எடுத்து அதன் முதல் பக்கத்தைப் புரட்டினார். முதல் பக்கத்திலேயே கிறுக்கலான தமிழ் எழுத்துக்கள் வார்த்தைகளாக மாறி வரிகளை உருவாக்கியிருந்தது. பார்வைக்கு உன்னிப்பைக் கொடுத்துப் படித்தார்.

இது புத்தகம் அல்ல.

சாவி. காகிதத்தால் ஆன சாவி.

பூட்டிக் கிடக்கும் சில மனித உள்ளங்களைத்

திறக்கவல்ல - சதையால் செய்த

ஒரு திறவுகோல்.

நான் இந்தப் புத்தகத்தை முதல் முறை படித்தபோது

கொஞ்சம் புரிவது போல் இருந்தது.

இரண்டாவது தடவை படித்தபோது

எதுவுமே புரியவில்லை.

ஆனால் -

மூன்றாவது தடவை படித்தபோதுதான்

எனக்கு

எல்லாமே புரிந்தது.

இன்ஸ்பெக்டர் எழில் வரதன் அந்தப் புத்தகத்தை எடுத்துப் பத்திரப்படுத்திக் கொண்டார். பிறகு அந்தப் பெண்ணிடம் திரும்பினார்.

"இதோ பாருங்கம்மா! மனநலம் பாதிக்கப்பட்ட உங்க பையனுக்கு இன்னும் முழுசாக் குணமாகலை. தான் ஒரு பெரிய பில்கேட்ஸ் ஆகணும் என்கிற எண்ணம் தோல்வியில் முடிஞ்சதால ஏற்பட்ட விரக்தி அவனை ஒரு கொலை வெறியனாய் மாத்தியிருக்கு. அவனை வெளியே நடமாட விட்டா பல பேரோட மரணத்துக்குக் காரணமாயிடுவான். அவன் எப்படியும் உங்களைப் பார்க்க வீட்டுக்கு வருவான். வந்தா உடனடியாய் போலீஸுக்கு இன்ஃபார்ம் பண்ணனும்...”

அந்த அம்மாள் கண்ணீரோடு தலையாட்டினாள்.

***

# 14.

அரிய மருத்துவக் கண்டுபிடிப்புகள்: நான்கு ஆண்டுகளுக்கு முன் அமெரிக்காவில் உயிரியல் விஞ்ஞானத்தில் கைமரா என்ற வார்த்தை பிரபலமாய் இருந்தது. கைமரா என்ற வார்த்தைக்கு கலப்பு உயிரினம் என்று பெயர். நம் உடம்பில் உள்ள ரத்தத்துக்குக் காரணமான அடிப்படை செல்லையோ, அல்லது மூளையின் ஒட்டுமொத்த இயக்கத்துக்குக் காரணமான நரம்பு செல்லையோ அல்லது கல்லீரல், கணையம், மண்ணீரல் போன்ற முக்கியமான உறுப்புகளின் அடிப்படை செல்லையோ, எடுத்து எலி, பன்றி, குரங்கு போன்ற மிருகங்களின் செல்களில் வைத்து மனிதனும், மிருகமும் கலந்த ஒரு கலப்பு இனத்தை உருவாக்கும் முறைக்குப் பெயர்தான் கைமரா. மற்ற மிருகங்களைக் காட்டிலும், இந்த ஆராய்ச்சிக்குக் குரங்கு ஒன்றுதான் பொருத்தமானதாக இருக்கும் என்று விஞ்ஞானிகள் முடிவு செய்தார்கள்.

போலீஸ் கமிஷனர் பாலகோபால் தனக்கு முன்பாய் உட்கார்ந்திருந்த போலீஸ் அதிகாரிகளைப் பார்த்து கோபமும் அதிர்ச்சியும் கலந்த குரலில் பேசிக் கொண்டிருந்தார்.

"சம்பவம் நடந்து ஒரு வார காலமாகியும் அந்த ராகுலனை நம்ம போலீஸ் படையால ட்ரேஸ் பண்ண முடியலை. அவன் விபரீத மென்ட்டல் பேர்வழி. எந்த நேரத்துல என்ன பண்ணுவான்... எதைப் பண்ணுவான்னு நம்மால கெஸ் பண்ண முடியலை. இந்த விஷயத்தில் நாம மேற்கொண்டு எடுக்க வேண்டிய நடவடிக்கைகளைப் பற்றிப் பேசத்தான் இந்த முக்கியமான கூட்டத்தைக் கூட்டியிருக்கேன். என்ன செய்யலாம் சொல்லுங்க..."

மற்ற அதிகாரிகள் மௌனமாய் இருக்க... இன்ஸ்பெக்டர் எழில் வரதன் தனக்கு முன்னால் இருந்த மைக்கைச் சரிப்படுத்திக் கொண்டு பேச ஆரம்பித்தார்.

“ஸார்! ராகுலன் தன்னோட அம்மாவைத் தேடி வீட்டுக்கு வரலை. வீட்டுக்கு வந்தா போலீஸ் பிடிச்சுடுவாங்கன்னு ஏதோ ஒரு இடத்துல அவன் பதுங்கியிருக்கணும். அவனால ரொம்ப நாளைக்குப் பதுங்கியிருக்க முடியாது. ஏன்னா அவனோட மனசுக்குள்ளே இருக்கிற கொலைவெறி அவனைச் சும்மா இருக்க விடாது. செல்போன்ல அவன் 'சேவ்’ பண்ணி வெச்சிருக்கிற போட்டோக்களில் இருக்கிற நபர்களைத் தேடி வெளியே வருவான்."

"ராகுலன் மொத்தம் பதினோரு பேரைத் தன் செல்போனில்

போட்டோ எடுத்து அதில் முதல் நபராய் ஹரிஹரசுதனைக் கொலை பண்ணியிருக்கான். கொலை செய்யப்பட்ட ஹரிஹரசுதன் அவ்வளவு நல்லவர் கிடையாது. திரைமறைவில் அவர் ஒரு பெரிய பணக்கார தாதா. பினாமி பேர்ல சாராயக்கடைகள், பியூட்டி பார்லர் போர்வையில் விபசார விடுதிகள், ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் கட்டப்பஞ்சாயத்து நடத்தி... அதுக்குக் கூலியாய் பல லட்சங்களை வாங்குகிற ஒரு ரௌடியாய் வாழ்ந்திருக்கார். உச்சபட்சமாய் கோவிலுக்குச் சொந்தமான நிலத்தில் ஒரு இஞ்ஜீனியரிங் காலேஜைக் கட்டி அந்த நிலத்தையும் அபகரிக்கத் திட்டம் போட்டிருந்தார்.

"ராகுலன் ஒரு கிராமத்துப் பெரியவர் மாதிரி தன்னை உருமாற்றம் பண்ணிக்கிட்டு போய் நிமிஷ நேரத்துல தீர்த்துக் கட்டியிருக்கான். ஹரிஹரசுதனோட மனைவி தங்கம் காப்பி போட்டு எடுத்துட்டு வர்றதுக்குள்ளே ராகுலன் அந்த இடத்தை விட்டுப் போயிருக்கான்..." - கமிஷனர் சொல்ல... அதிகாரிகளில் ஒருவர் இடைமறித்துக் கேட்டார்.

"கத்தியால் குத்தப்பட்டபோது ஹரிஹரசுதன் கண்டிப்பாய் அலறியிருக்கணும். அப்படி அலறியிருந்தா அந்தச் சப்தம் நிச்சயமாய் அவரோட மனைவி தங்கத்துக்குக் கேட்டிருக்கணும். ஏன் கேட்கலை?"

“ஹரிஹரசுதன் கத்தியால் குத்தப்பட்டபோது அவர் அலறியிருக்க முடியாது. காரணம் ராகுலன் தன் கையில் மறைவாய் வெச்சிருந்த மயக்க மருந்து ஸ்பிரேயரை அவர் மேல் பிரயோகம் பண்ணி, அவர் மயங்கி விழுந்ததும் கத்தியால் குத்தியிருக்கான். இதை டாக்டர்ஸ் போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட்ல மென்ஷன் பண்ணியிருக்காங்க.

"ஹரிஹரசுதன் கத்தியால் குத்தப்பட்ட சம்பவம் போலவேதான் நீலவண்ணக் கண்ணன் விஷயத்திலும் நடந்திருக்கு. அவர் மேலயும் முதல்ல மயக்க மருந்தை ஸ்பிரே பண்ணி அவர் மயங்கி விழுந்ததும் முதுகில் குத்தியிருக்கான். நல்லவேளையாய் விலா எலும்புகளுக்கு நடுவில் பாய்ந்த கத்தி இருதயம் இருக்கிற வரைக்கும் போகலை. அதனால நீலவண்ணக் கண்ணன் உயிருக்கு ஆபத்து ஏற்படலை. அவர் கண் விழித்து வாக்குமூலம் கொடுத்தபோது, அரங்கில் விளக்குகள் அணைந்த சமயம் பக்கத்தில் யாரோ வந்துநின்று முகத்தில் எதையோ பீய்ச்சி அடித்த மாதிரி இருந்ததுன்னும், அதுக்கப்புறம் தனக்கு எதுவும் நினைவில்லைன்னும் சொல்லியிருக்கார்.”

“ஸார்! எனக்கு ஒரு சந்தேகம்...”

“ப்ளீஸ்...”

"ராகுலனால் கொலை செய்யப்பட்ட ஹரிஹரசுதன் நல்லவர் இல்லை. அவர் ஒரு ரௌடி என்கிற விஷயம்தான் கொலைக்குரிய மோட்டிவேஷனாய் இருந்தால்... நீலவண்ணக் கண்ணன் விஷயத்தில் எது ஸார் மோட்டிவ்?"

"அதே விஷயம்தான். பட்... இது வேற மாதிரியான விவகாரம். நீலவண்ணக் கண்ணன் பெண்கள் விஷயத்தில் நிரம்பவே மோசமானவர். நான்கைந்து பெண்களைக் காதலிச்சுக் கட்டில் வரைக்கும் போயிட்டு... அதுக்கப்புறம் கைவிட்டிருக்கார். இது சம்பந்தமாய் அவர் சொந்த ஊரான சிதம்பரத்தில் ஒரு வழக்கு நிலுவையில் இருக்கு."

“யாருக்கும் தெரியாத இந்த அந்தரங்கச் செய்தியெல்லாம் ராகுலனுக்கு மட்டும் எப்படித் தெரியது ஸார்?"

"ராகுலன், மேடம் அமிர்தவர்ஷிணியிடம் பேசும் போது ஒரு விஷயத்தைத் தெளிவுபட சொல்லியிருக்கான். அதாவது, 'எனக்கு யாரைப் பார்த்தாலும் கோபம் வருது. சிலரை அடிக்கணும் போல் தோணுது. சிலரைப் பார்த்த உடனேயே குத்திக் கொல்லணும் போல் தோணுது.’ இதில் அவன் கொல்ல நினைக்கிற நபர்கள் மோசமான நபர்களாய் இருக்கிறதுதான் ஆச்சர்யம்... கொலை செய்யப்பட்ட ஹரிஹரசுதன் ஒரு பணக்கார தாதா. சட்டவிரோதப் பேர்வழி. கத்தியால் குத்தப்பட்ட நீலவண்ணக் கண்ணன் ஒரு வுமனைஸர்.

"இதை வெச்சுப் பார்க்கும்போது அவன் ஒரு நபரைப் பார்த்த உடனேயே கொலை செய்யணும்போல் அவனுக்குத் தோணினால் அந்த நபர்கள் மோசமான நபர்களாய் - சட்டத்துக்குப் புறம்பான செயல்களைச் செய்பவர்களாய்த்தான் இருக்கணும் என்கிற முடிவுக்கு நாம வரவேண்டியிருக்கு."

"அப்படின்னா... ராகுலன் தன் செல்போனில் தனக்குப் பிடிக்காத சில நபர்களைப் போட்டோ எடுத்து வெச்சிருக்கான். மொத்தம் பதினோரு பேர். அந்த பதினோரு பேரில் ஹரிஹரசுதன் இப்போ உயிரோடு இல்லை. மீதி இருக்கிற பத்து பேர் சட்டத்துக்குப் புறம்பானவர்களா?”

"இருக்கலாம்... அந்தப் பத்து பேர்ல ஒன்பது பேரோட போட்டோக்கள் தெளிவாய் இருக்கு. பட் ஒரே ஒரு நபரின் போட்டோ மட்டும் கலங்கலாய் - உருவம் பிடிபடாம இருக்கு. ஆனாலும் இவங்க எல்லாம் யாரு...? சென்னையைச் சேர்ந்தவங்களா... இல்ல... வேற ஊர்களைச் சேர்ந்தவங்களான்னு தெரியலை. அதைக் கண்டுபிடிக்கிற பொறுப்பை க்யூ பிராஞ்ச் க்ரைம் அக்கரன்ஸ் டிபார்ட்மெண்ட்டுக்குக் கொடுத்திருக்கேன். இன்னும் ரெண்டு நாளில் ரிப்போர்ட் வந்துடும்.”

“அந்த ரிப்போர்ட்டிலேயும் யார் அவங்கன்னு தெரியாத பட்சத்தில் நாம என்ன செய்யப் போறோம் ஸார்?”

"உடனடியாய் அந்தப் பத்து பேரோட போட்டோக்களை எல்லாப் பேப்பர்லேயும் கொடுத்துப் பிரசுரிக்கச் சொல்லப் போறோம். போட்டோவில் இருக்கிற நபர்கள் உடனடியாய் போலீஸைத் தொடர்பு கொள்ளாத பட்சத்தில் அவங்க உயிருக்கு ஆபத்துன்னு எச்சரிக்கை செய்யப் போறோம்."

“ஸார்...! அதுக்குள்ளே ஏதாவது அசம்பாவிதம் நடந்துட்டா என்ன பண்றது?”

“உங்க பயம் எனக்குப் புரியுது... இருந்தாலும் எனக்கொரு நம்பிக்கை. ராகுலனுக்கும் போலீஸ்ல பிடிபட்டுடுவோம் என்கிற ஒரு பயம் இருக்கும். அதனால தான் பதுங்கியிருக்கிற இடத்திலிருந்து அவ்வளவு சீக்கிரத்துல வெளியே வந்துட மாட்டான். இந்தக் கால அவகாசத்துக்குள்ளே நாம அவனை மடக்கிடலாம்."

“ஸார்!" என்று இடைமறித்தார் இன்ஸ்பெக்டர் எழில் வரதன். அவர் கையில் ஒரு புத்தகம்.

"சொல்லுங்க!”

“ஸார்! ராகுலனோட வீட்டில் அவனோட அறை மேஜைக்குள்ளே இந்தப் புத்தகம் இருந்தது. புத்தகத்தோட தலைப்பு: "யூ கேன் டிட்டர்மைன் த பீப்பிள்’. அந்தப் புத்தகம் ஒரு உளவியல் துறை சம்பந்தப்பட்ட புத்தகம். இந்தப் புத்தகத்தோட முதல் பக்கத்தில் ராகுலன் எழுதிய சில வரிகள் என்னைப் படிக்கத் தூண்டியது. நானும் எனக்குக் கிடைச்ச ஓய்வு நேரத்தில் இந்தப் புத்தகத்தைப் படிச்சேன். மனிதர்களில் யார் நல்லவர்கள்... யார் கெட்டவர்கள் என்கிற கேள்விகளுக்கு விடை சொல்லியது இந்தப் புத்தகம்.

“நல்ல காரியங்கள் செய்த ஒரு மனிதனின் கண்கள் எப்படி இருக்கும்? சட்டத்துக்குப் புறம்பான காரியங்களைச் செய்கின்ற ஒரு நபரின் கண்கள் எப்படி இருக்கும்? காது, உதடு, மூக்கு, தாடை போன்ற உறுப்புகள் எப்படி இருந்தால் ஒரு மனிதன் நல்லவன்... எப்படியிருந்தால் அவன் கெட்டவன் என்பதை உதாரணங்களோடு சொல்கிறது இந்தப் புத்தகம்.”

“அதாவது - தமிழில் இருக்கிற சாமுத்ரிகா லட்சணம் மாதிரி...”

"ஆனாலும் அதைக் காட்டிலும் விஞ்ஞானபூர்வமாய் எழுதப்பட்ட

புத்தகம் ஸார். எனக்குப் பல இடங்கள் புரியலை, ஒரு உளவியல் பேராசிரியர்கிட்ட இந்தப் புத்தகத்தைக் கொடுத்துப் படிக்கச் சொல்லணும். ரிப்போர்ட் வாங்கணும்."

“யூ டு ஒன் திங்க்! மேடம் அமிர்தவர்ஷிணியைப் போய்ப் பாருங்களேன். ஷி இஸ் த ரைட் பர்ஸன் டு ரீட் திஸ் புக். நான் வேணும்ன்னா அவங்களுக்குப் போன் பண்ணிச் சொல்றேன். நீங்க உடனடியாய் போய்ப் பாருங்க. ஷீ வில் ஹெல்ப் யூ...”

தன்னுடைய செல்போனை எடுத்து எண்களைத் தட்டினார் கமிஷனர்.

***

# 15.

கைமரா என்ற ஆராய்ச்சிக்கு ஆராய்ச்சியாளர்கள் குரங்கைத் தேர்ந்தெடுத்ததற்குக் காரணம் குரங்கும் மனிதனும் ஏறக்குறைய ஒரே மாதிரியான அமைப்பில் இருப்பதுதான். மனிதனுக்கும் குரங்குக்கும் உள்ள ஒரே ஒரு பெரிய வித்தியாசம் மூளையில் உள்ள செல்கள் மட்டுமே. மனிதனின் மூளை ஒரு சூப்பர் கம்ப்யூட்டர் போல் செயல்படுவதற்குக் காரணம் - மூளையில் உள்ள ஸ்டெம்செல்கள்தான். இந்த ஸ்டெம்செல்கள்தான் மனிதனையும் குரங்கையும் வேறுபடுத்திக் காட்டுகின்றன. மனிதனின் மூளை, எதையும் பகுத்துப் பார்க்கும் திறன் கொண்டது. லஞ்சம் வாங்குவது, பொய் பேசுவது, காதலித்து ஏமாற்றுவது போன்ற வேலைகள் எல்லாம் இதனால்தான். குரங்கும் மனிதனைப் போலவே பொய் பேசவும், லஞ்சம் வாங்கவும், காதலித்து ஏமாற்றவும் வேண்டுமானால் மனிதனின் மூளையில் உள்ள ஸ்டெம்செல்களை எடுத்துக் குரங்கு மூளையில் வைத்து அதை டிஷ்யூ கல்ச்சர் செய்தால் போதும். இது ஒரு விபரீத ஆராய்ச்சி என்று உயிரியல் வல்லுநர்களிடையே எதிர்ப்புக் கிளம்பியதால் இதற்கு நோபல் பரிசு மறுக்கப்பட்டது.

இன்ஸ்பெக்டர் எழில் வரதன் நீட்டிய அந்தப் புத்தகத்தைப் பார்த்துவிட்டு அமிர்தவர்ஷிணி ஒரு சின்னப் புன்முறுவலோடு சொன்னாள்.

"இந்தப் புத்தகத்தை நானும் படிச்சிருக்கேன். அமெரிக்காவின் உளவியல் பேராசிரியர் ரஸ்ஸல் எழுதிய அற்புதமான புத்தகம் இது. மனநோயாளிகளைப் பற்றியும் அவர்களுடைய பிரச்சனைகளைப் பற்றியும் ரஸ்ஸல் நிறையப் புத்தகங்கள் எழுதியிருக்கார். ஹி இஸ் த ஜெம் ஆஃப் திஸ் ஃபோர்ட்போலியோ!”

"ராகுலன் இந்தப் புத்தகத்தைப் படிச்சுட்டுத்தான் ஒரு சைக்கோவாய் மாறியிருக்கலாம்னு நான் நினைக்கிறேன். என்னோட கெஸ் ஒர்க் சரியா தப்பா... மேடம்?"

"நோ... யூ ஆர் அப்ஸொல்யூட்லி ராங் மிஸ்டர் இன்ஸ்பெக்டர்! உங்களுக்கு ஒரு அடிப்படையான உண்மையைச் சொல்லட்டுமா? சைக்கோக்கள் உருவாவதில்லை. அவர்கள் பிறக்கிறார்கள்...!”

"நீங்க சொல்றது எனக்குப் புரியலை மேடம்!”

“புரியும்படியாவே சொல்றேன்... ஒரு மனிதன் சைக்கோவாய்

இருப்பதற்குக் காரணம் அவனுடைய மூளை ஒரு சாதாரண மனிதனின் மூளையைக் காட்டிலும் வித்தியாசமான முறையில் இருப்பதுதான். ஒரு மனித உடலின் தலைமைச் செயலகம் மூளைதான் என்கிற விஷயம் ஒரு பாமரனுக்குக்கூட தெரிந்ததுதான்.

"இயல்பாய் இருக்கிற ஒரு மனிதனின் மூளையில் அன்பு, பாசம், இரக்கம், பயம், பச்சாதாபம் என்கிற எல்லா உணர்ச்சிகளும் இருக்கும். ஆனால் ஒரு சைக்கோவின் மூளையில் இந்த உணர்வுகள் எல்லாம் இருக்காது. அதாவது அந்த உணர்வுகளை உற்பத்தி செய்யக்கூடிய ந்யூரான்கள் மூளையின் அந்தப் பாகத்தில் செயல் இழந்து போயிருக்கும். பொதுவாய் இவர்களின் மூளையின் வடிவமே மாறியிருக்கும். கொஞ்சம் கூட பயம் இல்லாம... பதட்டம் இல்லாம கொலைகளையும், சமூக விரோதச் செயல்களையும் குற்ற உணர்வு கொஞ்சமும் இல்லாம செஞ்சு முடிப்பாங்க சைக்கோக்கள்..."

"பட்... மேடம்!"

"சொல்லுங்க..."

"ராகுலன் விஷயத்தை எடுத்துக்கிட்டா அது வேற மாதிரியிருக்கே! அவன் சிலரைப் பார்த்த மாத்திரத்திலேயே 'இவன் கெட்டவன்; இவன் நல்லவன்'னு புரிஞ்சுகிட்டு கெட்டவனாய் இருந்தா அவனைக் கொல்லணும் என்கிற முடிவுக்கு வர்றானே அது எப்படி? ராகுலனால் கொலை செய்யப்பட்ட ஹரிஹரசுதன் ஒரு மோசமான பேர்வழி. அதே மாதிரி கத்தியால் குத்தப்பட்டு அதிர்ஷ்டவசமாய் உயிர் பிழைச்சுக்கிட்ட நீலவண்ணக் கண்ணன் ஒரு வுமனைஸர். ஒரு சைக்கோவுக்கு இப்படிப் பகுத்தறிவது சாத்தியமா?"

"சாத்தியமில்லைதான்! ஆனாலும் ஒரு சைக்கோவின் மூளை வேலைப்பாடுகள் எந்த நேரத்தில் எப்படி இருக்கும்னு யாராலும் சொல்ல முடியாது. இது குறித்த ஆராய்ச்சிகள் இன்னமும் சிக்கலிலேயே இருக்கு... ராகுலன் மனநோயாளியாய் இருந்தபோது அவனுக்கு ட்ரீட்மெண்ட் கொடுத்த சைக்யாட்ரிஸ்ட் யாருன்னு தெரியுமா இன்ஸ்பெக்டர்?"

"தெரியும்... அவர் பேரு அருண் தயாள். ஓல்ட் மகாபலிபுரம் ரோட்டில் பங்களா!"

"நீங்க அவர்கிட்ட பேசிப் பார்த்தாத்தான்... ராகுலனோட கேஸ் ஹிஸ்டரியைப் பத்தி முழுமையாய் தெரிஞ்சுக்க முடியும். என்னைப் பொறுத்தவரைக்கும் ராகுலன் ஒரு அபாயகரமான நோயாளி கிடையாது. அவனுக்கு முறையான கவுன்ஸிலிங் கொடுத்தாலே

போதும். மூணே மாசத்துல நார்மலான நிலைமைக்கு வந்துடுவான்."

“ஓ.கே. மேடம்! நான் டாக்டர் அருண் தயாள்கிட்ட பேசி ஒரு அப்பாயின்ட்மெண்ட்டை வாங்கிட்டுப் போய் பார்த்துட்டு வந்துடறேன்."

"ப்ளீஸ்...”

***

# 16.

**‘ஆசியாவின் நோபல் பரிசு’ என்று செல்லமாய் அழைக்கப்படும் பரிசு எது என்று கேட்டால்... பெரும்பாலானோர் ‘தெரியாது’ என்றுதான் சொல்வார்கள். அதுதான் 'மகசேசே' விருது. பிலிப்பைன்ஸ் நாட்டின் மறைந்த அதிபர் ரமோன் மகசேசே பெயரில் நிறுவப்பட்டுள்ள இந்த விருது 1957-ஆம் ஆண்டு முதல் கீழ்க்கண்ட தகுதி உள்ளவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. 1) பொதுத் தொண்டு. 2) அரசுப் பணியில் இருந்து கொண்டே சேவை செய்தல். 3) சமுதாயப் பணிகளுக்கு முன்னுரிமை கொடுப்பது. 4) பத்திரிகைத் துறை மற்றும் இசை, தகவல் தொடர்பு கலைகளில் சிறந்து விளங்குதல். 5) சமாதானம் மற்றும் சர்வதேச ஒற்றுமை. 6) சிறந்த தலைமைப் பண்பு கொண்டவர்கள். ஒவ்வொரு வருடமும் பிலிப்பைன்ஸ் நாட்டின் தலைநகர் மணிலாவில் இந்த மகசேசே விருது வழங்கும் விழா நடைபெறும்.**

காலை ஆறு மணி.

டாக்டர் அருண் தயாள் வாக்கிங் புறப்பட்டுப் போக கான்வாஷ் ஷூக்களைத் தரித்துக் கொண்டிருந்தபோது வாசலில் அழைப்பு மணி ஒலித்தது.

அவருடைய மனைவி ஷ்யாமா வாசல் வரை போய்ப் பார்த்து விட்டு சற்றே பதட்டத்தோடு திரும்பி வந்தாள். "உங்களைப் பார்க்க இன்ஸ்பெக்டர் ஒருத்தர் வந்திருக்கார்."

அறுபது வயதான அருண் தயாளின் முகத்தில் லேசான பதட்டத்தோடு கூடிய வியப்பு.

“இன்ஸ்பெக்டரா?”

"ஆமா."

“என்ன விஷயம்ன்னு கேட்டியா?”

“கேட்டேன்...! உங்ககிட்ட ட்ரீட்மெண்ட் எடுத்துக்கிட்ட ஒரு பேஷண்ட்டைப் பத்தி விசாரிக்கணுமாம்.”

அருண் தயாள் சலித்துக் கொண்டார். “அந்த ராகுலன் விவகாரமாய்த்தான் இருக்கும். வரச் சொல்லு!" - மனைவி ஷ்யாமா மறுபடியும் வாசலுக்குப் போக... அடுத்த நிமிஷம் யூனிஃபார்மைத் தவிர்த்து விட்டு வெள்ளை பேண்ட், வெள்ளை சர்ட்டில் உள்ளே

வந்தார் இன்ஸ்பெக்டர் எழில் வரதன்.

"குட் மார்னிங் டாக்டர்!”

"குட் மார்னிங்." “ஸாரி ஃபார் த டிஸ்டர்பன்ஸ் டாக்டர்... உங்களை

இந்தக் காலை
நேரத்துல வந்து தொந்தரவு பண்றேன்..."

"நோ ப்ராப்ளம்!"

"அயாம் எழில் வரதன். இன்ஸ்பெக்டர் ஆஃப் போலீஸ். ராகுலன் சம்பந்தப்பட்ட கேஸை நான்தான் டீல் பண்ணிட்டு வர்றேன். நேத்துப் பூராவும் உங்க போனை நான் ட்ரை பண்ணினேன். உங்க போன் ஸ்விட்ச் ஆஃப் செய்யப்பட்டு இருந்தது. உங்க ஹாஸ்பிடலுக்குப் போன் பண்ணி விபரம் கேட்டபோது நீங்க ஏதோ ஒரு ப்ராஜக்ட் சம்பந்தப்பட்ட விவகாரத்தில் முழுமூச்சாய் இருக்கிறதாகவும்... இன்னிக்கு மத்தியானம் மூணு மணிக்கு டெல்லிக்குப் புறப்பட்டுப் போக இருப்பதாகவும் தகவல் சொன்னாங்க. அதான் உங்களைப் பார்த்துப் பேச நேர்லயே வந்துட்டேன். ஒரு பத்து நிமிஷம் உங்களோடு பேசலாமா?”

“இஃப் யூ டோண்ட் மைண்ட்... இது என்னோட வாக்கிங் நேரம். நாம ரெண்டு பேரும் வாக்கிங் போய்கிட்டே பேசலாமா?”

“வித் ப்ளஷர்!"

“தேங்க் யூ!" - டாக்டர் அறையின் மூலையில் இருந்த அந்த வாக்கிங் ஸ்டிக்கை எடுத்துக் கொண்டார்.

இருவரும் வெளியே வந்தார்கள்.

போக்குவரத்து அறவே இல்லாத நிசப்தமான பகுதி. காலை நேரக் காற்றில் குளிர் பரவியிருக்க... இருவரும் மெல்ல நடந்தார்கள். எழில் வரதன் பேச்சை ஆரம்பிக்க நினைத்து வாயைத் திறந்த நேரம்... அருண் தயாளின் செல்போன் ரிங் டோனை வெளியிட்டது.

எடுத்து யார் என்று பார்த்து விட்டு முகமலர்ச்சியோடு பேசினார்.

“ஹலோ மிஸ்டர் சர்மா... நானே உங்களுக்குப் போன் பண்ணலாம்ன்னு இருந்தேன். அதுக்குள்ளே நீங்களே பண்ணீட்டிங்க..."

“.............................................................................................................”

"ஆமா... ஆமா... நீங்க கேள்விப்பட்டது உண்மைதான்! நோபல் பரிசு கமிட்டிக்கு நான் போட்டிருந்த விண்ணப்பத்தை பரிசீலனைக்கு எடுத்துக்கிட்டாங்க. என்னோட ஆராய்ச்சி சம்பந்தப்பட்ட எல்லாப் பேப்பர்ஸையும் உடனடியாய் மெயில் பண்ணச் சொல்லிட்டாங்க. அது சம்பந்தமாய் இன்னிக்கு மத்தியானம் டெல்லி போறேன்."

"..................................................................................................................."

"பார்க்கலாம். விருது கிடைக்கும் என்கிற நம்பிக்கை எனக்கு இருக்கு. ஏன்னா... இது ஒரு மாறுபட்ட ஆராய்ச்சி. முன்கூட்டியே வாழ்த்துக்கள் தெரிவித்த உங்களுக்கு என்னோட நன்றி. தேங்க்யூ வெரிமச்! நான் இப்போ ஒரு முக்கியமான மீட்டிங்கில் இருக்கேன். அப்புறமா நானே கூப்பிடறேன் மிஸ்டர் சர்மா. நிறையப் பேசுவோம்!" - மகிழ்ச்சியோடு அருண் தயாள் செல்போனில் பேசிவிட்டு எழில் வரதனிடம் திரும்பினார். "ஸாரி இன்ஸ்பெக்டர்! நாம பேச ஆரம்பிச்சோம். அதுக்குள்ளே ஒரு போன்?"

"நோ ப்ராப்ளம் ஸார்! பை த பை... நீங்க ஏதோ நோபல் பரிசுக்கு அப்ளை பண்ணியிருக்கிறதாய் பேசிக்கிட்டீங்க. நான் அதைப்பத்தித் தெரிஞ்சுக்கலாமா?"

"தாராளமா! இந்த வருஷம் இந்தியாவின் சார்பாய் உளவியல் துறையில் நான் கண்டுபிடித்த சிகிச்சை முறையை அடிப்படையாய் வெச்சு ஒரு ப்ராஜக்ட் பண்ணியிருந்தேன். அதை சப்மிட் பண்ணலாமான்னு கேட்டு நோபல் பரிசு கமிட்டிக்கு அப்ளை பண்ணியிருந்தேன். அதுக்குப் பரிசு கமிட்டி பர்மிஷன் கொடுத்திருக்காங்க..."

"கங்கிராட்ஸ் ஸார்... நீங்க நோபல் பரிசு பெற போலீஸ் டிபார்ட்மெண்ட் சார்பாய் வாழ்த்துக்கள்!"

"தேங்க் யூ..."

இருவரும் ரோட்டோரமாய் மெல்ல நடந்தார்கள். சாலையில் அறவே ஆள் நடமாட்டம் இல்லை.

"ம்... கேளுங்க இன்ஸ்பெக்டர்! ராகுலனுக்கு நான்தான் ட்ரீட்மெண்ட் கொடுத்தேன். ஹாஸ்பிடலை விட்டு அவன் டிஸ்சார்ஜ் ஆகிப் போகும்போது நல்ல மனநிலையில்தான் இருந்தான். அதுக்கப்புறம் அவனுக்கு என்னாச்சுன்னு தெரியலை. பொதுவா மனநோயாளிகளை டாக்டர்ஸ் ரெண்டு பிரிவாய் பிரிப்பாங்க. ஒண்ணு ஹார்ம்லெஸ், ரெண்டாவது டேஞ்சரஸ். இதுல ராகுலன் ஹார்ம்லஸ் வகை. அவன்

மனசுக்குள்ளே ஒருத்தரைக் கொலை செய்யணும் என்கிற எண்ணம் எப்படி வந்ததுன்னு தெரியலை?”

“டாக்டர்! ராகுலன் குணமாறதுக்கு நீங்க எது மாதிரியான ட்ரீட்மெண்ட்டைக் கொடுத்தீங்க?"

“மொதல்ல ராகுலனுக்கு மூளையில் என்ன பிரச்சனைன்னு சொல்லிடறேன். மூளையில் உள்ள முக்கியமான ரெண்டு பகுதிகளில் ஒண்ணு வென்ட்ரோ மெடிக்கல் ப்ரீ ஃப்ரண்டல் கோர்டெக்ஸ் (Ventro Medical Pre Frontal Cortex). இது மனிதனுக்கு உணர்வுகளைத் தருகிற பகுதி. குறிப்பாக இரக்கம், கருணை, குற்றஉணர்வு போன்ற பண்புகள் இந்த இடத்தில்தான் இருக்கும். இன்னொரு பகுதி ஏமிக்டாலா (Amygdala). இந்தப் பகுதிதான் நம்முடைய பயத்துக்கும் பதட்டத்துக்கும் காரணம்.”

“ஒரு காரோ ஒரு பஸ்ஸோ நம்ம மேல மோத வந்தால் ஏற்படற பயத்துக்கு இந்த ஏமிக்டாலா பகுதிதான் காரணம். மூளையின் இந்த ரெண்டு பகுதிகளும் சரியாய் ஒரு மனிதனுக்குள்ளே இயங்கிகிட்டிருந்தா... அந்த மனிதன் எல்லா உணர்வுகளோடும் நார்மலாய் இருப்பான். அதாவது அந்த மனிதனிடம் அன்பு, இரக்கம், கருணை, எது செய்ய வேண்டும்... எது செய்யக்கூடாது என்கிற பாகுபாடு, பொது இடத்தில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்கிற பண்பாடு இதெல்லாம் இருக்கும். அதற்கு மாறாய் இரண்டு பகுதிகளும் சரியாய் இயங்காத பட்சத்தில் உணர்வுகளில் குளறுபடி ஏற்பட்டு எதைச் செய்யக்கூடாதோ அதை அந்த மனிதன் செய்யும்போதுதான் அவனுக்கு மனநோயாளி, சைக்கோ என்ற பெயர் கிடைக்கிறது. ராகுலனுக்கு ஏற்பட்டது இது மாதிரியான பிரச்சனைதான்..."

"நீங்க ட்ரீட்மெண்ட் குடுத்து அவன் குணமாயிட்டதாய் சொன்னீங்க டாக்டர்...! பட் மறுபடியும் அவனுக்கு மென்ட்டல் டிஸ்ஆர்டர் ஏற்பட என்ன காரணம்?”

“குறிப்பிட்ட காரணம் எதுவும் கிடையாது. அவனுடைய மனம் பாதிப்படைகிற மாதிரி ஏதாவது ஒரு சம்பவம் நடந்திருக்கலாம். படித்த ஏதாவது ஒரு புத்தகம் அவனுடைய மூளையை உசுப்பி உணர்வுகளைக் குழப்பியிருக்கலாம். ராகுலனோட மூளையை மறுபடியும் ஸ்கேன் பண்ணிப் பார்த்தால்தான் உண்மை தெரியும். ராகுலன் கிடைச்சா மறுபடியும் அவனை என்கிட்ட கொண்டு வாங்க. நான் ட்ரீட்மெண்ட் கொடுத்து அவனைப் பழைய நிலைமைக்குக் கொண்டு வர்றேன்..."

டாக்டர் அருண் தயாள் பேசப் பேச எழில் வரதனின் செல்போன் இன்கம்மிங் அலர்ட் டோனை எழுப்பியது.

டாக்டரிடம் ஒரு ‘எக்ஸ்கியூஸ் மீ!’ சொல்லிவிட்டு அழைப்பது யார் என்று பார்த்தார். போலீஸ் கமிஷனர் பாலகோபால்.

"குட் மார்னிங் ஸார்!”

"குட் மார்னிங் எழில் வரதன்! இப்ப எங்கே இருக்கீங்க?"

“டாக்டர் அருண் தயாள்கிட்ட பேசிக்கிட்டிருக்கேன் ஸார்! ராகுலன் பத்தின என்கொய்ரி போயிட்டிருக்கு!"

"அவரோட வீட்டுக்குள்ளேதானே?”

“இல்லை ஸார்...”

“பின்னே?”

“வீட்டிலிருந்து வெளியே கிளம்பிக் கிட்டத்தட்ட ஒரு அரை கிலோ மீட்டர் தூரம் நடந்து வந்திருப்போம். ஏன்... ஸார்? என்ன விஷயம்?”

“ஒண்ணுமில்லை. டாக்டர் அருண் தயாள் கொஞ்சம் பாதுகாப்பாய் இருக்க வேண்டியது முக்கியம். சைக்கோ பேர்வழி ராகுலனோட ஹிட் லிஸ்ட்டில் அவரும் இருக்கார்.”

"ராகுலன் தன் செல்போனில் போட்டோ எடுத்த நபர்களில் அருண் தயாள் போட்டோ இல்லையே ஸார்?"

"ராகுலனின் செல்போனில் இருந்த பத்துப் போட்டோக்களில் ஒரு போட்டோ மட்டும் தெளிவில்லாமல் மசமசப்பாய் இருந்ததே... அது டாக்டர் அருண் தயாள் தான். சைபர் கிரைம் ஃபாரன்ஸிக்கில் அந்தப் போட்டோவை மட்டும் பர்ஃபெக்ஷனுக்கு உட்படுத்திப் பார்த்தபோது உருவம் புலப்பட்டு இருக்கு. உளவியல் ஆராய்ச்சி சம்பந்தமாய் அவர் நிறையப் பத்திரிகையாளர்களின் கூட்டத்தில் பேசியிருக்கிறதால போட்டோவைப் பார்த்ததும் ஃபாரன்ஸிக் அதிகாரிகளுக்கு அடையாளம் தெரிஞ்சிருக்கு. உடனே எனக்குப் போன் பண்ணிச் சொன்னாங்க. அதான் உங்களுக்கு உடனடியாய் இன்ஃபார்ம் பண்ணினேன்...”

“இந்த விஷயத்தை நான் டாக்டர் அருண் தயாள்கிட்ட சொல்லலாமா ஸார்?"

“கண்டிப்பாய்ச் சொல்லணும். சொன்னாத்தானே அவரும் தன்னைப்

பாதுகாத்துக் கொள்ளும் முயற்சியில் சில முன்னேற்பாடுகளைச் செய்து கொள்ள முடியும்?"

“இப்ப சொல்லிடறேன் ஸார்!” - பேசிவிட்டுச் செல்போனை அணைத்த எழில் வரதன்... கமிஷனர் சொன்னதை அருண் தயாளிடம் சொல்ல... அவர் தன் புருவங்களை உயர்த்தி ஆச்சரியப்பட்டார்.

“ராகுலனுக்கு நான் ட்ரீட்மெண்ட் கொடுத்த டாக்டர். அவன் என்னை ஏன் கொல்ல நினைக்கணும்?"

“ஒரு மனநோயாளி எப்படி வேணும்ன்னாலும் நடந்து கொள்ளும் விதத்தில்தான் அவனோட மூளையோட அமைப்பு இருக்கும்னு நீங்கதானே சொன்னிங்க டாக்டர்...!"

“ராகுலனுக்கு நான் என்ன கெடுதல் பண்ணினேன்னு எனக்குத் தெரியலை!” - டாக்டர் சொல்லிக் கொண்டிருக்கும்போதே அந்தச் சத்தம் கேட்டது.

'ரொய்ன்ச்க்க்...!’

காற்றை அரைக்கிற மாதிரியான சத்தம்.

ஒரு லேசான திடுக்கிடலோடு இன்ஸ்பெக்டர் எழில் வரதன் திரும்பிப் பார்த்தார். ஆள் நடமாட்டம் அற்ற - போக்குவரத்து அறவே இல்லாத அந்தச் சாலையில் பைக் ஒன்று வேகமாய் வந்து கொண்டிருந்தது.

கறுப்பு நிற ஜெர்கின் கோட், தலையில் ஹெல்மெட் கைகளில் கிளவுஸ் தரித்து பைக்கை ஓட்டி வந்த அந்த உருவம் கண்ணிமைக்கும் நேரத்தில் வலது கையை உயர்த்த... அதன் விரல்களில் துப்பாக்கி ஒன்று முளைத்தது.

டாக்டர் அருண் தயாளைக் குறிபார்த்தது.

ஒரு மைக்ரோ விநாடியில் அந்த விபரீதத்தை உணர்ந்துவிட்ட எழில் வரதன் டாக்டரைப் பிடித்து முழு பலத்தையும் பிரயோகித்து கீழே தள்ளிவிட.... டாக்டர் நிலைகுலைந்து எகிறிப் போய் ஒரு மரத்துக்குப் பின்னால் போய் விழுந்தார். கையில் வைத்திருந்த வாக்கிங் ஸ்டிக் அந்தரத்தில் பறந்தது.

அதே விநாடி - பைக் பேர்வழியிடமிருந்து புறப்பட்ட சைலன்ஸர் தோட்டா ஒரு பாம்பின் சீறலோடு எழில் வரதனுக்குப் பின்னால் பிடரியிலிருந்த ரோமத்தை உரசிக் கொண்டு குப்பை கொட்டும் தொட்டிக்குள் பாய்ந்தது.

பைக் பேர்வழி குறி தவறிவிட்ட கோபத்தில் மறுபடியும் துப்பாக்கியால் குறி பார்க்க... அந்தரத்திலிருந்து கீழே விழுந்து கொண்டிருந்த வாக்கிங் ஸ்டிக்கை கையில் பிடித்தார் எழில் வரதன்.

உலோகப் பூணோடு உறுதியாய் இருந்த அந்த வாக்கிங் ஸ்டிக்கை ஈட்டியாய் பாவித்து அந்த நபரைக் குறி பார்த்து வீசினார். அது காற்றைச் சீய்த்துக் கொண்டு பறந்தது.

“த்தட்...!"

வாக்கிங் ஸ்டிக் ஹெல்மெட்டில் பட்டு பைக்கின் முன்புறம் விழுந்து தன் மீது ஏறிய பைக் சக்கரத்தைத் தன் வழவழப்பான உடம்பால் புரட்டிப் போட்டது. க்றீச்ச்... என்ற சத்தத்தோடு - பைக் கட்டுப்பாட்டை இழந்து சாலையின் டிவைடரில் மோதி பைக்கை ஓட்டி வந்த பேர்வழி சாலையின் ஓரத்தில் போய் விழ... பைக் இன்னொரு பக்கம் போய் ஒருக்களித்து விழுந்தது. பெட்ரோல் ரோட்டில் ஓடியது.

பாய்ந்தார் எழில் வரதன். கீழே வலியோடு முனகியபடி கிடந்த பைக் பேர்வழியை இரண்டே எட்டில் நெருங்கினார்.

பக்கத்தில் குனிந்து -

அந்த நபரின் முகத்தை மூடியிருந்த ஹெல்மெட்டை அகற்றினார்.

அதிர்ந்தார்.

நம்ப முடியாமல் முகத்தைப் பார்த்தார்.

அமிர்தவர்ஷிணி.

***

# 17.

ஆசியாவின் நோபல் பரிசு என்று செல்லமாக அழைக்கப்படும் மகசேசே விருது **1958**ஆம் வருஷம் முதல் **2011** வரை **50**க்கும் மேற்பட்ட இந்தியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது**.** அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்**:** வினோபாபாவே**,** அன்னை தெரசா**,** ஜெயபிரகாஷ் நாராயண்**,** சத்யஜித்ரே**,** எம்**.**எஸ்**.**சுப்புலட்சுமி**,** பண்டிட் ரவிசங்கர்**,** அடையார் கான்சர் இன்ஸ்டிடியூட்டின் தலைமை டாக்டர் வி**.**சாந்தா**.** விருது பெற்றவர்களுக்கு பரிசுத் தொகை **50** ஆயிரம் டாலரும் உண்டு**.** இதன் மதிப்பு கிட்டத்தட்ட **25** லட்சம் ரூபாய்**.**

ஹாஸ்பிடல்.

நெற்றியில் ஒரு பிளாஸ்திரி, இடது முழங்கையில் ஒரு கட்டு, வலது கால் பாதத்தில் ஒரு கனமான கட்டு - இந்த மருத்துவ அலங்காரத்தோடு கட்டிலுக்குச் சாய்ந்து உட்கார்ந்திருந்தாள் அமிர்தவர்ஷிணி.

முகம் பயத்திலும் கவலையிலும் இருண்டு போய் கிடக்க... அவளைச் சுற்றிலும் போலீஸ் அதிகாரிகள்.

ஒரு நாற்காலியை அவள் அருகே இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருக்க... கமிஷனர் பாலகோபால் நிதானமான குரலில் பேசிக் கொண்டிருந்தார்.

"மிஸஸ் அமிர்தவர்ஷிணி! நீங்க உங்க மௌனத்தைக் கலைக்க வேண்டிய நேரம் இது. டாக்டர் அருண் தயாளைக் கொலை செய்யும் அளவுக்கு அவர் மேல உங்களுக்கு என்ன கோபம்?”

அமிர்தவர்ஷிணி தலை குனிந்தபடி உட்கார்ந்திருந்தாள்.

"சொல்லுங்க... என்ன கோபம்?"

அவள் நிமிர்ந்தாள். கண்களில் நீர் பளபளத்தது.

"அவர் மேல எனக்குக் கோபம் இல்லை.”

"பின்னே?"

"பொறாமை."

“எதுக்குப் பொறாமை?”

"உளவியல் துறையில் நோபல் பரிசு பெற நான் என்ன ப்ராஜக்ட்டை எடுத்தேனோ அதையே அவரும் எடுத்துப் பண்ணினார். எனக்கு அதில் கிடைக்காத வெற்றி அவருக்குக் கிடைச்சுது. ப்ராஜக்ட்டை வெற்றிகரமாய் முடிச்சு அவர் விருது கமிட்டிக்கு அனுப்பி வெச்சார். அதை அவங்க பரிசீலனைக்கு ஏத்துக்கிட்டாங்க. அதை என்னால தாங்கிக்க முடியலை. நோபல் பரிசு உயிரோடு இருக்கிறவங்களுக்குத்தான் கொடுப்பாங்க. இறந்துட்டா விருது கிடையாதுன்னு எனக்குத் தெரியும். அதனால அவரைத் தீர்த்துக் கட்ட சரியான தருணத்தை எதிர் பார்த்துட்டிருந்தேன்.

“அந்தச் சமயத்துலதான் நான் ஜூபிடர் டி.வி. நிகழ்ச்சிக்குப் போனேன். ஆனால் நிகழ்ச்சியில் எதிர்பாராத விதமாய் ராகுலன் என்கிற ஒரு மனநோயாளி நிகழ்ச்சி அமைப்பாளர் நீலவண்ணக் கண்ணனைக் கத்தியால் குத்தியதும், அந்த ராகுலன் என்னோட காருக்குள்ளே பதுங்கியிருந்ததும் என்னை அதிர்ச்சியில் ஆழ்த்தியது. என்னிடம் வந்து மாட்டிக் கொண்ட ராகுலனை முதலில் போலீசில் பிடித்துக் கொடுக்கத்தான் நினைச்சிருந்தேன். ஆனா அவனோட செல்போனில் அவன் கொலை செய்ய நினைச்சிருந்த நபர்களின் போட்டோக்களைப் பார்த்ததும் என்னோட திட்டம் மாறியது.

“ராகுலனின் செல்போனில் இருந்த போட்டோக்களில் ஒரு போட்டோவை டெலிட் பண்ணிட்டு அந்த இடத்துக்கு என்னோட செல்போனில் இருந்த அருண் தயாளின் போட்டோவை ப்ளூ டூத் மூலமா பதிவு பண்ணினேன். என்ன காரணத்தினாலோ போட்டோ தெளிவாகப் பதிவாகலை. இருந்தாலும் என்னோட திட்டத்தை செயல்படுத்த விரும்பினேன். ராகுலனுக்கு ந்யூரோ மீல் கொடுத்து மயக்கமானதும்... அவனை என்னோட வீட்டுக்குக் கீழே இருந்த நிலவறை சோதனைக் கூடத்துக்குக் கொண்டு போய் மறைச்சுட்டு... நீங்க வந்து பார்க்கும்போது அவன் வெண்டிலேட்டர் வழியாய் தப்பிச்சுட்டுப் போயிட்டதாய் உங்களையெல்லாம் நம்ப வெச்சேன். கடந்த ஒருவார காலம் ராகுலனை அரை மயக்கத்திலேயே வெச்சிருந்தேன். இனிமேலும் அவனை வெச்சு சமாளிக்க முடியாதுன்னு நினைச்சு டாக்டர் அருண் தயாளைத் தீர்த்துக் கட்டிட்டு... ரெண்டு நாள் கழிச்சு ராகுலனையும் தீர்த்துக் கட்டி... ஏதாவது ஒரு ஒதுக்குப் புறமான இடத்துல கொண்டு போய் போட்டுடலாம்ன்னு நினைச்சேன்.

“அருண் தயாள் தினமும் காலையில் ஆறு மணிக்கெல்லாம் வாக்கிங் போறது எனக்குத் தெரியும். ட்ராஃபிக் இல்லாத... ஆள் நடமாட்டம் இல்லாத அந்த ஏரியாவில் அவரைத் தீர்த்துக் கட்டறது சுலபம்ன்னு நினைச்சு இன்னிக்குப் புறப்பட்டு வந்தேன். எனக்கு காலேஜ்

டேஸ்லயே பைக் ஓட்டிப் பழக்கம் இருக்கு. என் மகன் உபயோகப்படுத்தின பைக் வீட்டுல இருந்தது. அதனோட நம்பர் பிளேட்டை மாத்திக்கிட்டு சைலன்ஸர் ரிவால்வரோடு அஞ்சு மணிக்கெல்லாம் வீட்டை விட்டுப் புறப்பட்டேன். சரியா ஆறு பத்துக்கெல்லாம் ஸ்பாட்டுக்கு வந்தேன்.

“அருண் தயாளோடு இன்ஸ்பெக்டர் எழில் வரதன் இருப்பார்ன்னு நான் கொஞ்சமும் எதிர்பார்க்கலை. இருந்தாலும் ‘வந்தது வந்துட்டோம். நம்மை யாரும் அடையாளம் கண்டு கொள்ள முடியாது’ என்கிற தைரியத்தில் அருண் தயாளைக் குறிவெச்சு சுட்டேன். ஆனா எழில் வரதன் கண்ணிமைக்கிற நேரத்துல டாக்டரையும் காப்பாற்றி வாக்கிங் ஸ்டிக்கால என்னையும் வீழ்த்திட்டார்.”

கமிஷனர் பாலகோபால் புன்னகைத்தார். "உங்க தெளிவான வாக்குமூலத்துக்கு நன்றி. இப்போ ராகுலன் எங்கே?”

“என்னோட வீட்டு நிலவறையில்தான் இருக்கான். அவனோட உயிர்க்கு எந்த ஆபத்தும் இல்லை. அவனுக்கு முறையான ட்ரீட்மெண்ட்டும், கவுன்சிலிங்கும் கொடுத்தா... அவன் ஒரு இயல்பான மனிதனாய் மாற சாத்தியம் அதிகம். டாக்டர் அருண் தயாள் இஸ் த ரைட் பர்ஸன் டு ட்ரீட் ஹிம்!” என்று சொன்ன அமிர்தவர்ஷிணி தன் கண்களைச் சுழற்றிப் பார்வையால் யாரையோ தேடினாள்.

பாலகோபால் கேட்டார். “யாரைத் தேடறீங்க?"

“டாக்டர் அருண் தயாளை...!"

“எதுக்கு?”

"அவர்கிட்ட மன்னிப்புக் கேட்கவும்... அவர் பெறப் போகிற நோபல் பரிசுக்கு முன்கூட்டியே வாழ்த்துச் சொல்லவும்...!”